# அமுத வாசகம்

318

## இரண்டாம் புத்தகம்

(இரண்டாம் பாரத்திற்கு)



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MAY 1951
MADRAS

TB
031(7) N50.
L30253

...தியப் பதிப்புக் கழகம்

...கம்::     ::சென்னை-24

# அமுத வாசகம்

(இரண்டாம் புத்தகம்—இரண்டாம் பாரத்திற்குரியது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 MAY 951
MADRAS

ஆசிரியர் :

**வித்வான் ந. சண்முகம்**

*தமிழாசிரியர்,*
*தொண்டைமண்டலம் உயர்நிலைப்பள்ளி,*
*சென்னை.*

600 008

தென்னிந்தியப் பதிப்புக் கழகம்

*கோடம்பாக்கம் : : சென்னை-24*

பதிப்புரிமை] [விலை அணா 15

முதற்பதிப்பு நவம்பர் 1950.

சென்னை-600 008.

ஞானோதயா பிரஸ், 11, ஆண்டர்சன் தெரு, சென்னை-1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 MAY 1951
MADRAS

# முன்னுரை

**அமுத வாசகம்** என்னும் பெயருடன் வெளிவரும் புத்தக வரிசையில் இது இரண்டாம் பாரத்திற்குரிய இரண்டாம் புத்தகம் ஆகும். அண்மையில் அரசாங்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள பாடஅமைப்புத் திட்டத்தின்படி இப்புத்தகம் அவ்வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற முறையில் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

இப்பொழுது மாணவர்களாயிருப்பவர்கள் எதிர் காலத்தில் பெருமக்களாய் விளங்கி நாட்டிற்கும் மொழிக்கும் நற்றொண்டாற்றும் நல்லறிஞர்களாகத் திகழவேண்டும் என்னும் குறிக்கோளுடன் இப்புத்தகத்தில் தமிழ்ப் பெருமக்கள், கவிஞர்கள் வரலாறுகளும், கூட்டுறவு, நட்பின் சிறப்பு, நாடுகண்டவர் வரலாறு, அணைக்கட்டு முதலியவைகளும், சுதந்திர வீரன் கட்டபொம்மன், தலைவர் நேரு முதலியவர்கள் வரலாறுகளும், கைத்தொழில், கடிதம் முதலானவைகளும் நில நடுக்கம் பற்றிய உரையாடலும், பிறநாட்டு மக்கள் வாழ்க்கை வரலாறும், பிறவும் மாணவர்கள் விரும்பிப் படிக்கும் முறையில் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அருஞ்சொற்பொருள், வினாக்கள், மொழிப் பயிற்சிகள், தேவையான இடங்களில் கட்டுரைப் பயிற்சிகள் முதலியனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

செய்யுட்பகுதியில் நீதிநூல்களும், இயற்கைக் காட்சிப் பாடல்களும், கதைப்பகுதிகளும், முற்காலத் தற்காலப் புலவர் பெருமக்களின் இனிய பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. செய்யுட் பகுதியின் இறுதியில் அரும்பத உரையும் சேர்க்கப்பட்டுள்ளது. இப்புத்தகம், தமிழ் மாணவர்கள் நாட்டுப்பற்று, வீர உணர்ச்சி, ஒற்றுமை, உண்மை, உழைப்பு முதலான நற்குணம் பலவும் பெற்று நல்லோர்களாக வாழ்வதற்கு வழிகாட்டும் முறையில் அமைந்துள்ளது என்பதை அறிஞர்கள் அறிவார்கள் என்பது என் நம்பிக்கை.

இப்புத்தகம் நன்கு அமைவதற்குத் தங்கள் பாடல்களைச் சேர்த்துக்கொள்ள உரிமையளித்த திரு. வி. க., கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதியார், பாரதிதாசன், தூரன் முதலிய பெரியோர்களுக்கும், பலவகையிலும் தம் அனுபவத்தின் பயனை எடுத்துரைத்தும், ஏற்ற கருத்துக்களைக்கூறியும் வந்தவரான திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்களுக்கும், இப்புத்தகத்தை நன்முறையில் வெளியிடுவதற்கு இசைந்த தென்னிந்தியப் பதிப்புக் கழகத்தாருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கல்வித்துறையாளர்களும், தலைமையாசிரியர்களும், தமிழாசிரியர்களும் இப்புத்தகத்தைத் தாழாது ஏற்று மாணவர்களுக்கு உதவுவார்கள் என்னும் முழு நம்பிக்கையுடன் இம்முன்னுரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

ந. சண்முகம்.

# பொருளடக்கம்


| உரைநடை | | பக்கம் |
|---|---|---|
| 1. அமரகவி பாரதியார் | ... | 1 |
| 2. மலைவளம் | ... | 8 |
| 3. சிலம்பு தந்த செல்வர் | ... | 15 |
| 4. சுதந்திர வீரன் | ... | 21 |
| 5. கூட்டுறவுப் பண்டகசாலை | ... | 30 |
| 6. தமிழ் வளர்த்த பெரியார் | ... | 36 |
| 7. நட்பின் மேன்மை | ... | 44 |
| 8. திருமாவளவன் | ... | 52 |
| 9. பரமார்த்தகுரு கதை | ... | 59 |
| 10. இளையான்குடி மாறனார் | ... | 66 |
| 11. கடிதம் | ... | 72 |
| 12. கயிறு திரித்தல் | ... | 80 |
| 13. மார்க்கோ போலோ | ... | 85 |
| 14. கிருமிகள் | ... | 93 |
| 15. உரையாடல் | ... | 102 |
| 16. அணைக்கட்டுகளும் பயிர்த்தொழிலும் | | 110 |
| 17. பிக்மி குள்ளர்கள் | ... | 116 |
| 18. நமது பிரதம மந்திரி | ... | 123 |

செய்யுள் பக்கம்


1. வாழ்த்து ... 131

2. அறவுரை

1. நன்னெறி ... 132
2. நீதிநெறி விளக்கம் ... 134
3. இன்னா நாற்பது ... 135
4. திருக்குறள் ... 136
5. திருவேங்கட சதகம் ... 138

3. இயற்கைக் காட்சிகள்

1. நிலாத் தோற்றம் ... 138
2. சூரியன் மறைவு ... 139
3. பொதியமலைச் சிறப்பு ... 139
4. பாண்டியநாட்டுச் சிறப்பு ... 139
5. கடல் ... 140
6. மழை ... 140

4. கதைப்பகுதி

1. மைனாவும் முயலும் மோசம் போன கதை ... 141
2. தவளையும் பாம்பும் ... 144
3. பாஞ்சாலி சபதம் ... 145

5. பல்சுவைப் பகுதி

1. தனிப்பாடல்கள் ... 148
2. இளந்தமிழா ... 150
3. சங்கொலி ... 152
4. காலத்தைப் பொன்செய் ... 152
5. காந்தி வாழ்த்து ... 153

அரும்பதவுரை ... 154



அமரகவி சுப்பிரமணிய பாரதியார்

# அமுத வாசகம்

(இரண்டாம் புத்தகம்)

## 1. அமரகவி பாரதியார்

நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும் இல்லாமல், அச்சமே கொண்டு அடிமை வாழ்வு வாழ்ந்த மக்கள் மனத்தில் புதியதொரு வீர உணர்ச்சியை உண்டாக்கினர் ஒரு கவிஞர். உச்சியில் உள்ள வானமே இடிந்து விழுந்தாலும், இச் சகத்துளோர் எல்லாம் எதிர்த்து நின்றாலும் 'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பதில்லை' என்று எண்ணும்படியான புத்துணர்ச்சியை ஊட்டினர் அக்கவிஞர். "வாழ்ந்தால் அனைவரும் வாழ்வோம்; வீழ்ந்தால் அனைவரும் வீழ்வோம்; எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் இனம்" என்னும் ஒற்றுமை மனப்பான்மையை உண்டாக்கினர் அப்புலவர். யார் அவர்? அவர்தான் தமிழ் நாட்டின் தவப்புதல்வர் **அமரகவி சுப்பிரமணிய பாரதியார்** அவர்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் எட்டையபுரம் என்னும் ஓரூர் இருக்கின்றது. அது ஒரு சிறு ஜமீன். அவ்வூரில் **சின்னச்சாமி ஐயர்** என்ற ஒரு நற்குண சீலர் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவியார் **லக்ஷ்மி அம்மாள்** என்பவர். இவர்களுடைய பிள்ளையே இன்று உலகம் போற்றும் உத்தமக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். சுப்பிரமணி

யன் என்று பெற்ருேர் பெயரிட்டனர். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்ற சுப்பிரமணியத்தின் கவிப் புலமையைக் கண்ட ஒரு பெரியார் 'நீ ஒரு பாரதி' என்ருராம். பாரதி என்பது கலைமகளுக்கு உரிய பெயர்களில் ஒன்று. சிறந்த கல்விமானைப் பாரதி என்பர். அன்று முதல் அவர் பெயர் சுப்பிரமணிய பாரதி என்று வழங்கலாயிற்று.

பாரதியார் இளமையிலேயே திருக்குறள், சிலப்பதிகாரம் கம்ப ராமாயணம் முதலான செந்தமிழ் நூல்கள் பலவற்றைச் செம்மையாகக் கற்ருர். அவர் தந்தையார் திருநெல்வேலியில் உள்ள 'இந்து கல்லூரி'யில் அவரைச் சேர்த்துப் படிக்கவைத்தனர். ஆனல் அப்படிப்பு அவருக்குப் பிடிக்கவில்லை. அன்னியனுக்கு அடங்கி அடிமையாக இருக்குமாறு பழக்கும் முறையிலே அக் கல்வித் திட்டம் அமைந்துள்ளது என்று எண்ணிஞர். அடிமை வாழ்வை வெறுத்து சுதந்திரவீரஞக விளங்க விருப்பம் கொண்ட அவர் அக்கல்வியில் நாட்டம் செலுத்தவில்லை. ஆயினும் ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி முதலான பல மொழிகளையும் பயின்ருர். அவ்வாறு பல மொழிகளைப் பயின்றமையினல் தான் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணேம்" என்று நம் தாய் மொழியின் சிறப்பை விளக்கினர். பல மொழிபயின்று, பல கவிஞர்களின் பாடல்களை ஆராய்ந்தமையினல் தான் 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை' என்று அவர் நம் நாட்டுக் கவிகளைப் போற்றினர்.

இக் கவிஞர் பெருமான் செல்லம்மாள் என்னும் நற்குணமங்கையை மணந்து இல்லறம் நடத்தினர். ஆனல் அவர்களுடைய வாழ்வில் எப்பொழுதும் வறுமையே மிகுந்திருந்தது. ஆயினும் வறுமையிலும் செம்மை உடையவராக மற்றவர்க்கு உதவி புரிந்தார். ஒரு முறை அவர் திருவல்லிக்கேணியில் குடியிருந்த போது தம் குடும்பத்தின் அவசியமான செலவுக்காக ஒரு நண்பரிடம் பத்து ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு வந்தார். சிறிது நேரத்திற்குள் அவருடைய நண்பர் ஒருவர் வந்து 'இப்பொழுது எதிர்பாராத செலவு ஒன்று ஏற்பட்டு விட்டது. பத்து ரூபாய் இருந்தால் கொடுங்கள்' என்று கேட்டார். உடனே பாரதியார் முகவாட்டம் சிறிதும் இன்றித் தமது குடும்பச் செலவிற்காக வாங்கிக்கொண்டு வந்த பத்து ரூபாயையும் எடுத்துக் கொடுத்து மகிழ்ச்சியுடன் அனுப்பினர். இப்படிப்பட்ட குணமே வறுமையிற் செம்மைஉடைமை என்பதாகும். அவருடைய உதவிக்குணம் எப்படிப்பட்டதென்பதை இந்த ஒரு சான்றிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

அக்காலம் சுதந்திரப் போர் தொடங்கி மும்மரமாக நடத்தப்பட்டு வந்தது. திலகர், மோதிலால் நேரு, காந்தி அடிகள், அன்னிபெஸன்ட் அம்மையார், கோகலே, சீனிவாச ஐயங்கார், வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலான பல பெரியார்கள் வட நாட்டிலும் தென்னுட்டிலும் உரிமையிழந்து உறங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தனர். ஆண்டு தோறும் அகில இந்தியக் காங்கிரஸ் மகா நாடு நடத்தினர். அம்மகா நாடுகளில் நம் கவிஞர் பாரதியார் பங்கெடுத்துக் கொண்டார். முற்போக்கு எண்ணங்களைக் கொண்டு தீவிரமான திட்டங்களை

வகுத்து விரைவில் சுதந்திரம் பெறும் வழிகளை மக்களுக்கு விளக்கினர். அவரால், அவருடைய பாடல்களால் மக்கள் சுதந்திரப் போரில் அதிகமாக ஈடுபட்டனர். அதைக் கண்ட ஆங்கில அரசாங்கம் அவரை அடக்க ஆரம்பித்தது. நாட்டைவிட்டு வெளியே செல்லுமாறும் ஆணையிட்டது. அவ்வாறே அவர் சில காலம் புதுச்சேரியில் வாழ்ந்து வந்தார். அவருக்கு உதவி செய்தவர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டது. அதனால் அக்காலத்தில் அவரோடு பேசுவதற்கும், அவருக்கு உதவி செய்வதற்கும் எல்லோரும் அஞ்சினர்.

பாரதியார் எதற்தும் கலங்காத மன உறுதி வாய்ந்தவர். "நாளைக்கு இல்லையே" என்று எண்ணி வருந்த மாட்டார்; எப்பொழுதும் வேடிக்கையாகவே பேசுவார்; சூதும் வாதும் தினை அளவும் இல்லாதவர். உள்ளத்தில் தோன்றும் எண்ணத்தை அப்படியே சொல்லிவிடுவார்; உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் வழக்கத்தை அடியோடு வெறுப்பார்; எப்பொழுதும் இயற்கையின் அழகுகளைக் கண்டு களிப்பார்; கடற்கரையில் இருந்து கொண்டு இனிய கவிகளை இயற்றுவார். அடிக்கடி மக்கள் தங்களை மறந்து, தங்கள் பழப்பெருமையை மறந்து வாழ்கின்றனரே என்று எண்ணி ஏங்குவார்.

"நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்
அஞ்சி அஞ்சிச் சாவார்—அவர்
அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே"

என்று உள்ளம் உருகுவார்.

இவர் பல பாடல்களைப் பாடியுள்ளார். நாட்டுப் பற்று, மொழிப்பற்று, வீர உணர்ச்சி முதலியவற்றை விளக்கும் பாடல்கள் நிறைந்த தேசீய கீதங்கள் என்பதையும், பாஞ்சாலி சபதம், தோத்திரப் பாடல்கள் முதலியவற்றையும், குழந்தைகளுக்காக கண்ணன் பாட்டு, குயில்பாட்டு முதலியவற்றையும் பாடியுள்ளார். சந்திரிகா முதலிய உரைநடை நூல்களும் அவர் எழுதியனவே. இவர் பாடல்கள் படிக்கப் படிக்கப் புதியதோர் உணர்ச்சியை உண்டாக்கும் தன்மையுடையது.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே''

என்பது போன்ற அவரது பாடல்களைப் படிக்கும் போதே நமக்கும் ஓர் உணர்ச்சி தோன்றுகிறதல்லவா? இப்பொழுது அவர் பாடல் இல்லாத இடமே இல்லை. எங்கும் எப்பொழுதும் பாரதியார் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்னும் பெரியார் பாரதி பாடலின் பெருமையைப்

''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா—அவன்
பாட்டைப் பண்ணொ டொருவன் பாடினனடா''
''கல்லும் கனிந்துகனி யாகுமேயடா—பசும்
கன்றும் பால் உண்டிலாது கேட்குமேயடா''

என்று மிக அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

இக்கவிஞர் வரகவி என்று வாழ்த்தப்பட்டார்; தேசீயகவி என்று தேச மக்களால் போற்றப்பட்டார்;

அமரகவி அன்று அனைவராலும் கொண்டாடப்பட்டார்; புதுமைக்கவி என்று புகழப்பட்டார். 1921ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் நாள் அமரகவி பாரதியார் அமரபதவி அடைந்தார். இளமையிலேயே இவ்வுலகை நீத்தார். நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட நல்லார் வறுமை வாய்ப்பட்டு வருந்தி இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார். அவர் இறந்த அந்நாளை இன்றும் மக்கள் கொண்டாடி வருகின்றனர். ஒவ்வோராண்டும் செப்டம்பர் மாதம் 11-ம் நாள் பாரதி தினம் எங்கும் கொண்டாடப் படுகிறது. அவர் பிறந்து வளர்ந்த எட்டையபுரத்திலே பாரதியார் நினைவு மண்டபம் ஒன்று அமைத்துள்ளனர். நூல் நிலையம் ஒன்றும் அமைத்துள்ளனர். நமது மாகாண அரசாங்கம் அவருடைய பாடல்களின் உரிமையைப் பெற்று நம் நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன்படுமாறு செய்துள்ளனர். நிலைபெற்ற புகழை நிலைநாட்டி, நம்நாட்டு மக்கள் சுதந்திரம் பெற்று வாழ வழிகாட்டிய அக்கவிஞர் புகழ் வாழ்க.

## அருஞ்சொற் பொருள்

| | |
|---|---|
| உரம்=வலிமை | யாங்கணும்=எவ்விடத்தும் |
| சகம்=பூமி | செம்மை=நல்லொழுக்கம் |
| நாட்டம்=எண்ணம் அல்லது கருத்து | சான்று=உதாரணம் |
| | தினை அளவும்=கொஞ்சமும் |

அமரபதவி=மோட்சம்.

## வினாக்கள்

1. பாரதியாருடைய ஊர், தந்தை, தாய், மனைவி—இவர்களின் பெயர்களை எழுது.

2. பாரதியாருக்குப் பெற்ருேர் இட்ட பெயர் என்ன? பாரதி என்னும் பெயர் எப்படி அவருக்கு ஏற்பட்டது?

3. பாரதியார் தேசத்தொண்டில் ஈடுபட்டபோது உரிமைப்போர் செய்து கொண்டிருந்த தலைவர்கள் யார் யார்?

4. பாரதியார் வறுமையிற் செம்மை உடையவராக இருந்தார் என்பதை ஓர் உதாரணத்தால் விளக்கு.

5. பாரதியார் இயற்றிய நூல்கள் எவை? அவர் பாடலின் சிறப்பை எழுது.

6. பாரதியாரைமக்கள் எவ்வெவ்வாறு போற்றுகின்றனர்?

7. பாரதியாரின் குணச்சிறப்பை எழுது.

## பயிற்சிகள்

1. எதிர்ப்பதம் எழுது:—

ஒற்றுமை; வெறுத்து, புறம், இயற்கை.

2 வாக்கியத்தில் அமைத்து எழுது:—

புத்துணர்ச்சி; நாட்டம் செலுத்தாது; எதிர்பாராத; தீவிரமான.

3. பிரித்து எழுது:—

முகவாட்டம்; குடும்பச்செலவு; கண்டதில்லை; சுதந்திரப்போர்; தோத்திரப்பாடல்.

# 2. மலைவளம்

'மலைகளிலே உயர் மலையை மகிழ்ந்தணியும் நாடு' என்று ஒரு தமிழ்ப் பெரியார் நம் நாட்டின் சிறப்பை விளக்கியுள்ளார். உலகிலே மிக உயர்ந்த இமயமலை நம் நாட்டின் பெருமையையும், வளத்தையும் உலகத்தார்க்கு விளக்கிக் காட்டும் முறையிலே வீறுடன் விளங்குகிறது. மற்றும் பல மலைகள் நம் நாட்டின் வளத்தைப் பெருக்கி வருகின்றன. திருப்பதி எனப்படும் திருவேங்கட மலையில் திருமால் கோயிலும், பழனி மலையில் முருகப்பெருமான் கோயிலும், திருக்கழுக்குன்றத்தில் வேதகிரிப் பெருமான் ஆலயமும், மற்றும் பல மலைகளின் மீது பல கோயில்களும் இருக்கின்றன. இப்படிப்பட்ட மலைகள் நம் நாட்டிலே அதிகமாக இருப்பதனாலும், மலைகளிலிருந்து பற்பல நதிகள் தோன்றி நாட்டை வளமாக்கி வருவதனாலும், மலைகளால் மாண்புற்ற நாடு நம் நாடு என்று அனைவரும் புகழ்கின்றனர்.

இப்பூமியை நானிலம் என்று நம் முன்னோர் குறித்தனர். ஏன்? குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களும் அவற்றின் சார்பான நிலங்களும் உள்ளதனாலேயாகும். பிறகு மக்களுக்குப் பயன்படாத பாலைவனமும் ஒரு நிலமாகக் கொள்ளப்பட்டது. இவற்றுள் குறிஞ்சி என்பது மலையும் மலையைச் சுற்றியுள்ள இடங்களும் ஆகும். முல்லை என்பது காடும் காட்டைச் சுற்றியுள்ள இடங்களும் ஆகும். மருதம் என்பது

வயலும் வயலைச் சூழ்ந்துள்ள இடங்களும் ஆகும். நெய்தல் என்பது கடலும் கடற்கரையிலுள்ள பிரதேசங்களும் ஆகும். இவற்றுள் இயற்கை வளங்கள் மிகுதியாகப் பெற்ற மலையைப் பற்றியும் அதன் வளத்தைப் பற்றியும் அறிந்து கொள்வோம்.

மலை என்பதை நம் முன்னோர் விலங்கல், அடுக்கம், வரை, பிறங்கல், சிலம்பு முதலான பல வேறு பெயர்களால் குறித்துள்ளனர். மலைகள் பல ஆயிரக்கணக்கான அடி உயரம் இருக்கும். இரண்டாயிரம் மூவாயிரம் அடிக்குள் இருக்கும் சிறிய மலையைக் குன்று என்று கூறுவர். மலையின் அசைவில்லாத் தன்மையையும், பெருமையையும் பயனையும் அறிந்த நம் முன்னோர் அறிவு நிறைந்த ஆன்றோர்களுக்கு மலையை உவமையாகக் கூறியுள்ளனர். ஆன்றோர்களிடம் மன உறுதியும், புகழின் பெருமையும், பொறுமையும், மற்றும் பல நற்குணங்களும் பொருந்தியிருப்பதனால் மலையை அவர்களுக்கு உவமையாகச் சொல்வது பொருத்தமேயாகும்.

உயர்ந்த மலைகள் நம் நாட்டிற்கு மழையைக் கொடுக்கின்றன. உயர்ந்த மலைப் பிரதேசங்களில் அடிக்கடி மழை பெய்யும். அதனால் அப்பகுதியில் விவசாயம் விருத்தி அடையும். சில மலைகளில் அருவிகளும் நீர் வீழ்ச்சிகளும் உண்டு. அவை பல ஒன்று கூடிப் பெரும் நதிகளை உண்டாக்குகின்றன. இமயமலையிலிருந்து கங்கை, யமுனை, பிரம்மபுத்திரா முதலான பல நதிகளும் மற்றும் பல மலைகளிலிருந்து பல நதிகளும் உற்பத்தி

யாகி நாட்டின் பற்பல பகுதிகளிலும் பரந்து சென்று நாட்டை வளமுறச் செய்கின்றன.

மக்களுக்குப் பயன்படக்கூடிய பல விலை உயர்ந்த பொருள்கள் மலைகளிலிருந்து கிடைக்கின்றன. அவை மிளகு, ஏலக்காய், சந்தனக்கட்டை, யானைத் தந்தம், தேன், அகிற்கட்டை, அரிதாரம் முதலானவைகளாகும். சில மலைகள் மக்களுடைய நோய்களைப் போக்கும் மூலிகைகளைக் கொண்டிருக்கின்றன, அவற்றின்மீது பட்டு வரும் காற்றைச் சுவாசித்தாலே மக்கள் நோய் தீர்ந்து மகிழ்ச்சி அடைவார்கள். உதாரணமாகத் திருக்கழுக்குன்றத்தில் உள்ள மலை அப்படிப்பட்ட தன்மை வாய்ந்ததென்று அனைவரும் சொல்கின்றனர். இராமாயணத்தில் இராமன், இலக்குவன் முதலானவர்கள் இராவணனுடைய மைந்தன் மேகநாதன் விட்ட அம்பினால் மயங்கி வீழ்ந்தபோது, அனுமான் சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டு வந்தான் என்றும், அச் சஞ்சீவி பர்வதத்தின் மூலிகைக் காற்று பட்டவுடன் அனைவரும் மயக்கம் தெளிந்து எழுந்து மீண்டும் போர் செய்தனர் என்றும் ஒரு வரலாறு காணப்படுகின்றது. இதனாலும் மேலே சொல்லப்பட்ட உண்மையை உணரலாம்.

நம் நாட்டில் சில பெரிய மலைகள் கோடைக் கால இருப்பிடங்களாக விளங்குகின்றன. அவை மிக உயரமாக இருப்பதனால் அங்கு வெயிலின் வெம்மை தெரியாது. கோடைக்கானல், நீலகிரி,

டார்ஜிலிங், சிம்லா முதலானவை அத்தகைய இடங்க



டார்ஜிலிங்

ளாகும். இவ்விடங்களுக்குக் கோடைக்காலங்களில் செல்வர் பலர் சென்று தங்கியிருப்பார்.

இயற்கையின் எழிலைக் கண்டு இன்பம் அடைவதற்கு ஏற்ற இடம் மலையேயாகும். மலையின்மீது ஏறி அங்கிருந்து சுற்றிலும் பார்ப்போமானால் பெரிய நதிகள் சிறிய ஓடைகளைப் போலவும், பெரிய ஊர்கள் சிறு கிராமங்களைப் போலவும் காணப்படும். இரயில், 'கார்' முதலானவை செல்வதைப் பார்த்தால் சிறு சிறு பிராணிகள் நிலத்தில் ஊர்ந்து செல்வனபோல் தெரியும். எங்கும் பச்சைப் பசேல் என்றும் காணப்படும் பயிர்களின் வனப்பும், இடையிடையே நீர் நிலைகளும், பாதைகளும் அமைந்துள்ள காட்சியும், தூரத்தில் தெரியும் நீல

நிறக்கடலின் அழகும், பார்ப்பவர் மனத்திற்கு ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கும்; இறைவன் படைப்பின் இயல்பை உணர்ந்து இன்புறச் செய்யும். மேற்கு மலைத் தொடர்ச்சியின் அருகில் இரயிலில் செல்லும் போது வெள்ளியை உருக்கிவிட்டாற் போல் ஓடிவரும் அருவிகளும், மலைகளின்மீது தவழ்ந்து, மலையின் உச்சியை மறைத்துச் செல்லும் மேகக் கூட்டங்களும், மலை அடிவாரங்களில் செழிப்புடன் வளர்ந்துள்ள தாவரங்களும் அனைவரும் காணத்தகுந்த காட்சிகள் ஆகும்.

இம்மலைகளில், பல கொடிய விலங்குகளும், மான் முதலான சாதுப் பிராணிகளும், பெரிய பெரிய மலைப் பாம்புகளும், பல பறவை வகைகளும் காணப்படும். இம் மலைப் பகுதியில் வாழும் மக்கள் குறவர்கள் என்றும், அவ்விடத்துப் பெண்கள் குறத்தியர் என்றும் அழைக்கப்படுவர். அவர்கள் அங்கு தினை, வரகு முதலியவற்றைப் பயிர்செய்தும், கொடிய விலங்குகளை வேட்டையாடியும் பிழைக்கின்றனர்.

இப்பொழுது மலைப்பிரதேசங்களில் காப்பி, தேயிலை முதலியவை மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. மலைவாழை முதலான பழவகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. வீடுகள் கட்டுதற்கும் பல தொழில்கள் செய்வதற்கும் பயன்படக்கூடிய தேக்கு முதலான மரவகைகள் மலைகளில் இருந்தே கிடைக்கின்றன. மலையில் உள்ள பெரும் கற்பாறைகள் பல வகையில் நமக்குப் பயன்படுகின்றன. **சேரன் செங்குட்டுவன்** கண்ணகியின் சிலை செய்வதற்கு இமயத்திலிருந்து கல் கொண்டு வந்தான் என்ற

வரலாற்றின் மூலமும்,மற்றும் பல வரலாறுகள் மூலமும் சிலைகள் செய்வதற்கும், கோயில்கள், கோட்டைகள் முதலானவை கட்டுதற்கும் பாறைகள் பயன்படுகின்றன என்பது தெரியலாகும். பல மலைகளின் மீது பெரிய கோட்டைகளும் அமைக்கப்பட்டுள்ளன. செஞ்சி மலையின் மீதுள்ள கோட்டை மிகச் சிறப்பு உடையதாகும்.

இங்ஙனம் மக்களுக்கு மலைகளால் ஏற்படும் நன்மைகள் பல. அம்மலைகளைப் பற்றியும், மலைவளங்களைப் பற்றியும் நீங்கள் நன்றாக அறிந்து கொள்ளவேண்டும். அப்படி அறிந்து கொள்வதற்குப் பல மலைகளுக்குச் சென்று பார்த்து வருதல் நல்லது.

## அருஞ்சொற் பொருள்

வீறு = பெருமை

மூலிகை = மருந்துவேர்கள்.

வெம்மை = கொடுமை.

## வினாக்கள்

1. நம் நாடு, மலைகளால் மாண்புற்ற நாடு என்பது ஏன்?

2. பூமிக்கு வழங்கும் வேறு பெயர் என்ன? அதற்குக் காரணம் யாது? மலைக்கு வழங்கும் வேறு பெயர்களை எழுது.

3. மலைகளால் நாட்டிற்கு உண்டாகும் நன்மைகளை எழுது.

4. நம் நாட்டிலுள்ள கோடைக்கால வாசஸ்தலங்கள் எவை?

5. மலைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் பொருள்கள் எவை?

6. 'இயற்கை அழகைக் காண்பதற்கு ஏற்ற இடம் மலை'— எவ்வாறு?

7. உனக்குத் தெரிந்த சில மலைகளின் பெயரை எழுதி அவற்றின் சிறப்பை விளக்கு.

## கட்டுரைப் பயிற்சிகள்

1, 'மலைகளால் நாட்டிற்கு உண்டாகும் நன்மைகள்' என்பதைப் பற்றிப் பதினைந்து வரி எழுது.

2. 'மலைகளும் இயற்கைக் காட்சிகளும்' என்னும் பொருள் பற்றிப் பதினைந்து வரியில் எழுது.

## மொழிப் பயிற்சிகள்

1. சேர்த்தெழுது :—

யானை + தந்தம்; மேகம் + கூட்டம்; மூலிகை + காற்று; மனம் + உறுதி.

2. பிரித்து எழுது :—

நானிலம் ; மூவாயிரம் ; நீலநிறக்கடல் ; கற்பாறை.

3. எதிர்ப்பதம் எழுது :—

முன்னோர், பெருமை, உண்மை, நல்லது.

4. பரந்து, பறந்து ; இரப்பவர், இறப்பவர் ; பாறை, பாரை ; இவற்றின் வேறுபாட்டை எழுது.

# 3. சிலம்பு தந்த செல்வர்

'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே''

என்று அமரகவி பாரதியார் தமிழ் நாட்டின் சிறப்பைப் புகழ்ந்து கூறியுள்ளதை நீங்கள் முன்னமே படித்தீர்கள் அல்லவா? அமிழ்தினும் இனிய நம் செந்தமிழ் மொழியின் பெருமை வானுற வோங்கி வளம் பெற்று விளங்கியது. அகத்தியர் முதலான அருந் தமிழ்ப் புலவர்களால் போற்றி வளர்க்கப்பட்ட நமது தெய்வத் தமிழ்மொழி பல வகையிலும் பண்பட்ட மொழியாகும். கவிவாணர் பலர் சிறந்த கவிகளை இயற்றி மொழியை வளர்த்தனர். அவர்களுள் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்னும் காவியத்தை இயற்றிய பெரியார் இளங்கோவடிகள் ஒருவர் ஆவார். அவர் வரலாற்றை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளவேண்டுவது இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டின் ஒரு பிரிவாக இருந்த சேரநாடு முடியுடை மூவேந்தர்களில் ஒருவரான சேர மன்னரால் ஆளப்பட்டு வந்தது. சேரர்கள் குமரிமுதல் இமயம் வரை, ஒப்பற்ற தமிழ்மொழியாகிய ஒரே மொழியால் அரசாண்டு வந்தனர். மேலும் கடலில் கலம் செலுத்தி மற்ற நாடுகளையும் தமது ஆட்சியில் கொண்டு வந்தனர்.

அத்தகைய வீரம் மிக்க மன்னர்களுள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் இணையற்ற மன்னன் ஒருவன் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் இந் நாட்டை ஆண்டான். அவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர். அவர்களில் மூத்தவன் செங்குட்டுவன் என்றும், இளையவன் இளங்கோ என்றும் அழைக்கப்பட்டு வந்தனர். கல்வியிலும், வீரத்திலும், அன்பிலும், ஆண்மையிலும் தந்தையைப் போலவே பிள்ளைகளும் விளங்கினர்.

ஒருநாள் சேரலாதன் அரசவையில் தம் மக்கள் அருகிருக்க அரியணையில் வீற்றிருந்தபோது அங்கு ஒரு சோதிடன் வந்தான். செங்குட்டுவனையும் இளங்கோவையும் உற்று நோக்கிய சோதிடன் அரசனை நோக்கி "மூத்தவனைக் காட்டிலும் இளையவனுக்கு அரசாளும் ஆற்றல் அதிகமாக இருக்கின்றது" என்று கூறினான். இவ்வுரையைக் கேட்ட செங்குட்டுவன் மனம் வருந்தினான். இளங்கோவின் உடலும் உள்ளமும் துடித்தன. முறையில்லாதவாறு கூறிய சோதிடனை முனிந்து, இளங்கோ இளமையிலேயே துறவை மேற்கொண்டார். அன்று முதல் அவர் இளங்கோவடிகள் என்று அழைக்கப்பட்டார்.

இமயவரம்பனுக்குப் பிறகு செங்குட்டுவன் அந் நாட்டு அரசபதவியை ஏற்றுத் தந்தையைப்போலவே சிறப்புடன் தரணியை ஆண்டு வந்தான். அடிகள் துறவை மேற்கொண்டு தூயவாழ்வை நடத்தி வந்தார்.

ஒருமுறை செங்குட்டுவன் தனது மனைவியுடனும் தம்பி இளங்கோவடிகளுடனும் அமைச்சர் முதலா

னோர் சூழ்ந்து வர இயற்கைக்காட்சிகளின் எழிலைக் கண்டு களிக்க பேரியாற்றங்கரைக்குச் சென்றான். அப்பொழுது அங்கு இருந்த மலைவாழ் மக்கள் அரசனை வணங்கித் தாங்கள் கண்ட ஒரு காட்சியை, அதாவது கண்ணகி செங்குன்று என்னும் மலை மீதிருந்து விண்ணுலகம் சென்ற காட்சியைக் கூறினர். அப்பொழுது



பேரியாற்றங்கரையில் செங்குட்டுவன்

அங்கு அரசனுடன் வீற்றிருந்த சாத்தனார் என்னும் புலவர் கோவலன், கண்ணகி இருவர் வரலாற்றையும் விளக்கிக்கூறினார். 'சோழநாட்டிலே உள்ள காவிரிப்பூம் பட்டினத்தில் பிறந்த கோவலனும், கண்ணகியும் ஊழ்வினைப் பயனால் செல்வமிழந்து மதுரை செல்ல, அங்கு கோவலன் பாண்டியனால் கொல்லப்பட்டு இறந்தான். அதைக்கண்டு மனம் தாளாத கண்ணகி பாண்டியனிடம் சென்று வழக்குரைத்துக் குற்றமற்ற தன் கணவனைக் குற்றவாளி என்று சொல்லிக் கொலை செய்வித்த

பாண்டியனுடைய கொடுங்கோல் தன்மையைத் தனது சிலம்பின் மூலம் விளக்கித் தன் கணவன் குற்றமற்றவன் என்பதை நிரூபித்துக் காட்டினுள். குற்றம் உணர்ந்த பாண்டியன் தன் உயிரை இழந்தான். அவன் தேவியும் உயிர் இழந்தாள். மதுரையும் அழிந்தது. பின் கண்ணகி வைகையாற்றின் கரைவழியேவந்து சேரநாட்டை அடைந்து அங்குள்ள ஒருமலைமீதேறி விண்ணவர் எதிர் கொள்ள கணவனுடன் விண்ணுலகம் சென்றனள்' என்னும் வரலாற்றை விளக்கமாக எடுத்துரைத்தார்.

இவ் வரலாற்றைக் கேட்ட செங்குட்டுவன், 'பாண்டியன் நீதி தவறினுன்; ஆனுல் அத்தவறை அவன் உயிர் செம்மைப்படுத்தியது' என்ருன். பின் தன் மனைவியின் விருப்பப்படி கண்ணகிச்குக் கோயில் கட்டுவதெனத் தீர்மானித்தான். அதன்படி இமயத்திலிருந்து கல் எடுத்துக் கங்கையாற்றில் நீராட்டி, அழகிய உருவச்சிலை செய்து, கோயிலில் அமைத்து வழிபட்டான்.

இளங்கோவடிகள், சாத்தனுர் கூறியவற்றைக் கேட்டு வியப்புற்ருர். சாத்தனுர், கோவலன் மகள் **மணிமேகலை**யின் வரலாற்றை **மணிமேகலை** என்னும் காவியமாக இயற்றினுர். இளங்கோ, கோவலன் கண்ணகி வரலாற்றைச் **சிலப்பதிகாரம்** என்னும் பெயரிட்டுச் செந்தமிழ்க்காவியம் ஒன்று இயற்றினுர். சிலம்பின் காரணமாக நடந்த வரலாற்றிற்குச் சிலப்பதிகாரம் என்னும் பெயர் இடப்பட்டது. சோழநாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டில் கணவனை யிழந்து தன் கற்பின் பெருமையை நிலைநாட்டி, சேரநாட்டில் விண்ணுலகம்

அடைந்த கண்ணகியின் வரலாறு முடியுடை மூவேந் தர்க்கும் உரியதென்று எண்ணிய அடிகள். தாமே அவ் வரலாற்றைப் பாடினர். அரசியலில் தவறியவர்களை அறக்கடவுள் அழிக்கும்; பத்தினிப் பெண்களைப் பாரோர் போற்றுவர்; அவரவர் செய்த வினைப்பயனை அவரவர் அனுபவித்தே தீருவர் என்னும் மூன்று உண் மைகளையும் அடிப்படையாகக்கொண்டு அடிகள் அந் நூலை இயற்றினர்.

செங்குட்டுவன் புவிச் சக்கரவர்த்தியாகவும், இளங்கோ கவிச் சக்கரவர்த்தியாகவும் விளங்கி மக்களு டைய அன்பிற்கு உரியவராக வாழ்ந்தனர். அவர் களால் தமிழ்நாடு பெருமை பெற்றது. தமிழ் மொழி யும் வளர்ச்சிபெற்றது. தமிழர் வீரம், அறிவு முதலி யவை 'குன்றின் மேலிட்ட விளக்கைப்போல' எங்கும் ஒளி வீசின.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தைப் பொருள் உணர்ந்து படித்த பாரதியார் 'நெஞ்சை அள்ளும் சிலப் பதிகாரம்' என்று புகழ்ந்தார். சிலப்பதிகாரம், சிலம்பு என்றும் சொல்லப்படும். அதனால் இளங்கோவடிகளை நாம் **சிலம்பு தந்த செல்வர்** என்று போற்றுவோம்.

## அருஞ்சொற் பொருள்

பண்பட்ட = சிறப்புப் பெற்ற
கலம் = கப்பல்
இணையற்ற = ஒப்பில்லாத
அரசவை = அரச சபை
முனிந்து = கோபித்து
எழில் = அழகு
அறக்கடவுள் = தரும தேவதை
பாரோர் = உலகமக்கள்
தரணி = பூமி

## வினக்கள்

1. பாரதியார் தமிழ் நாட்டின் பெருமையை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?

2. சேரமன்னர்களின் சிறப்பை எழுது.

3. இளங்கோவடிகள் துறவு பூண்டதேன்?

4. கோவலன் கண்ணகி வரலாற்றைச் செங்குட்டுவனிடம் கூறியவர் யார்? எப்பொழுது எவ்வாறு கூறினர்?

5. சாத்தனர் கூறியவற்றைக் கேட்ட செங்குட்டுவன் பாண்டியனைப்பற்றிக் கூறியதென்ன?

6. சாத்தனர், இளங்கோ—இவ்விருவரும் எழுதிய நூல்கள் எவை?

## பயிற்சிகள்

1. கவிவாணர் சிறந்த கவிகளை இயற்றினர்—இத்தொடரில் உள்ள செயப்படு பொருளை எடுத்து எழுது.

2. ஏதேனும் ஒன்றன் பெயராக வருவது 'பெயர்ச் சொல்' எனப்படும். அது பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற் பெயர் என ஆறு வகைப்படும். உ-ம்

| | |
|---|---|
| சிலம்பு—பொருட்பெயர் | கண்—சினைப்பெயர் |
| தமிழ்நாடு—இடப்பெயர் | இனிமை—குணப்பெயர் |
| நாள்—காலப்பெயர் | படித்தல்—தொழிற்பெயர் |

இயற்கைக் காட்சியின் எழிலைக்கண்டு களிக்க செங்குட்டுவன் பேரியாற்றங்கரைக்குச் சென்றான்—இவ்வாக்கியத்திலுள்ள பெயர்களை எடுத்தெழுதி என்ன பெயரென்றும் எழுது.

3. வாக்கியத்தில் அமைத்து எழுது:- பண்பட்ட, செம்மைப்படுத்த, எழிலைக்கண்டு.

# 4. சுதந்திர வீரன்

வீரம் மிகுந்த தமிழ் நாட்டில் உண்மை வீரர்கள் பலர் வாழ்ந்தனர். உயிரை ஈந்தும் உரிமையைக் காக்கும் உணர்ச்சி உள்ளவர்கள் பலர் வாழ்ந்தனர். பழி என்றால் அஞ்சியும், புகழ் என்றால் உயிரைத் தியாகம் செய்தும், பலர் வாழ்ந்தனர். வெற்றியே அன்றி தோல்வி அறியாத வீரர் பலர் வாழ்ந்தனர். இவ்வாறு வாழ்ந்த தமிழ்மரபில் முதல் முதலில் நம்மை அடிமைப்



கட்டபொம்மன்

படுத்தி ஆளவந்த ஆங்கிலேயர்களை எதிர்த்துப்போராடித் தமது உரிமையை நிலைநாட்ட விரும்பி, உயிரை நாட்டு

மக்களின் நலன் கருதித் தியாகம் செய்த சுதந்திர வீரன், கட்டபொம்மன் என்னும் வீரபாண்டியன் ஆவான். அந்தச் சுதந்திர வீரன் வரலாற்றைச் சுதந்திரம் பெற்றுள்ள நம் நாட்டு இளைஞர்கள் அறிந்து கொள்வது நல்ல தாகும்.

ஆந்திர நாட்டைச்சேர்ந்த பால்ராஜா என்பவர் பஞ்சம் காரணமாக ஆயிரம் ஆண்டுகட்குமுன் தமிழ் நாட்டிற்கு வந்து சேர்ந்தார். அவருடைய மகன் 'பொம்மு' என்பவன் பாண்டிய மன்னன் ஒருவனுடைய சேனைத் தலைவனாக நியமிக்கப்பட்டான். அவனுடைய ஆற்றலை வியந்து அவனைக் 'கெட்டி பொம்மு' என்று அழைத்தனர். அப்பெயரே நாளடைவில் மாறி, கட்டபொம்மன் என்றாயிற்று. சில நாட்களில் பாண்டிய மன்னன் ஜகவீரபாண்டியன் தமக்குப் பிள்ளையில்லாக் காரணத்தால் கட்டபொம்மனையே தாம் ஆண்டு வந்த பகுதியின் அரசனாக நியமித்துவிட்டு இறந்து விட்டான். அன்றுமுதல் அவனுடைய பரம்பரையினரே அப்பதவியை ஆண்டு வந்தனர். அவர்களில் ஒருவனே நாம் போற்றும் சுதந்திர வீரன் வீரபாண்டியக் கட்டபொம்மன்.

ஒரு முறை முதல் கட்டபொம்மன் வேட்டைக்குச் சென்றபோது அவனுடைய ஏழு நாய்கள் சேர்ந்து ஒரு முயல் ஒன்றைத் துரத்திக்கொண்டு சென்றனவாம். நாய்களைக்கண்டு அஞ்சி ஓடிய முயல் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்தவுடன் அச்சம் இல்லாமல் தன்னைத் துரத்திக்கொண்டுவந்த ஏழு நாய்களையும் எதிர்த்துத் தோற்று ஓடும்படி செய்ததாம். இதைக்கண்ட கட்டபொம்மன் அம்மண்ணில் வீரசக்தி உண்டு என்று

எண்ணி அவ்விடத்திலே கோட்டை கொத்தளங்களை அமைத்துத் தனது தலைநகரை அமைத்தான். அதற்குத் தனது பாட்டனரான பாஞ்சாலனுடைய பெயரை அமைத்துப் பாஞ்சாலங்குறிச்சி என்று பெயரிட்டான்.

நமது சுதந்திர வீரன் கட்டபொம்மன் 1760-ம் ஆண்டு பிறந்தான். அவனது தந்தை ஜகவீரக் கட்ட பொம்மன் என்பவர். தாயார் ஆறுமுகத்தம்மையார் என்பவர். தளவாய்குமாரசாமி, துரைச்சிங்கம் என்னும் இரு தம்பியர்களும் இருந்தனர். மக்கள் வீரபாண்டியனைக் கறுத்தையா என்றும், தளவாய் குமார சாமியைச் சிவத்தையா என்றும், துரைச்சிங்கத்தை ஊமைத்துரை என்றும் அழைத்தனர். ஊமைத்துரை என்பவன் சரியாகப் பேசமுடியாதவனுக இருந்தான். ஆனல் சிறந்த வீரனுக விளங்கினுன். வீரபாண்டியன் பாஞ்சாலங்குறிச்சியின் மன்னனுக இருந்து வரும்போது தென்னுடு, ஆர்க்காட்டு நவாப்பின் ஆட்சியில் இருந்தது. நவாப்பின் ஆட்சியும் நாளுக்குநாள் வலிமை குன்றி வந்தது. சிற்றரசர்கள் திறை செலுத்த மறுத்தனர். அவர்களை வற்புறுத்திக்கேட்க நவாப்பிற்கு ஆற்றல் இல்லை. அப்பொழுது இந்தியாவில் வியாபாரம் செய்து பிழைக்க வந்த கிழக்கிந்தியக்கம்பெனியாரான ஆங்கிலேயர் ஆர்க்காட்டு நவாப்பினிடம், சிற்றரசர்களிடம் இருந்து கப்பம் வசூலிக்கும் கடமையைத் தாங்கள் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டு பெற்றனர். இதனுல் வியாபாரிகளாக வந்த வெள்ளையர் வரிவசூலிக்கும் அதிகாரிகளாக மாறினர். சிலநாட்களில் ஆர்க்காட்டு நவாப்பின் அதிகாரம் அனைத்

தையும் தாமேகொண்டனர். சிற்றரசர் எல்லோர்க்கும் தமது அதிகாரம் பரவி வருவதைத் தெரிவித்து அனை வரும் தங்களுக்கே கப்பம் செலுத்த வேண்டுமென்றும், தவறினல் தலை போகும் என்றும் தெரிவித்தனர். சிலரை நயத்தாலும், சிலரைப் பயத்தாலும், இடத்திற் கும் காலத்திற்கும் ஏற்றவாறு பல சூழ்ச்சிகளைச் செய்து தம் வழிக்குக் கொண்டு வந்தனர். ஆனல் கட்டபொம் மன் ஒருவன்மாத்திரம் நாடோடிகளாகவந்து நாடாளத் திட்டமிட்டு வந்த ஆங்கிலேயர்களின் அச்சுறுத்தலுக்கு அஞ்சவில்லை. ஆசை வார்த்தைகளுக்கும் ஆளாக இல்லை. 'மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிது' என்றபடி அவன் தன் மானத்தைப் பறிகொடுத்து மாற் ருர் கையில் சிக்கி வாழ்வதைக் காட்டிலும் உயிரை இழப்பதே மேல் என்று எண்ணினன். தம்பியர்களின் கருத்தும் அவ்வாறே இருந்தது. அதனல் ஆங்கிலேயர் களின் எண்ணத்திற்குப் பாஞ்சாலங்குறிச்சியார் பணிய வில்லை.

அப்பொழுது அங்கு கலெக்டராக இருந்த ஜாக்சன் என்பார் வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தந்திரமாகச் சிறைப்படுத்தும் வஞ்சக எண்ணத்துடன் வரவழைத் தார். வீரபாண்டியன் தமது பரிவாரங்களுடனும் தம் பியர்களுடனும் வந்து சேர்ந்தான். வந்தவன்மீது குற் றங்கள் பல சுமத்தி அவனைச் சிறைப்படுத்தியிருப்பதாக கலெக்டர் ஜாக்சன் கூறினர். உடனே பொங்கி எழுந்த கோபத்துடன் வாளை எடுத்தான்; வீசினன்; கிழக்கிந் தியக் கம்பெனியின் உதவித் தளபதியாக இருந்த கிளார்க் என்பவன் சுதந்திர வீரன் கட்டபொம்மன் கையால்

வெட்டப்பட்டான். மண்ணுளை நினைத்து வந்த மக்க ளின் சேனைத் தலைவர்களுள் ஒருவனை மண்ணுக்கு இரையாக்கினுன் கட்டபொம்மன். அன்று முதல் ஆங்கிலேயர்க்கும் பாஞ்சாலங் குறிச்சி மக்களுக்கும் பலமுறை கடும் போர் நடந்தது. கம்பெனியார், ஜாக்சன் கட்டபொம்மனிடம் நடந்து கொண்ட முறை தவறு என்று சொல்லி அவரை கலெக்டர் பதவியிலிருந்து நீக்கி வேருெருவரை நியமித் தனர். அவர் பெயர் லூஷிங்டன் என்பது. அவரும் பாஞ்சாலங்குறிச்சி மன்னனுடன் எவ்விதமான சமர சமும் செய்து கொள்ள முடியாமல், போரன்றி வேறு ஒருவழியும் கிடையாது என்று மேலதிகாரிகளுக்குத் தெரிவித்துப் படைகள் அனுப்பும்படி கேட்டார். உடனே மேஜர் பானர்மென் என்பவன் தலைமையில் ஆங் கிலேயப்படை ஒன்று அனுப்பப்பட்டது. பானர்மென் என்னும் தளபதியும் கட்டபொம்மனுக்குத் தம்மை வந்து காணும்படி கடிதம் எழுதினுன். அதுகண்ட கட்ட பொம்மன் கடுங்கோபம் கொண்டான். உள்ளத்தில் உண்டான கோபத்தை மெள்ள அடக்கிக் கொண்டான். எப்படியும் ஆங்கிலேயர்களுக்குக் கீழ்ப்படிவதில்லை என்று தீர்மானித்து விட்டான். "அண்டிப்பிழைக்க வந்தவர்கள் நம்மை ஆளவந்து விட்டார்களே" என் னும் கோபமும், தம்மைப் போன்ற மற்ற சிற்றரசர்கள் மானத்தை இழந்து, மதிகெட்டு அவர்களுடன் சேர்ந்து மற்றவர்களைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களாக மாறி விட்டனரே! நாட்டைக் காட்டிக் கொடுத்துத் தாங்கள் மட்டும் நல்வாழ்வு வாழ விரும்பினரே! என்னும் வருத் தமும் கொண்டான், கட்டபொம்மன்.

ஒரு நாள் இரவு திடீரென்று பானர்மென் படை பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிச் சென்றது. அன்று கட்டபொம்மனின் தம்பியர்களும் மற்றவர்களும் தங்கள் குலதெய்வமான தேவி ஜக்கம்மாள் திருவிழாவைக்காண திருச்செந்தூர் சென்றிருந்தனர். அப்பொழுது காலமறிந்து பானர்மென் படையுடன் சென்முன். பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டான். கடும் போர் மூண்டு இருதிறத்தும் பலர் இறந்தனர். கட்ட பொம்மனின் நண்பர்களுள் ஒருவனுன வெள்ளையத்தேவன் என்பான் சிறந்த வீரத்துடன் போர் புரிந்தான். இறுதி யில் தம்பியர்கள் திருச்செந்தூரிலிருந்து திரும்பி வந்த வுடன் கட்டபொம்மன் அக்கோட்டையிலிருந்து வெளியே சென்று, தமிழ் நாட்டுக் குறுநில மன்னர்கள் அனைவரையும் அப்போரில் சேர்த்து உரிமையைக் காத்துக் கொள்ளுமாறு செய்ய முடிவு செய்து அவ் வாறே வெளியேறினன்.

பானர்மென் உடனே கட்டபொம்மனைக் கண்டு பிடித்துத் தருவோர்க்கும் வெள்ளையத் தேவனைக்கண்டு பிடித்துத் தருவோர்க்கும் சிறந்த பரிசில் தரப்படும் என்று அறிவித்தான். கட்டபொம்மனுடைய உறவி னர்க்கும் அவனைச் சேர்ந்தவர்க்கும் யாரும் உதவிபுரியக் கூடாது என்று அறிவித்தான். இந்நாட்டு மக்கள் யாரும் வாள் முதலான எந்த ஆயுதங்களையும் எடுத்துச் செல்லக் கூடாது என்றும் உத்தரவிட்டான். இங்ஙனம் வழி வழியாக வந்த வீரப்பரம்பரையினரின் வீரத்தை அடக் கினன் பானர்மென். வெள்ளையத்தேவனை அவன் மாமனே பண ஆசையால் காட்டிக் கொடுத்தான். கட்டபொம்

மனையும் கண்டுபிடித்துக் கொடுக்கச் சிலர் உடன்பட்டனர். அவ்வாறே செய்தும் முடித்தனர். நய உரை பேசி நண்பனைப் போல் நடித்து, வஞ்சகம் செய்து கட்டபொம்மனை வரவழைத்துக் காட்டிக் கொடுத்தனர்; கையில் விலங்குமாட்டிக் கைதியாக்கி அழைத்துச் சென்றனர். பல பாளையக்காரர்கள் முன்னிலையில் பானர்மென் கட்டபொம்மனைக் குற்றவாளிக் கூண்டில் நிற்க வைத்து, அவன் மீது பல குற்றங்களைச் சுமத்தி வழக்கை நடத்தினன். முடிவு என்ன?

தமிழ் நாட்டின் மானத்தைக் காக்க விரும்பி, உரிமைப் போர் தொடங்கிய உத்தமன் கட்டபொம்மனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. காட்டிக் கொடுத்த கயவர்களுக்குப் பதவி அளிக்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆணைக்கு அடங்காது, கிழக்கிந்தியப் படையினரில் சிலரைக் கொன்று, கலெக்டர் அழைத்த போது வரமறுத்த குற்றங்களுக்காக உண்மைச் சுதந்திர வீரன் கட்டபொம்மனுச்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு உடனே அத்தண்டனை நிறைவேற்றப்பட்டது. 16-10-1799-ல் சுதந்திர வீரன் வீரபாண்டியக் கட்டபொம்மன் வீரசுவர்க்கம் அடைந்தான்; உரிமைப் போர்புரிந்து, உலகம் உள்ளவரை அழியாப் புகழை நிலைநாட்டி, சுதந்திர வாஞ்சையை மக்கள் மனத்தில் மூட்டி மறைந்தான். கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பிறகும் ஆங்கிலேயர்களால் விரைவில் நாட்டில் அமைதி ஏற்படுத்த முடியாது அல்லலுற்றனர். பின் வேலூர் முதலான இடங்களில் ஏற்பட்ட கலகத்திற்கும் வட இந்தியாவில் 1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்

திற்கும் உண்மைக் காரணம் வேறு பல இருப்பினும் கட்டபொம்மன் காட்டியவழி முக்கிய காரணம் என்பது முற்றிலும் பொருந்தும்.

இவ்வாறு முதலிலேயே ஆங்கிலேயர்களை எதிர்த்து அவர்களுடன் போர் புரிந்து தமிழ் நாட்டின் பெருமை யையும் வீரச்சிறப்பையும் விளக்கிய வீரபாண்டியக் கட்டபொம்மன் வரலாற்றைத் தமிழ் நாட்டு இளைஞர் கள் உணர்ந்து வீரர்களாக விளங்கவேண்டும்.

## அருஞ்சொற் பொருள்

ஈந்து=கொடுத்து
குன்றி=குறைந்து
திறை=கப்பம், வரிப்பணம்
உடன்படிக்கை=ஒப்பந்தம்
மாற்றார்=பகைவர்
பரிவாரம்=சேனை
கயவர்=அறிவில்லாதவர், கீழோர்
ஆணை=உத்தரவு

## வினாக்கள்

1. கட்டபொம்மன் முன்னோர் எங்கிருந்து ஏன் தமிழ் நாட்டிற்கு வந்தனர்?

2. கட்டபொம்மன் என்று எப்படிப் பெயர் வந்தது?

3. முதல் கட்டபொம்மன் கோட்டையை எங்கு ஏன் அமைத்தான்? அவ்விடத்திற்கு அவன் இட்ட பெயர் என்ன?

4. சுதந்திரவீரன் கட்டபொம்மனுடைய தந்தை, தாய் உடன் பிறந்தவர் பெயர்களை எழுது.

5. ஆங்கிலேயர் தென்னாட்டை ஆளும் உரிமையை யாரிட மிருந்து எவ்வாறு பெற்றனர்? பெற்ற பிறகு அவர்கள் என்ன செய்தனர்?

6. கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு அடங்காதது ஏன்?

7. கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயர்க்கும் போர் எப்பொழுது ஆரம்பமாயிற்று?

8. பானர்மென் எப்பொழுது பாஞ்சாலங் குறிச்சியை முற்றுகையிட்டான்? அம்முற்றுகையின் முடிவு என்ன?

9. கட்டபொம்மன் எவ்வாறு பிடிபட்டான்?

10. சுதந்திர வீரன்மீது சுமத்தப்பட்ட குற்றங்களையும் விதிக்கப்பட்ட தண்டனையையும் எழுது.

11. லூஷிங்டன், வெள்ளையத்தேவன்-தேவி ஜக்கம்மாள், சிறு குறிப்பு எழுது.

## கட்டுரைப் பயிற்சி

1. கட்டபொம்மனுடைய உரிமைப் போரைக் குறித்து இருபது வரியில் எழுது.

## மொழிப் பயிற்சி

1. எதிர்ப்பதம் எழுது:— அச்சம், தோல்வி, இறுதி
2. ஊமைத்துரை சரியாகப் பேசமுடியாதவனாக இருந்தான். ஆனால் சிறந்த வீரனாக விளங்கினான்—ஒரே வாக்கியமாக எழுது.
3. வாக்கியங்களில் அமைத்தெழுது:— பறிகொடுத்து, சிக்கிக்கொண்டு, குன்றி. உடன்பட்டனர்.
4. இப்பாடத்திலிருந்து இடப்பெயர், குணப்பெயர், காலப்பெயர் இவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் எழுது.

# 5. கூட்டுறவுப் பண்டகசாலை

உலகில் மக்கள் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழ்வதனால் ஏற்படும் நன்மைகள் பல. அவற்றுள் ஒன்று கூட்டுறவு முறையில் வியாபாரம் செய்தல். மக்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களைச் சில்லறைக் கடைகளிலிருந்து வாங்குகிறார்கள். சில்லறைக் கடைக்காரர்கள் மொத்த வியாபாரிகளிடமிருந்து வாங்குகின்றனர். அவர்கள் அப்பொருளை உற்பத்தி செய்பவரிடமிருந்து வாங்குகின்றனர். அவரவர்களும் தங்கள் உழைப்புக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு இலாபம் வைத்து விற்கின்றனர். இதனால் பண்டங்களின் விலை பன்மடங்கு அதிகமாகிறது. உதாரணமாக வட ஆர்க்காடு ஜில்லாவில் உள்ள ஓர் ஊரில் துவரை இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அதை உற்பத்தி செய்தவரிடமிருந்து மொத்த வியாபாரி ஒருவன் வாங்கிக் கொள்கின்றான். அவனிடமிருந்து பல சில்லறைக் கடைக்காரர்கள் வாங்குகின்றனர். கடைசியில் மக்கள் வாங்கும்போது படி துவரம்பருப்பு பன்னிரண்டணாவிற்குக் குறைவாக முதலில் வாங்கப்பட்டது, ஒரு ரூபா இரண்டணா அல்லது ஒன்றேகால் ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. இதனால் சில்லறையில் நாம் வாங்குவதனால் நமக்கு எவ்வளவு நஷ்டம் என்று தெரிகிறதல்லவா ?

இக்குறையைப் போக்குவதற்கு ஒரு கிராமத்தில் அல்லது நகரத்தில் உள்ள மக்கள் பலர் ஒன்று சேர்ந்து,

தங்களுக்கு வேண்டிய பொருள்களை அவை உற்பத்தி யாகும் இடங்களிலிருந்து நேராக வரவழைத்துக் கொண்டால் இடையிலே உள்ள சில்லறைக் கடைக் காரர்கள் அடையும் இலாபம் நமக்கே சேரும் அல்லவா? அதனால்தான் கூட்டுறவு முறையில் வியா பாரம் செய்வது நல்லது என்று சொல்லப்படுகிறது.

ஒரு கிராமத்தில் உள்ள நூறு அல்லது இருநூறு பேர் சேர்ந்து ஒவ்வொருவரும் முதல் பணமாக ஐம்பது அல்லது நூறு ரூபா போட்டு ஒரு கூட்டுறவுப் பண்டகசாலையை ஏற்படுத்தலாம். ஏற்படுத்தி அவ்வூர் மக்களுக்குத் தேவைப்படும் பொருள்கள் பலவற்றையும் அவை உற்பத்தி செய்யப்படுகின்ற இடங்களிலிருந்தே நேராக வரவழைக்கலாம்; நல்ல பொருள்களாக வர வழைத்துக் குறைந்த விலைக்கு விற்கலாம். இதனால் அவ்வூர் மக்களுக்குப் பல நன்மைகள் உண்டாகும்.

இவ்வகைக் கூட்டுறவு இயக்கம் முதன் முதலில் ஏழைகளுக்கு நன்மை செய்யும் நோக்கத்துடன்தான் இங்கிலாந்து முதலிய தேசங்களில் ஆரம்பிக்கப்பட்டது. ஏனென்றால் செல்வர்களைப்போல ஏழைகள் தங்களுக்கு வேண்டிய பண்டங்களை மொத்தமாக வாங்கிச் சேர்த்து வைத்துக்கொள்ள முடியாது. அன்றன்று வேண்டிய பண்டங்களை அன்றன்றே வாங்கிக்கொள்ளும் ஏழை மக்களே நாட்டில் அதிகம். அவர்கள் சில்லறைக் கடையில் பண்டங்களை வாங்கும்போது அக்கடைக் காரர்கள் அவ் ஏழைகளை ஏமாற்றுவது கொஞ்சமல்ல. சிலர் அவர்களிடம் கடனாகப் பண்டங்களை வாங்கு கின்றனர். கடனாக வாங்குவதென்றால் கடைக்காரர்கள்

வைத்ததுதான் விலை. எப்படிப்பட்ட பண்டத்தைக் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ள வேண்டும். ஏன்? கடனாக வாங்குவதனால் அல்லவா? இப்படி ஏழைமக்கள் படும் கஷ்டங்களைப் பார்த்த சிலரால் இக்கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

கூட்டுறவுப் பண்டகசாலைகட்கு முதலில் பணம் போடுகின்ற அங்கத்தினர்களே அதை நடத்துபவர்களாவார்கள். அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தலைவராகவும், மற்றொருவர் செயலாளராகவும் இருந்து அப் பண்டகசாலையைத் திறம்பட நடத்துவர். தலைவராவது மற்ற அங்கத்தினராவது ஒழுங்காக நடந்து கொள்ளவில்லையானால் அவர்களை உடனே விலக்கி, வேறொருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அங்கத்தினர்களுக்கு உண்டு. அதனால் அப் பண்டகசாலைகள் ஒழுங்காக நடைபெறும் என்று நம்பலாம். அப்பண்டகசாலையின் அங்கத்தினர்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை அவ்விடத்திலேயே வாங்குவர். மற்றவர்களும் அங்கு வாங்குவர். அதனால் ஒவ்வொரு மாதமும் இவ்வளவு பண்டம் செலவாகும் என்பதை எளிதில் தெரிந்துகொண்டு அதற்கு ஏற்றாற்போல பண்டங்களை வரவழைக்கலாம். தேவைக்கு அதிகமாக வரவழைத்துப் பண்டங்களைக் கெட்டுப்போகும்படி விட வேண்டாம்.

இம்முறையினால் ஏற்படும் நன்மைகளைக் கவனிப்போம். முதலாவதாகக் குறைந்த விலையில் உயர்ந்த பண்டங்கள் கிடைக்கின்றன. இரண்டாவதாக அதன் அங்கத்தினர்களிடையே சிக்கனத்தை ஏற்படுத்துகின்றது.

மூன்றாவது, கூட்டுறவுப் பண்டகசாலைகளில் கடன் கொடுப்பது கிடையாது; ஆதலினால் கடன் வாங்கும் பழக்கம் நீங்குகிறது. நான்காவது, அதன் அங்கத்தினர் களுக்கு ஒவ்வோராண்டு முடிவிலும் அதில் கிடைக்கின்ற இலாபத்தைப் பங்கிட்டுக் கொடுக்கின்றனர். அதனால் பணமும் கிடைக்கிறது. ஐந்தாவது, அவ்வூரி லுள்ள ஏழை மக்களுக்கு நல்ல பண்டங்களைக் குறைந்த விலைக்குக் கொடுப்பதனால் சமூக சேவையும் செய்தவர்களாகின்றனர். இவ்வாறு பல வகையான நன்மைகளைப் பயக்கும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நம் நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் இருக்கவேண்டும். அதற்கு மக்கள் முயற்சி செய்யவேண்டும்.

ஆனால் கூட்டுறவுப் பண்டகசாலையின் மேற்பார்வை யாளர்கள், நேர்மையுள்ளவர்களாகவும், உண்மை உள்ள வர்களாகவும் இருத்தல் வேண்டும். அவர்கள் ஒழுங் கற்றவர்களாக இருப்பின் அவர்களுக்கு மட்டுமல்லாமல் அவ் வியக்கத்திற்கும் கெட்ட பெயர் உண்டாகும். ஆதலின் ஒழுங்குள்ளவர்களை மேற்பார்வையாளராக நியமித்து ஒழுங்காக நடத்தினால் மக்கள் பல நன்மை களை அடையலாம்.

கூட்டுறவுப் பண்டகசாலைகட்குக் கிடைக்கும் இலா பத்தில் ஒரு பங்கை அவ்வூர் மக்கள் நன்மைக்காகவும் பயன்படுத்தலாம். உதாரணமாக நூல் நிலையம், வாசக சாலை முதலியவற்றை ஏற்படுத்தலாம்; பூங்கா அமைத்து, வானொலிவைத்து நன்மை செய்யலாம்; ஏழை மாணவர்கள் கல்வி கற்கப் பொருளுதவி செய்ய

லாம் ; இவ்வாறு மற்றும் பல நற்பணிகள் செய்யலாம். அதனால் இவ்வியக்கம் நாட்டில் பரவ அனைவரும் பாடுபடவேண்டும். எல்லோருக்கும் நன்மை பயக்கும் இத்துறையில் ஒற்றுமையுடன் மக்கள் உழைத்து உயர்வு பெறவேண்டும்.

## அருஞ்சொற் பொருள்

பண்டக சாலை=கடை
வானொலி=ரேடியோ
நூல் நிலையம்=புத்தக சாலை
பூங்கா=பூஞ்சோலை

## வினாக்கள்

1. சில்லறைக் கடைகளில் பண்டங்களின் விலை அதிகமாக இருப்பது ஏன் ?

2. கூட்டுறவுப் பண்டகசாலை ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கம் என்ன ?

3. சில்லறைக் கடைகளில் பண்டம் வாங்கும் ஏழை மக்களின் நிலையை எழுது.

4. கூட்டுறவுப் பண்டகசாலையை நடத்துபவர் யார் ? எவ்வாறு நடத்தப்படுகிறது ? விளக்கி எழுது.

5. கூட்டுறவு முறையினால் உண்டாகும் நன்மைகளை எழுது.

6. 'கூட்டுறவு இயக்கத்திற்குக் கெட்ட பெயர் உண்டாகாமல் இருக்க என்ன செய்யவேண்டும் ?

7. கூட்டுறவுப் பண்டகசாலையில் கிடைக்கும் இலாபத்தைக்கொண்டு மக்கள் நன்மைக்காக எவ்வெக் காரியங்களைச் செய்யலாம்?

## கட்டுரைப் பயிற்சி

1. 'கூட்டுறவு' என்னும் பொருள்பற்றி இருபது வரியில் எழுது.

2. 'பள்ளிக்கூடத்தில் கூட்டுறவுச் சங்கம்' என்பதைப் பற்றிப் பதினைந்து வரியில் எழுது.

## பயிற்சிகள்

1. பிரித்து எழுது :—

அன்றன்று, இருநூறு, தேர்ந்தெடுக்கும், அவ்வியக்கம்,

2. வாக்கியத்தில் அமைத்து எழுது :—

தேர்ந்தெடுத்து, திறம்பட, மேற்பார்வை, நேர்மை.

3. இப்பாடத்திலிருந்து வினா வாக்கியங்கள் இரண்டு எழுது.

4. கடன் வாங்கும் பழக்கம் நீங்குகிறது—எழுவாய் பயனிலைகளை எழுது.

# 6. தமிழ் வளர்த்த பெரியார்

நமது தாய்மொழியின் பெருமையை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டும் முறையில் பற்பல காலங்களில் பல புலவர்கள் செந்தமிழ்க் கவிகள் பல பாடி வளர்த்தனர். சங்ககாலப் புலவர்கள் பாடிய பாடல்கள் நமது முன்னோர்களின் வீரம், கொடை, அரசியல் முதலியவற்றை விளக்குவனவாகும். பழந் தமிழரின் பண்புகளை அறிவதற்குப் பயன்படும் பழம் பெரும் பாடல்கள் முற்காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதப் பட்டு வந்தன. அச்சுவடிகள் எல்லோரிடமும் இல்லாமல் சிற்சிலரிடமே இருந்தன. அதனால் மக்கள் அனைவரும் அவற்றின் பெருமைகளை அறிந்துகொள்ள முடியாமல் கிடைத்தவற்றை வைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் ஒரு பெரியார் தோன்றினார்; இடையறாது உழைத்தார்; தமிழர்களுக்குப் புதுவாழ்வும், தனிப்பெருமையும் உண்டாகுமாறு செய்தார்; பைந்தமிழ் இலக்கியங்களின் சுவையை எல்லோரும் அறியுமாறு புத்தகங்கள் பதிப்பித்து வெளிப்படுத்தினார். அவரைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டாமா? ஆம். அவர் யார்? அவர்தான் தமிழ் வளர்த்த பெரியார் **டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்** என்பவர் ஆவர்.

உத்தமர்கள் வாழும் உத்தமதானபுரம் என்ற ஓர் ஊரில் வேங்கடசுப்பையர் என்னும் வேதியர் ஒருவர் இருந்தார்; அவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த



டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

சூரியமூலை என்னும் ஊரில் தங்கி வாழ்ந்து வந்தார். அவருடைய அருமை மகனாக நமது பெரியார் **சாமிநாத ஐயர்** 1855ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ம் நாள் பிறந்தார். தந்தையார் நன்றாகத் தமிழ் கற்றவர்; இசையிலும் வல்லவர்; நற்குண சீலர். அவருடைய பிள்ளையும் அவரைப்போலவே நற்குண நல்லொழுக்கங்களிலும், கல்வியிலும் சிறப்புற்றார். அக்காலத்தில் மகா வித்துவானும், சிறந்த தமிழறிஞரும், தமிழ் மொழிக்குப் புத்தணிகள் பல செய்து உதவியவருமான **மீனாட்சி சுந்தரம் பிள்ளை** என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் தமிழ் வளர்த்த மடாதிபதிகளால் போற்றப்பட்டு, **மயிலாடுதுறை** என வழங்கப்பெற்ற **மாயூரம்** என்னும் ஊரில் இருந்துகொண்டு மாணவர் பலருக்குத் தமிழ்ப் பாடங்களைப் போதிக்கும் அரும்பணி ஆற்றிவந்தார். அவரிடத்தில் தமிழ் பயில சாமிநாத ஐயரை அவருடைய தந்தையார் அனுப்பினார்.

சாமிநாத ஐயரின் தமிழ்ப்பற்றையும், அடக்கத்தையும் கண்ட மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவரைத் தமது மாணாக்கர்களில் முதல்வராகக் கருதினார். இலக்கண இலக்கியங்கள் அனைத்தையும் கற்றுக் கொடுத்தார். தம்மைப் பார்க்க வருவோரிடமெல்லாம் ஐயரின் அறிவின் திறத்தைப் புகழ்ந்துரைத்தார். அதனால் அப்பொழுதே ஐயர் அறிவுசான்ற பெரியோர்களின் அன்பைப் பெற்றார். **திருவாவடுதுறை** மடத்துத் தலைவர் **ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய** அன்பையும் ஐயர் பெறும்படி மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் செய்தார்கள். கற்றாரைக் கற்றாரே

விரும்புவர் அல்லவா? அதன்படி அப்பொழுது தமிழ் நாட்டில் இருந்த சான்றோர்கள் பலரும் சாமிநாத ஐயரை அன்புடன் நேசித்தார்கள்.

அறிவிற் சிறந்த அறிஞர்கள் மதிக்குமாறு தமிழ்ப் புலமை பெற்ற சாமிநாத ஐயர் திருவாவடுதுறையில் அம்மடத்துத் தலைவரின் வேண்டுகோளின்படி தமிழ்ப் பணி புரிந்து வந்தார். அப்பொழுது கும்பகோணம் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக இருந்த பெரியார் தியாக ராச செட்டியார் அவர்கள் ஓய்வுபெற்று வேலையிலிருந்து விலகினர். அவ்விடத்தில் இருந்து அரும்பணி ஆற்றக் கூடியவர் சாமிநாத ஐயரே என்று அறிந்த செட்டியார் அவரை அக்கல்லூரித் தமிழாசிரியராக அமர்த்தினர். ஐயரும் அவ்வேலையில் அமர்ந்து மாணவர்கள் மகிழும்படி தமிழ்ப் பாடங்களைப் போதித்து வந்தார். அவ்வமயம் கும்பகோணத்தில் முனிசீப்பாக இருந்து வந்த சேலம் இராமசாமி முதலியார் என்னும் அறிஞர் ஐயரவர்களின் புலமைத் திறத்தைக் கேட்டு அவரிடம் சீவகசிந்தாமணிப் பிரதி ஒன்றைக்கொடுத்து அதை நல்ல முறையில் பதிப்பித்துத் தரும்படி வேண்டினர். ஐயர் அவர்களும் அதற்கு இசைந்து இடையருது உழைத்து விரைவில் அப்புத்தகத்தை வெளியிட்டார்கள். அன்று முதல் ஐயர் அவர்களின் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவத் தொடங்கிற்று. ஒரு துறையில் பயிற்சி பெற்றூர் எப்பொழுதும் அத்துறையிலே மேலும் மேலும் முயன்றால் எவ்வளவு சிறப்படையலாம் என்பதற்கு ஐயரவர்கள் வாழ்க்கை ஓர் எடுத்துக் காட்டாகும். அன்றுமுதல், ஐயரவர்கள் பழந்தமிழ் நூல்களை வெளி

யிடவேண்டும் என்னும் எண்ணங் கொண்டார். எங்கெங்கு ஏடுகள் கிடைக்கும் என்று அலேந்தார்; ஊர் ஊராகச் சென்ருர்; ஏடுகளேக் கண்டு பிடித்தார்; எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தார்; ஆராய்ந்தார்; அதன் பயனுகப் பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலே முதலிய நூல்கள் வெளிவந்தன.

சில நாட்களில் ஐயரவர்கள் சென்னேயிலுள்ள மாகாணக் கல்லூரிக்குத் (பிரசிடென்ஸி காலேஜ்) தமிழாசிரியராக மாற்றப்பட்டார். அங்கிருந்து நீண்ட நாள் தமிழ்ப்பணியாற்றி ஓய்வுபெற்ருர். அப்பொழுதும் அவர் தமது வாழ்நாளே வீணுக்கவில்லே. அல்லும் பகலும் உழைத்தார். பழைய ஏட்டுச் சுவடிகளே ஆராய்ந்து ஆராய்ந்து அரிய நூல்கள் பலவற்றையும் வெளியிட்டு வந்தார். பெருங்கதை, முதலான சங்க இலக்கியங்கள் வெளிவந்தன. இடைக்காலத்தில் தோன்றிய நூல்களான பல புராணங்களும், அந்தாதி, உலா முதலான நூல்களும், இலக்கண நூல்களும், மற்றும் பல உரைநடை நூல்களும் வெளியிடப் பட்டன.

இவ்வாறு தமிழ்த்தாயின் மறைந்திருந்த அணிகளே வெளிப்படுத்தித் தூய்மை செய்து தாய்க்கு அணிந்து மகிழ்ந்தார். தமிழ் அன்னேயின் தவப்புதல்வரான அவருடைய அரும்பணியை, அனேவரும் போற்றினர். அரசாங்கத்தாரால் மகாமகோபாத்யாய என்னும் பட்டமும், ஆயிரரூபாய் பரிசும் அளிக்கப்பட்டன. 'திராவிட வித்யா பூஷணம்' என்னும் பட்டம், பாரத தர்ம மகா மண்டலத்தாரால் வழங்கப்பட்டது. 'தாக்ஷிணுத்ய

கலாநிதி' என்னும் பட்டம் காஞ்சி காமகோடிபீடத் தலைவரால் கொடுக்கப்பட்டது. மதுரையில் இப்பொழு துள்ள தமிழ்ச் சங்கத்தார் ஐயாயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழி ஒன்று அளித்தனர். சென்னைப் பல்கலைக் கழகத்தார் 1932ம் ஆண்டு "டாக்டர்" பட்டம் வழங்கி அவரைப் பாராட்டினர்.

இவ்வாறு தமிழுக்குத் தொண்டுசெய்து பெருமை பெற்று விளங்கிய ஐயரவர்கள் அன்பும் அருளும் நிறைந்தவர்; இன்சொல்லே பேசுவார்; மற்றவர் சொல்வதைப் பொறுமையுடன் கேட்பார்; ஊக்க மும் உழைப்பும் உடையவர்; பிறருடைய அவ மதிப்பைப் பொருட்படுத்தார்; கடவுள் பக்தி, கடமை யுணர்ச்சி முதலான நற்குணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்த ஒரு சாதுவாக வாழ்ந்தவர். அவர் எப்பொழு தும் தமக்குப் பிறர் செய்த நன்றியை மறவார். "நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது அன்றே மறப்பது நன்று," என்னும் வள்ளுவர் வாக்கை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்ந்தவர். தம்மைக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து பணியாற்றுமாறு செய்த பெரியார் தியாகராச செட்டியார் செய்த நன்றியை என்றும் மறவாமல், அதற்கு அறிகுறியாக திருவேட்டீசுவரன் பேட்டையில் உள்ள தமது இல்லத்திற்குத் 'தியாகராஜ விலாசம்' என்று பெயரிட்டுள்ளார். இச்செயல் ஒன்றே அவருடைய நன்றிமறவாமையின் சிறப்பை நமக்கு விளக்குவதாகும்.

ஐயரவர்கள் குருபக்தியிற் சிறந்தவர்கள். தம்மைத் தமிழன்னைக்குத் தொண்டு செய்யும் துறையில் உறு

துணையாய் இருந்து ஊக்கப்படுத்திய தமது ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் அளவுகடந்த பற்று உடையவராக இருந்தார். அவரைப்பற்றி ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரம் என்று ஒரு பெரும் புத்தகமே எழுதியுள்ளார்.

நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டு நாற்றிசையும் போற்ற வாழ்ந்த ஐயரவர்கள் 1942ம் ஆண்டு திருக்கழுக்குன்றத்தில் தங்கியிருந்த பொழுது ஏப்ரல் மாதம் 28ம் நாள், என்றும் அழியாப் புகழை இவ்வுலகில் நிலைநாட்டி, "மண்ணுளார் வினை தீர்க்கும் மருந்தாக" உள்ள அண்ணல் அடிசேர்ந்தார்.

சிறந்த முறையில் நூல்களை வெளியிட்டுத் தமிழ் வளர்த்த பெரியார் டாக்டர் சாமிநாத ஐயர் அவர்கள் தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் செய்த தொண்டினை வியந்து, அவரையும், அவர் செய்த நன்றியையும் மறவா திருப்பதற்கு அடையாளமாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன் சென்னையில் அவர் தமிழாசிரியராக இருந்து உழைத்த மாகாணக் கல்லூரியின் முன்பக்கம் அவரது உருவச்சிலை செய்து அமைத்தனர். அவரைப் போல் அருந்தமிழ்ப் பணியில் ஈடுபட்டு, ஆடம்பரம் இல்லாது சேவைசெய்து, தமிழன்னையின் தவப்புதல்வ ராக எல்லோரும் விளங்கவேண்டும்.

## அருஞ்சொற் பொருள்

கவி=பாடல்
புலமைத்திறம்=அறிவுத் திறமை
இடையறாது=ஓய்வு இல்லாமல்
புத்தணிகள்=புதிய ஆபரணங்கள். இசைந்து=உடன்பட்டு
அல்லும் பகலும்=இரவும் பகலும்

## வினுக்கள்

1. தமிழ் மக்கள் அனைவரும் பழங்கால இலக்கியங்களின் பெருமையை அறியாமல் வாழ்ந்தனர்—ஏன் ?

2. தமிழ் வளர்த்த பெரியார் யார்? ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டனர் ?

3. மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையின் பெருமையை எழுது.

4. சாமிநாத ஐயர் எங்கெங்கு தமிழாசிரியராக இருந்தார் ?

5. ஐயரவர்கள் சங்க இலக்கியங்களைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபடச் செய்தவர் யார் ? ஐயர் வெளியிட்ட நூல்களில் சிலவற்றைக் குறிக்கவும்.

6. ஐயரவர்கள் பெற்ற பட்டங்கள் எவை ?

7. ஐயரவர்கள் நன்றிமறவாதவர், குருபக்தி உடையவர் என்பதற்கு ஒவ்வோர் ஆதாரம் காட்டு.

8. ஐயரவர்களின் உருவச்சிலை எங்கு வைக்கப்பட்டுள்ளது?

9. சிறு குறிப்பு எழுது :—

மயிலாடுதுறை, சுப்பிரமணிய தேசிகர், தியாகராஜ செட்டியார்.

10. ஐயரவர்களின் குணச்சிறப்பினை எழுது.

## பயிற்சிகள்

1. பிரித்தெழுது :—

சங்ககாலப் புலவர் ; புகழ்ந்துரைத்தார் ; நாற்றிசை.

2. பழந்தமிழ் நூல்களை வெளியிடவேண்டுமென்று எண்ணம் கொண்டார் ; எங்கெங்கு ஏடுகள் கிடைக்குமென்று

அலைந்தார்; ஊர் ஊராகச் சென்றார்; ஏடுகளைக் கண்டார்; ஆராய்ந்தார்; அதன் பயனாகப் பல நூல்களை வெளியிட்டார். இத்தனி நிலை வாக்கியங்களைத் தொடர்நிலை வாக்கியமாக மாற்றி எழுது.

3. வாக்கியங்களில் அமைத்தெழுது ;—

வேண்டுகோள், அறிகுறி, கடைப்பிடித்தார்.

# 7. நட்பின் மேன்மை

பாண்டிய நாட்டுக் கடற்கரை அருகில் **பிசிர்** என்னும் ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் **ஆந்தையார்** என்னும் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். மக்கள் அவருடைய ஊர்ப்பெயரையும் சேர்த்து அவரைப் **பிசிர் ஆந்தையார்** என்று அழைத்தனர். அவர் இளமையி லேயே நன்ருகக் கற்றுக் கவிபாடும் திறமையைப் பெற்றிருந்தார்; நற்குண நல்லொழுக்கங்களிற் சிறந்த நல்லவராக விளங்கினர்; கற்றபடி நடக்கும் கல்விமானுக இருந்தார். அக்காலத்தில் இருந்த அரசர் பலரிடம் சென்று கவிபாடி, அவர்கள் உள்ளம் உவந்து கொடுக் கும் பரிசுகளைப் பெற்றுத் தமது வாழ்க்கையை நடத்தி வந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் பாண்டிய நாட்டை **அறிவுடைநம்பி** என்னும் மன்னன் ஆண்டு வந்தான். பிசிராந்தையார் அறிவுடைநம்பியின் அன்புக்கு உரிய வராகிச் சீரும் சிறப்பும் பெற்றுச் செம்மையாக வாழ்ந்து வந்தார்.

அப்பொழுது சோழநாட்டில் **கோப்பெருஞ் சோழன்** என்னும் அரசர் ஆண்டுவந்தார். அவர் புலவர்களைப் போற்றும் புரவலராக விளங்கினர். தமிழ் மொழியை வளர்க்கும் தலைவராக இருந்தார். அவருடைய சபை யில் பெருமக்கள் பலரும் கூடி, மன்னன் பெருமையை மாண்புமிக்க கவிகளால் புகழ்ந்தனர். அம்மன்னரது அரும்பெருங் குணங்களைப் பாண்டிய நாட்டுப் புலவ

ரான பிசிராந்தையார் கேள்விப்பட்டார். அன்றுமுதல் புலவருக்கு அவ்வரசரைக் கண்டு களிக்கவேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. ஆயினும் அவர் நினைத்தவாறு விரைவில்சந்திக்க இயலவில்லை. பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் உள்ள மிகுந்த தூரம் அவ்விருவரையும் விரைவில் சந்திக்க முடியாமல் செய்தது. ஆனல் புலவர் எப்பொழுதும் கோப் பெருஞ்சோழன் நினைவாகவே இருந்தார். கோப் பெருஞ்சோழனும் பிசிராந்தையாரின் பெருமையைக் கேள்வியுற்று அவரைக் கண்டுகளிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடனே இருந்தான்.

ஒருமுறை புலவர் கடற்கரையில் உலாவிக் கொண் டிருந்தபோது, அவ்வழியாக ஒரு அன்னப்பறவை சென்றதைக் கண்டார். உடனே அன்னத்தைப் பார்த்து அதைச் சோழ மன்னனிடம் தூதாக அனுப்புவது போலத், தம் உள்ளக் கருத்தை அமைத்து உருக்கமான ஒரு பாடல் பாடினர்.

"அன்னப்பறவையே! நீ தெற்கேயுள்ள குமரியில் உள்ள மீன்களைத் தின்று வடதிசையில் உள்ள மலைக் குச் செல்கின்றாய். உனக்கு நான் ஒன்று சொல்லுகிறேன். அதைக்கேட்டு அதன்படி செய். நீ செல்லும் வழியில் இடையில் சோழநாடு என்னும் வளம்பெற்ற நாடு ஒன்று உண்டு. அதன் தலைநகரம் உறையூர் என்பது. அவ்வூரில் அந்நாட்டு மன்னனுடைய அழகான அரண் மனை இருக்கிறது. அங்கே உள்ள காவலாளர்க்கு உனது வருகையைத் தெரிவிக்காமலே உள்ளே செல்லலாம்.

அங்கே அருங்குணங்கள் பலவும் ஒன்றுசேர்ந்தாற் போன்ற உருவமுடைய கோப்பெருஞ் சோழன் என்னும் மன்னன் வீற்றிருப்பான். அவனிடம் சென்று "நான் பாண்டிய நாட்டுப் பிசிராந்தை என்னும் புலவரின் நண்பன்' என்று சொல். அம்மன்னன் அவ்வுரையைக் கேட்டவுடனே உனது பேடை அன்னம் அணிவதற்குரிய ஆபரணங்கள் தருவான். அவற்றைப் பெற்று நீ மகிழ்ந்து செல்" என்பது அப்பாடலின் கருத்தாகும். இங்ஙனம் புலவர் மன்னனைக் காணுமலே அவனிடம் மனம் கலந்த நட்புகொண்டு அவன் நினைவாகவே வாழ்ந்து வரலானர்.

உறையூரிலிருந்த கோப்பெருஞ் சோழன் வெற்றி வீரனுகவும், கொடையிற் சிறந்த வள்ளலாகவும் புலவர் போற்றுமாறு புகழ்பெற்று விளங்கியபோது அவனுடைய மக்கள் இருவர் அவன் மனம் வருந்தும்படியான செயல்களைச் செய்யத் தொடங்கினர். அதுகண்ட மன்னன் தம் மக்கள்மீதே போர்தொடுக்க விரும்பினுன். அவன் அவையில் பெரும்புலவராக விளங்கிய **புல்லாற்றூர் எயிற்றியனுர்** என்னும் புலவர் மன்னனுக்கு நல்லுரைகள் கூறிப் போரைத் தடுத்தார். ஆயினும் சோழன் மனம் சோர்வடைந்தது; வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டான். அதனுல் சோழமன்னன் **வடக்கிருத்தல்** என்னும் முறையை மேற்கொண்டு இறக்க எண்ணினுன். வடக்கிருத்தல் என்பது ஏதேனும் ஒரு காரணத்தினுல் உயிரைத்துறக்க எண்ணுபவர்கள் ஆற்றிடையுள்ள ஓரிடத்தில் வடக்கு நோக்கி இருந்து உணவு முதலியன கொள்ளாமல் உயிரை விடுதலாகும்.

அவ்வாறே கோப்பெருஞ் சோழன் தன் அரசை மக்களிடம் ஒப்புவித்து வடக்கிருக்கச் சென்முன். அமைச்சர், புலவர், குடிமக்கள் அனைவரும் பின் தொடர்ந்து வர ஆற்றின் நடுத்திட்டிற்குச் சென்முன். அங்கே ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தான். அனைவரும் அரசனைச்சுற்றி அமர்ந்தனர். அப்பொழுது சோழன் அவர்களை நோக்கி "இப்பொழுது இங்கு என் உயிர்போன்ற நண்பர் பிசிராந்தையார் வருவார். அவருக்காக ஓரிடம் விட்டு வையுங்கள்" என்முன். அவ்வுரை கேட்ட ஆன்ழேர் 'அரசே! பிசிராந்தையார் உம்மைப்பற்றிக் கேள்விப்பட்டு இருப்பவரே அன்றி உம்மை நேரில் பார்த்தவரல்லர். நீங்களும் அவரைப் பார்த்ததில்லை. அவர் நெடுந் தூரத்திலுள்ள பாண்டிய நாட்டவர். நீங்கள் வடக்கிருக்கும் செய்தி அவருக்கு எப்படித் தெரியும்? அதனல் அவர் இங்கு எங்ஙனம் வருவார்?" என்றனர்.

"சான்றோர்களே! நீங்கள் அவ்வாறு ஐயுறல் வேண்டா. நானும் அவரும் ஒருவரையொருவர் சந்தித்திராவிட்டாலும் இருவரும் ஒருவர்க்கொருவர் உயிர் போன்ற நட்பினர் ஆவோம். நான் அரசனுக இருந்த போது அவர் வராவிட்டாலும், இந்நிலையில் அவர் கட்டாயம் இங்கு வருவார். ஆதலின் அவரும் என்னுடன் வடக்கிருக்க இடம் அமைத்து வையுங்கள்" என்று அரசன் கூறினன்.

அரசன் ஆணைப்படி பிசிராந்தையார்க்கும் ஓரிடம் அமைத்தனர் ஆன்றோர்.

"என்ன அதிசயம்! என்ன வியப்பு!" என்று எல்லோரும் ஆச்சரியப்படும்படி சிறிது நேரத்தில் பிசிராந்

தையார் சோழன் வடக்கிருப்பதைத் தமது ஒன்றுபட்ட மனவுணர்ச்சியால் அறிந்து விரைந்து வந்து சேர்ந்தார்.



புலவரும் சோழனும் தழுவிக்கொள்ளுதல்.

சோழனும் பிசிராந்தையாரும் அன்புமிக ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டனர்; இன்னுரை பலகூறி மகிழ்ந்தனர். பல ஆண்டுகளாக ஒருவரை ஒருவர் காணுமலே உள்ளம் கலந்த உயரிய நட்பினை உடைய அவ் இருவரும் உவப்புக் கடலில் மூழ்கினர். சோழன் பெருமையைப் புலவரும், புலவர் சிறப்பைச் சோழனும் போற்றினர்.

அப்பொழுது அரசன் அருகில் இருந்த பொத்தியார் என்னும் புலவர் அவ்விருவர் நட்பின் மேன்மையை வியந்து, அழகிய பாடல் ஒன்று பாடினுர். அதன் கருத்து :—"எங்கள் அரசன் அரசை வெறுத்து வடக்கிருக்கச் சென்றது வியப்பிற்கு உரிய செயல். பாண்டிய நாட்டுப் புலவர் தமது நட்பொன்றே காரணமாக இங்

நிலையில் இங்கு வந்தது அதைவிட வியப்பிற்குரிய செய லாகும். பிசிராந்தையார் இப்பொழுது இங்கு வருவார் என்று சொன்ன அரசனது மனவுணர்ச்சியும், அவ்வாறே வந்து சேர்ந்த புலவரது மனவுணர்ச்சியும் நினைக்க நினைக்க வியப்பை மிகுதிப்படுத்துவனவாகும்" என்ப தாகும்.

பிறகு அங்கிருந்த பெருமக்கள் பலருடனும் பிசி ராந்தையார் அளவளாவினர். நட்பு ஒன்றையே உயிரி னும் மேன்மையானதாகக் கருதிய பிசிராந்தையார் அரசனுடன் தாமும் வடக்கிருந்து உண்ணு நோன்பு கொண்டு மண்ணுலக வாழ்வை நீத்தனர்.

இந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்ட கண்ணகனர் என்னும் புலவர் நட்பின் மேன்மையை விளக்கும் முறை யில் அழகான பாடல் ஒன்று இயற்றினர். "பொன், பவளம் முதலானவை வெவ்வேறிடங்களில் தோன்று கின்றன. ஆயினும் அவற்றை ஒரு மாலையாகச் செய்யும் போது அழகு மிகுந்து விளங்கும். அதுபோல வெவ்வே றிடங்களில் பிறந்தாலும் சான்றோர் சான்றோருடன் வந்துசேர்ந்து சிறப்புப் பெறுவார்கள்" என்பது அப் பாடலின் கருத்தாகும்.

பின்னர், வடக்கிருந்து உயிர் துறந்த சான்றோர் களான சோழனுக்கும், பிசிராந்தையார்க்கும் அந்நாட்டு மக்கள் அக்கால வழக்கப்படி கல்நாட்டு விழா செய்தனர்.

மாணவர்களே! நட்பின் மேன்மையைக் கவனித் தீர்களா? ஒருவனிடம் பொருள் உள்ளவரைக்கும்

நட்புச் செய்வதுபோல் நடித்து, அவன் பொருள் இழந்த போது அவனை மறந்துவிடுவதா நட்பு? அன்று. நண்பன் பொருட்டுத் தம் உயிரையும் தியாகம் செய்யும் நட்பே உயர்ந்த நட்பாகும். அதனால் நட்பின்மேன்மையை அறிந்து நன்மை பெற்று நல்லவர்களாக விளங்குங்கள்.

## அருஞ்சொற் பொருள்

| | |
|---|---|
| உவந்து=மகிழ்ந்து | மாண்பு=பெருமை |
| புரவலன்=அரசன் | பேடை அன்னம்=பெண் அன்னம் |
| அவை=சபை | சோர்வு=தளர்ச்சி |

ஐயுறல்=சந்தேகப்படுதல்

## வினாக்கள்

1. பிசிராந்தையார் என்பவர் யார்? அவர்காலத்தில் பாண்டிய நாட்டிலும், சோழ நாட்டிலும் அரசாண்ட மன்னர்கள் யார் யார்?

2. பிசிராந்தையாருடைய பெருமையை எழுது.

3. கோப்பெருஞ் சோழனுடைய சிறப்பியல்புகளை எழுது.

4. பிசிராந்தையார் அன்னத்தைத் தூது அனுப்புவது போல் பாடிய பாடலின் கருத்தை எழுது.

5. சோழ மன்னன் வடக்கிருக்கத் துணிந்தது ஏன்? வடக்கிருத்தல் என்றால் என்ன?

6. வடக்கிருக்கும்போது அரசன் மற்றவர்களைப் பார்த்துக் கூறியதையும், அதற்கு அவர்கள் கூறிய பதிலையும் எழுது

7. பொத்தியார் என்னும் புலவர் அவ்விருவர் நட்பையும் வியந்துபாடிய பாடலின் கருத்தை எழுது.

8. கண்ணகனார் பாடிய பாடலின் கருத்து என்ன?

9. இப்பாடத்தால் நீங்கள் அறிந்துகொண்ட நீதிஎன்ன?

## கட்டுரைப் பயிற்சி

1. 'நட்பின் சிறப்பு' என்பதுபற்றிப் பதினைந்து வரியில் எழுது.

2. பிசிராந்தையாரும், கோப்பெருஞ் சோழனும் கொண்ட நட்பைப்பற்றிப் பதினைந்து வரியில் எழுது.

## மொழிப் பயிற்சி

1. 'பாண்டிய நாட்டை அறிவுடைநம்பி என்னும் மன்னன் ஆண்டுவந்தான்'. எழுவாயை முதலில் வைத்து மாற்றி எழுது.

2. வாக்கியங்களில் அமைத்தெழுது :—

உள்ளம்உவந்து, இயலவில்லை, ஐயுறல், சோர்வடைந்து.

3. உவப்புக்கடல், உவர்ப்புக்கடல்; இவற்றின் வேறுபாட்டை விளக்கு.

4. பிரித்தெழுது :—

மண்ணுலகம், அவ்வரசன், அன்னப்பறவை, ஆற்றிடை.

# 8. திருமாவளவன்

முடியுடை வேந்தர் மூவருள் வளம்பெற்ற சோழ நாட்டை ஆண்டவர் சோழ மன்னர்களாவார்கள். பொன்னி என்னும் புகழ்பெற்ற காவிரியின் வளத்தால் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாகச் சிறப்புடன் விளங்கும் சோழநாட்டைப் பல துறைகளிலும் முன்னேறச் செய்த மன்னர்களுள் திருமாவளவன் என்ற கரிகால்சோழன் சிறப்புற்றவனாவான். காடுகளை அழித்து நாடாக்கிக் காவிரியின் இருபக்கங்களிலும்கரை அமைத்து,விவசாயத்தை வளர்த்துச் 'சோழவளநாடு சோறுடைத்து' என்று புகழும்படி செய்தான். இவ்வாறு தன் நாட்டை வளம் பெறச்செய்த காரணத்தால் அவன் கரிகாற் பெருவளத்தான், திருமாவளவன் முதலான பல பெயர்களைப் பெற்றான். நாட்டு ஆட்சி முறையிலும், போர்த்துறையிலும் தன் காலத்தில் தனக்கு நிகரானவர் ஒருவரும் இன்றி, இமயமலைவரை சென்று இமயத்தில் தனது புலிக் கொடியை நாட்டிப் புகழ்பெற்ற அப்பேரரசனின் வரலாறு மாணவர்கள் அறிந்து மகிழ்வதற்கு உரியதாகும்.

உறையூரில் இருந்து அரசாண்ட சோழர் பரம்பரையில் இளஞ்சேட் சென்னி என்று ஒரு சோழன் இருந்தான். அச்சோழனுடைய பிள்ளையே கரிகாலன். அவன் எல்லாக் கலைகளையும் இளமையில் கற்றுப் புலமை பெற்றான். சிறுவனாயிருக்கும்போதே தந்தையை இழந்தனன். நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தின்

காரணமாக உறையூரை விட்டு ஓடிவிட்டான். எப்படியும் அவனால் தமது முயற்சிக்கு இடையூறு விளையும் என்று எண்ணிய பகைவர், கரிகாலனைத் தேடிப்பிடித்துச் சிறையில் அடைத்தனர். கரிகாலன் சிறையில் இருக்கும்போது அச்சிறைக்கே நெருப்பு வைத்துக் கொல்ல நினைத்து அவ்வாறே செய்தனர். சிறையிலிருந்து தப்பிப்பிழைத்து வெளியேறினான். அப்பொழுது அவன் கால் நெருப்புப்பட்டுக் கறுகிப்போன காரணத்தால் **கரிகாலன்** என்ற பெயர் அவனுக்கு உண்டாயிற்று என்று சொல்லப்படுகிறது. சிறையிலிருந்து தப்பியோடிய கரிகாலன் தனது தாய் மாமனான இரும்பிடர்த் தலையார் என்னும் பெரியாரின் பாதுகாப்பில் சிலநாள் இருந்தான். அவ்வமயம் சோழநாடு தகுதி வாய்ந்த அரசன் இல்லாமல் குழப்பத்துடன் இருந்தது. சோழநாட்டுப் பெருமக்கள் ஆதிகால வழக்கப்படி அரச யானை ஒன்றை அனுப்பி நாட்டுக்குரிய அரசனை நாடி வருமாறு அனுப்பினர். யானை, கரிகாலன் இருக்குமிடம் சேர்ந்து அவனைத் தூக்கிக்கொண்டு வந்தது. சோழநாட்டு மக்கள் அளவில்லா மகிழ்ச்சி அடைந்து, கரிகாலனை அந் நாட்டின் அரசனாக முடிசூட்டினர். அவனும் நாட்டில் கலகம் செய்த பகைவர்களை வென்று அமைதியை நிலைநாட்டினான்.

குமரிமுதல் இமயம்வரை உள்ள நிலப்பரப்பைத் தனது ஆட்சியில் கொண்டுவர விரும்பிய கரிகாலன் பல போர்களில் வெற்றிபெற்றுத் தன் எண்ணத்தை நிறைவேற்றினான். அவன் செய்த போர்களுள் முக்கியமானவை : சேர பாண்டியருடன் வெண்ணி என்னும்

இடத்தில்செய்த போர்; தமிழ் நாட்டில் இருந்த பல குறுநில மன்னர்களுடன் செய்த போர்; வடநாட்டுப் போர்; முதலானவைகளாகும். ஈழநாட்டின் மீதும் படையெடுத்துச் சென்று வென்முன் என்றும் சொல்லப்படுகிறது. இவ்வாறு வெற்றிமேல் வெற்றி பெற்று விளங்கிய கரிகாலன், நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய மறந்தானல்லன். மன்னன் என்பான் மக்களுக்கு நன்மை செய்பவனுக இருக்கவேண்டும் என்பதை உணர்ந்த கரிகாலன் தனது நாட்டில் பஞ்சம் இன்றி மக்கள் நல்வாழ்வு வாழவும், காவிரியாற்றில் உண்டாகும் வெள்ளத்தால் மக்களுக்குத் தீங்குநேராது இருக்கவும் காவிரியின் இருமருங்கும் கரையமைக்க ஏற்பாடுசெய்தான். பல கிளைக்கால்களையும் வெட்டும்படி செய்து, மதகுகள் அமைத்து விவசாயத்தை விழுமியதாகச் செய்தான். கோட்டைகள் பல கட்டினுன். மக்கள் கடவுளை வழிபட்டு நன்னெறி அடைய ஆலயம் பல கட்டினுன். சோழ நாட்டின் தலைநகரமாகவும், துறைமுகப் பட்டினமாகவும் விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்தை வியாபாரத் துறையில் மேன்மையுறச் செய்தான். சீனர், சாவகர் முதலான அயல் நாட்டார் ஒரு விதமான தடையும் இன்றித் தமிழ் நாட்டினருடன் வியாபாரம் செய்ய வசித்துவந்தனர். அவன் ஆட்சியில் சமய ஒற்றுமை நிலவியது.

ஒருமுறை கரிகாலனிடம் தங்கள் வழக்கைச் சொல்லி நியாயம்பெற இரண்டு முதியவர்கள் வந்தனர். அவர்கள் இளையவனுக இருந்த கரிகால் வளவனைக் கண்டு "இச்சிறுவனு நமக்கு நீதி வழங்கப்போகிருன்"?

என்று சந்தேகத்துடன் சென்றனர். அவர்கள் அகக் கருத்தை முகத்தால் உணர்ந்த கரிகாலன், உள்ளே சென்று முதியவரைப்போல் மாறுவேடம் கொண்டு வந்து அவர்கள் வழக்கை விசாரித்துத் தீர்ப்புக்கூறினன். அம்முதியவனுடைய தீர்ப்பைக்கேட்டு அவனைப் புகழ்ந்



திருமாவளவன் நீதிமன்றம்

தனர். அப்பொழுது கரிகாலன் அவர்கள் எதிரிலேயே தனது மாறுவேடத்தைக் களைந்து தான் யார் என்பதை உணர்த்தினுன். வந்த முதியவர் இருவரும் தாங்கள் நினைத்தது தவறு என்று எண்ணி, "ஒருவருடைய உருவத்தைக் கண்டு இகழக்கூடாது; சிலர் உருவத்தாற் சிறியவராயினும், எளியவராயினும் அறிவினுல் மேன்மை பெற்றவர்களாக இருப்பர்" என்னும் உண்மையை உணர்ந்து அரசனை வணங்கி வாழ்த்திச் சென்றனர் என்று கரிகாலன் நீதி வழங்கிய முறையைப்பற்றி ஒரு வரலாறு சொல்லப்பட்டு வரு

கின்றது. இதன் மூலம் கரிகாலனுடைய அறிவின் திறமையையும் நீதியின் நேர்மையையும் நாம் அறிந்து கொள்ளலாம் அல்லவா?

பெருவீரனுகவும், பேரறிஞனுகவும் விளங்கிப் புகழ் பெற்ற கரிகாலன் செந்தமிழ் மொழியின் வளர்ச்சியில் சிந்தை செலுத்தாது இருந்திருப்பானே? தமிழை வளர்த்தான்; தமிழ்ப்புலவர்களே ஆதரித்தான்; புலவர் பலரால் புகழப்பெற்றுன். உருத்திரன் கண்ணனுர் என்பவர் பட்டினப்பாலை என்னும் பாடலால் கரிகால்வளவனைப் புகழ்ந்து போற்றினுர். அதற்குப் பரிசாக அவன் பதினறு இலட்சம் பொன் அளித்தனன். முடத்தாமக் கண்ணியார் என்னும் முதுபெரும் புலவர் பொருநர் ஆற்றுப்படை என்னும் பாடலால் வளவனின் புகழை வாழ்த்தினுர். இவ்வாறே மருத்துவன் தாமோதரனுர் முதலான புலவர் பெருமக்கள் பலராலும் போற்றப்பட்டு என்றும் அழியாப் புகழைப் பெற்றுன். கரிகாலன் காலத்தில் தமிழ் நாட்டில் இசை, நடனம் முதலிய கலைகள் உயரிய நிலையில் விளங்கின.

கரிகால் வளவன் சமயவேற்றுமை சிறிதும் இல்லாதவன். அவரவர்கள் தங்கள் தங்கள் சமய ஒழுக்கப் படி இறைவனை வழிபடலாம் என்று மக்களுக்கு அறிவுறுத்தினுன். அவன் காலத்தில் பௌத்த, சமண சமயத்தவர்கள் பலரும் தமிழ் நாட்டில் இருந்தனர். காவிரிப்பூம்பட்டினத்திலே சமணப் பள்ளிகளும், புத்தவிகாரங்களும் இருந்தன. அன்றியும் வியாபாரத்தின் பொருட்டு அயல் நாடுகளிலிருந்து வந்த பலரும் தங்கள் கருத்துப்படி கடவுளை வழிபட்டனர்.

தொண்டை நாட்டைத் தனது ஆட்சியில் கொண்டு வந்து அதன் தலைநகரான காஞ்சிமா நகரத்துக்குச் சுற்றுமதில் எழுப்பி, ஏகாம்பரநாதர் கோயிலைப் புதுப்பித்து வழிபட்டான். கரிகால்வளவனுடைய புகழைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் காணலாம். அவன் அரசாண்ட காலம் கி. மு. முதல் நூற்றாண்டு என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இங்ஙனம் தமிழ் நாட்டின் புகழை இமயம்வரை பரப்பி இமயத்தில் புலிக்கொடியை நாட்டிய இணையற்ற வீரனாகவும், வேளாண்மைத் தொழிலை வளர்த்த தாளாண்மை உள்ளவனாகவும், தமிழ்ப் புலவர்களை ஆதரித்துத் தமிழ் மொழியை வளர்த்த தமிழ் அரசனாகவும், நீதியும் திறமையும் உள்ள நேர்மையாளனாகவும் விளங்கிய கரிகால் வளவன் புகழ் சரித்திரத்தில் முக்கியம் வாய்ந்ததாகும். மாணவர்கள் அனைவரும் தமிழ் நாட்டுச் சரித்திரங்களை உணர்ந்து முன்னேற்றம் அடையவேண்டும்.

## அருஞ்சொற் பொருள்

பொன்னி=காவிரி நதிக்கு வழங்கும் வேறு பெயர்

முதியவர்=வயதானவர்கள் (கிழவர்கள்)

வளவன்=சோழன்

மருங்கு=பக்கம்

சமணப்பள்ளி—சமணர் வழிபடும் இடம்

புத்தவிகாரம்=புத்தர் கோயில்

## வினாக்கள்

1. சோழநாட்டை வளம்பெறச் செய்த சோழ மன்னன் யார்? அவனுக்கு வழங்கும் வேறு பெயர்களை எழுது.

2. கரிகாலன் என்று பெயர்வரக் காரணம் என்ன ?

3. கரிகாலன் சோழநாட்டு மன்னனான வரலாற்றை எழுது.

4. கரிகாலன் செய்த போர்களுள் மூன்று எழுது.

5. கரிகாலன் தன் நாட்டிற்செய்த நன்மைகளை எழுது.

6. கரிகாலன் காலத்தில் சமய ஒற்றுமை நிலவியது என்பது எப்படித் தெரிகிறது ?

7. திருமாவளவனின் நீதிவழங்கும் நேர்மையை ஒரு வரலாற்றால் விளக்கு.

8. கரிகாலனைப் பாடிய புலவர்கள் யார் யார்?

9. 'பட்டினப்பாலை' பாடியவர் யார் ? அவர் பெற்ற பரிசு என்ன ?

10. கரிகாலன் சிறப்பினைத் தொகுத்து எழுது.

## பயிற்சிகள்

1. பிரித்து எழுது :—

நெற்களஞ்சியம், நிலப்பரப்பு.

2. வாக்கியத்தில் அமைத்து எழுது :—

அளவில்லா மகிழ்ச்சி, சிந்தை செலுத்தாது.

3. ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் எழுது :—

வீரன், வேந்தர், முதியவர், அறிஞன், புலவன், அயல் நாட்டார்.

4. இப்பாடத்திலிருந்து இரண்டு வினைவாக்கியங்களை எடுத்து எழுது.

# 9. பரமார்த்தகுரு கதை

(வாடகைமாடு ஏறிப்போதல்)

அநியாயபுரியிலே 'அஞ்ஞான நிலயம்!' என்றொரு மடம் இருந்தது; அந்த மடாதிபதியே பரமார்த்தகுரு என்பவர். மட்டி என்றும், மடையன் என்றும், பேதை என்றும், மிலேச்சன் என்றும், மூடன் என்றும் ஐவர் சீடர்கள் அவரை அடுத்திருந்தார்கள். அவர்கள் நிழல்போல, அவரை விடாது பின்பற்றித் திரிந்தனர்.

ஒருநாள் அவர்கள் அறுவரும் நெடுந்தூரம் பயணம் போக நேர்ந்தது. அதனால் தமது குரு கிழவராகையால் அத்தனை தூரம் நடவார் என எண்ணின சீடர்கள் மோழை மாடு ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு வந்தார்கள். அதற்கு வாடகை நாளொன்றுக்கு மூன்று பணம் என்று தீர்மானமாயிற்று. பல வேலைகளின் மும்முரத்தால் அவர்கள் அதிகாலையிற் புறப்பட முடியாமல் விடிந்தபின் ஏழரை நாழிகைக்குப் புறப்பட்டார்கள். அப்போது கோடைக்காலம். ஆகையால், அவர்கள் நடக்க, நடக்க நெருப்புக்குழம்பை மேலே அள்ளித் தெளித்ததுபோல் வெயில் எரித்தது. இடைவழியில் ஒரு மரமும்கிடையாது. வெட்ட வெளியில் மணல் தரையில் அவர்கள் அகப்பட்டுக்கொண்டார்கள். ஆகையால், அவர்கள் நடந்து வழிகடந்து செல்லச் செல்ல வெயிலின் வெப்பம் சகியாமல் செங்கிரைத் தண்டுபோல், கிழக்குருக்கள் துவண்டு சாய்ந்து,

மாட்டின் மேலிருந்தபடியே கீழே விழத் தலைப்பட்டார். அதைக்கண்ட சீடர்கள் பதைபதைத்துத் துடிதுடித்துத் தமது குருவைத் தாங்கிக்கொண்டு மாட்டை



பரமார்த்த குரு வாடகைமாடு ஏறிச்செல்லுதல்

நிறுத்தினார்கள். குருவைக் கீழே இறக்கி நிழலிற் கிடத்தப்பார்த்தார்கள். அங்கேநிழலேது? கிழலேது? மாட்டின் நிழலே அருநிழலா யிருந்தது. ஆகையால், அவர்கள் குருவை அந்த நிழலிற் கிடத்தித் துணியால் விசிறினார்கள். கொஞ்ச நேரம் ஆனபோது குருவுக்குக் களைப்பு தீர்ந்தது. குளிர்காற்று வீசியது. மறுபடியும் அவர்கள், குருவை மாட்டின்மேல் ஏற்றி, மெள்ள மெள்ள நடத்திக்கொண்டு போனார்கள். விளக்கு வைப்பதற்குள் ஒரு சிற்றூரில் தங்கினார்கள். அங்கே ஒரு சிறு கடையில் இரவைக் கழிக்க ஏற்படுத்திக் கொண்டு, அவர் மாட்டுக்காரனுக்கு மூன்று பணத்தை நீட்டினார்கள். அவன், "அது போதாது" என்றான். அதற்கு அவர்கள் "ஏன் போதாது? உன்னோடு பேசி முடித்தது மூன்று பணந்தானே!" என்றார்கள். அவன் அதனை மறுத்து, "மாடு வாகனமா யிருந்ததற்கு

மூன்று பணம் சரிதான். குடையாய் இருந்து வெயிலைத் தடுத்ததற்குக் கூலி எங்கே?" என்றான்.

சீடர்கள், "அநியாயம், அநியாயம்; இது மிகவும் அநீதம். இப்படிக் கூலி கேட்பவர்களை நாங்கள் எங்கேயும் கண்டதில்லை. கேட்டதில்லை" என்று கூச்சலிட்டார்கள். பிறகு மாட்டுக்காரனுக்கும் அவர்களுக்கும் சண்டையாய்ப் பெருங்கலகம் உண்டாயிற்று. ஊரார் கேட்டு, சிறியோர் பெரியோர் எல்லாம் கூட்டமிட்டோடி வந்தார்கள். அங்குத் திரண்ட மக்களில் புத்தி சாலியான ஒருவன் சந்தடியை விலக்கி, கூச்சலை அடக்கி இருவர் வழக்கையும் தீர விசாரித்து "நான் ஒரு தீர்ப்புச் சொல்லுகிறேன். அதன்படி நடக்க உங்களுக்குச் சம்மதந்தானா? சொல்லுங்கள்" என்று கேட்டான். அவர்கள் 'ஓ' என்று உடன்பட்டார்கள்.

பிறகு அவன் அவர்களை நோக்கி, "கொஞ்ச நாளைக்கு முன்னே, நான் ஒரு தூரதேச யாத்திரை போயிருந்தேன். இடை வழியில் ஒரு நாள் இரவில் ஒரு சத்திரத்தில் தங்கினேன். அங்கே இடம் வாடகைக்குக் கொடுத்ததன்றி, "உனக்குச் சோறு கறி ஏதாவது விலைக்கு வேண்டுமா?" என்றார்கள். அதற்கு நான் "எனக்கொன்றும் வேண்டாம்; நான் கட்டுச் சோறு கொண்டுவந்திருக்கிறேன்" என்றேன்.

அந்தச் சமயத்தில் அங்கே மற்றவர்களுக்கு விற்பதற்காக, ஒரு பெரிய ஆட்டுத் தொடைக் கறியை இரும்புக் கம்பியில் கோத்து, நெய் தடவித் தணலின்மேல்

காட்டிப் பக்குவமாய்ச் சுழற்றிச் சுழற்றி ஓராள சுடடுக் கொண்டிருந்தான். அது சிவக்க வேக வேக அதிற் பூசிய நெய் உருகி நெருப்பில் துளித்துளியாக விழுந்து புகைய ஆரம்பித்தது. அப்பொழுது அதன் வாசனை மெத்தப் பரிமளமாயிருந்தது. 'நாம் கொண்டுவந்த கட்டமுதை இந்த மணத்தோடே உண்பது நல்லது' என்றெண்ணின நான், அந்தத் தொடைக் கறியை அப்படியே சற்று நேரம் விடாமல் சுழற்றிக் கொண்டிருக்கும்படி அந்த ஆளைக் கேட்டுக்கொண்டேன். அவன் அதற்குடன்பட்டு அங்ஙனமே செய்தான். நான் சோற்றை அவிழ்த்தெடுத்து, சீலையோடே ஒருகையால் அந்தப் புகையின் மேற் பிடித்துக்கொண்டு மறு கையால் சீக்கிரம் சீக்கிரம் அதை அள்ளியள்ளி அவ்வாசனையின் பெருமையால் அதிக இன்பமாக உண்டேன். பிறகு நான் புறப்பட்டுப் போகவேண்டும் என்று எழுந்தேன். விடுதிக்காரன் "வாசனை முகர்ந்ததற்குக் கூலியெங்கே?" என்று என்னைக்கேட்டான். அதற்கு நான் "ஏது கூலி?" என்றேன். அதற்கு அவன் "வாசனை முகர்ந்ததனால் அல்லவா வேறு கறியின்றி இன்பமாய்ச் சோறு தின்றாய்? கூலிகொடுத்தே தீரவேண்டும்", என்றான்.

மறுபடியும் நான், "கறிக்குத்தானே கூலி ; வாசனைக் குக் கூடவா கூலி?" என்றேன். அவன் "ஆம் கொடுக்க வேண்டும்" என்றான். நான் 'கொடேன்' என்று எழுந்து நடந்தேன். அவன் என்னை 'விடேன்' என்று பின் தொடர்ந்தான். இந்தப்படி நாங்கள் இருவரும் வழக்கிட்டுக்கொண்டு அந்த ஊர் அதிகாரியிடத்தில் முறையிட்டோம்.

அவனே மகாநிபுணன்; பூரண பண்டிதன்; புத்திமான்; வல்லவன்; நுட்பமாய் நியாயம் கூறுபவன்; அந்தப் பெரியோன் செய்த தீர்ப்பைக் கேளுங்கள். "கறிக்கு விலை பணம்; கறியின் மணத்துக்குவிலை, பணத்தின் மணம்" என்று விடுதிக்காரனை அருகழைத்து, பணம் நிறைந்த பையை எடுத்து அவன் மூக்கிலே அழுந்தத் தேய்த்தான். அவனும், "ஐயோ, ஐயோ, மூக்குப்போயிற்று, மூக்குப்போயிற்று; போதும், போதும் கூலிபோதும்; இந்த மட்டில் வந்த கூலிபோதும் என்னை விட்டுவிடும், நான் ஓடிப்போகிறேன்" என்றான். பார்த்தீர்களா இதுதான் நல்ல தீர்ப்பு; இதைவிட வேறு நியாயம் கிடையாது; இதைப் போலவே உங்களுக்குத் தீர்ப்புச் சொல்லுகிறேன்; "மாடேறினதற்குக் கூலி, பணம். மாட்டின் நிழலுக்குக் கூலி பணத்தின் நிழல். ஆனால் இப்போது அஸ்தமித்து விட்டபடியால், பண நிழல் கிடைப்பதருமை; அதற்குப் பதிலாகப் பண ஓசையை இவன் காதிலே கேட்பிக்க வேண்டும்" என்றான். என்று சொல்லி, அவன் மாட்டுக்காரனைச் சிக்கெனப் பிடித்துப் பணம் நிறைந்த ஒரு பையை அவன் காதிலேவிடாமல் அடித்து, "பண ஓசை கேட்டாயா? கேட்டாயா?" என்றான். அவன், "கேட்டேன், கேட்டேன். போதும் போதும்; கூலிபோதும்; ஐயா என்னை விட்டு விடுங்கள்" என்று கூச்சலிட்டான்.

வழிப்போக்கன் அவன் காதில் அடிப்பதை நிறுத்தி, பரமார்த்த குருவை நோக்கி, "என்ன சுவாமி! இவனை அனுப்பிவிடலாமா?" என்று கேட்டான். குரு "அனுப்பி விடலாம்" என்றார்.

அப்பால் குரு அந்த மாட்டுக்காரனிடம் மாடேறி வந்ததற்குக் கூலி மூன்று பணத்தைக் கொடுத்து, "உன் மாடு இனி எனக்கு வேண்டாம். இந்தத் துன்பம் போதும், உன் மாட்டை ஓட்டிக்கொண்டுபோ; நான் மெள்ள மெள்ள நடந்து போகிறேன்" என்று சொல்லி அவனை வழி அனுப்பிவிட்டு அதிசாமர்த்தியமாய் வழக்குத் தீர்த்த வழிப்போக்கனை நோக்கி, "ஐயா, அற உருவே, நீர் தக்க நேரத்தில் வந்து உதவினீரே! கடவுள் தான் உம்மைக் கொண்டுவந்து விட்டிருக்கவேண்டும். நீர் செய்த நன்றியை நாங்கள் என்றும் மறவோம். உம்மைக் கடவுள் காப்பார்" என்று அவனை வாழ்த்தி அனுப்பினர்.

—வீரமாமுனிவர்.

## அருஞ்சொற் பொருள்

பயணம்=பிரயாணம்
சகியாமல்=தாளாமல்
துவண்டு=வதங்கி
அறவுரு=தரும வடிவம்
திரண்ட=கூட்டங் கூடின
தணல்=நெருப்பு
பரிமளம்=இனிய வாசனை
சிக்கென=உறுதியாக

## வினுக்கள்

1. பரமார்த்தகுரு என்பவர் யார்? அவருடைய சீடர்கள் யாவர்?

2. வெயிலின் கொடுமை எவ்வாறு இருந்தது என்று சொல்லப்பட்டுள்ளது?

3. மூன்றுபணம் கூலி கொடுத்ததை மாட்டுக்காரன் வாங்க மறுத்தது ஏன்?

4. மாட்டுக்காரனுக்கும் சீடர்களுக்கும் உண்டான தகராறைத் தீர்த்து வைப்பதற்காக வந்தவன் சொன்ன கதையைச் சுருக்கமாக எழுது.

5. மாட்டின் நிழலுக்குக் கூலி கேட்டவனுக்கு என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது?

6. தங்கள் வழக்கைத்தீர்த்த வழிப்போக்கனை குரு எவ்வாறு வாழ்த்தி அனுப்பினுர்?

## பயிற்சிகள்

1. வாக்கியங்களில் அமைத்தெழுது ;—

   துடிதுடித்து; பரிமளம்; உடம்பட்டு; துளித் துளியாக;

2. அங்கே ஒரு சிறு கடையில் இரவைக் கழிக்க ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் மாட்டுக்காரனுக்கு மூன்று பணத்தைக்கொடுத்தார்கள்–இவ்வாக்கியத்திலுள்ள வேற்றுமை உருபுகள் உள்ள சொற்களை எடுத்து எழுதி என்ன வேற்றுமை என்று எழுது.

# 10. இளையான்குடி மாறனார்

நமது நாட்டில் இரப்பவர்க்கு இல்லை என்று சொல்லாமல் தம்மிடம் உள்ள பொருளை வாரிவழங்கிய வள்ளல்கள் பலர் வாழ்ந்தனர். வறுமை உற்ற காலத்தும் வந்தவரை அன்போடு வரவேற்று உபசரித்த பல பெரியார்கள் வாழ்ந்தனர். "தையும், கொடையும் பிறவிக்குணம்" என்றபடி தருமம் பலசெய்து தமிழ் நாட்டின் புகழை வளரச்செய்தனர் சிலர். இவ்வாறே செய்வதற்கு அருமையான செயல்கள் பலசெய்து ஆண்டவனுடைய அருளுக்கு உரியவர்களான நாயன்மார்களுடைய கதைகள் நம் நாட்டில் வழங்குகின்றன. அவற்றுள் இளையான்குடிமாற நாயனார் என்பவரின் கதையைத் தெரிந்துகொள்வோம்.

"சோழவளநாடு சோறுடைத்து" என்று ஔவையாரால் போற்றப்பட்ட வளம்பெற்ற நாட்டிலே, இளையான்குடி என்னும் ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் உலகம் செழிக்க உழவுத்தொழில் செய்து, மக்களையும், மன்னனையும் வாழச்செய்யும் வேளாளர் குலத்திலே சிவ பக்தியில் சிறந்த மாறனார் என்பவர் ஒருவர் இருந்தார். 'அடியார் வழிபாடே ஆண்டவன் வழிபாடு' என்பதை உணர்ந்த அவர் தம் வீட்டுக்கு வருகின்ற சிவனடியார்கள் பலரையும் உள்ளன்போடு வரவேற்று, வணங்கி இனிய சொற்களைப் பேசி, முறைப்படி செய்யவேண்டிய உபசாரங்களை யெல்லாம்செய்து, அவர்கள் மகிழ

அறுசுவை உண்டி அளித்து அன்புடன் வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு தினமும் அடியார்கள் பலரை ஆதரித்து வந்த அவருடைய அன்பின் பெருமையை உலகிற்குத்



சிவனடியாரை மாறனர் வரவேற்றல்

தெரிவிக்க விரும்பி ஆண்டவன் அவரை ஏழையாகும் படி செய்தார். வறுமை அடைந்ததனுல் வருத்தம் அடையாமல் தாம் செய்து வந்த அடியார்

வழிபாட்டைச் சிறிதும் குறைவின்றிச் செம்மையுடன் செய்து வந்தார். அவருடைய செல்வம் குறைந்தது. நிலங்களையும், மாடு கன்றுகளையும், மற்றுமுள்ளபொருள் களையும் ஒவ்வொன்ருக விற்றுத் தம்முடைய கடமை யை நிறைவேற்றி வந்தார்.

ஒரு நாள் இரவு பெருமழை பெய்துகொண் டிருந்தது. பகல் முழுதும் உணவிற்கு வழி இன்றி, உதவிசெய்வார் ஒருவரும் இல்லாமல் உள்ளம் சோர்ந்து, எல்லாம் இறைவன் திருவருளே என்று எண்ணி இறை வனைத் தியானித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரைச் சோதிக்க ஆண்டவனே சிவனடியார்போல வேடம்கொண்டு வந்து அவர் வீட்டுக் கதவைத் தட் டினர்; மாறனர் கதவைத் திறந்தார்; மழையில் நனைந்து குளிரால் நடுங்கித் தம் வீட்டுக்கு வந்துள்ள அடியா ரைக் கண்டார்; அவரை உள்ளே அழைத்துக் கொண்டு சென்று மழையில் நனைந்த அவருடைய உடலைத் தூய ஆடையால் துடைத்து வேருெரு நல்லாடையைக் கொடுத்து உடுக்கச் செய்து ஆசனத்தில் அமரும்படி செய்தார். வந்த அடியார்க்கு இன்னமுதூட்ட விரும்பிய மாறனர் உள்ளே சென்று தமது மனைவியைப் பார்த்து "அடியார்க்கு இப்பொழுது அமுதளிக்க வேண்டுமே! என்ன செய்யலாம்!" என்ருர். கணவன் மனக்கருத்தை அறிந்து நடக்கும் மனைவியார் மனம் வருந்தி 'இப் பொழுது என்ன செய்வது? இந்த நேரத்தில் யாரும் நமக்கு உதவமாட்டார்களே! வீட்டிலும் ஒன்றும் இல்லையே! என்ன செய்வது? என்று சொன்னர். பிறகு சிறிது நேரம் சிந்தித்து "இப்பொழுது ஒன்று செய்யலாம்;

இன்று காலையில் வயலில் விதைத்த நெல்லை வாரிக் கொண்டு வந்தால் அமுது தயாரிக்கலாம். இதைவிட வேறு ஒரு நல்ல வழியும் எனக்குத் தெரியவில்லை'' என்று சொன்னர். இதைக்கேட்ட மாறனர் மனம் மகிழ்ந்து உடனே ஒரு பெரிய கூடையுடன் நெல்லை வாரிக்கொண்டு வரப் புறப்பட்டார். மழைக் காலம்; இருள்மிகுந்த இரவு நேரம்; உலகையே இருள் கவ்விக்கொண்டது போல இருந்த அந்த இருட்டிலே, கொட்டும் மழையிலே கூடையைத் தலைமீது கவிழ்த்துக் கொண்டு நீர்நிறைந்த பாதையிலே நேர்வழியும் தெரியாமல், காலால் தடவிக்கொண்டு தம்முடைய வயலுக்குப்போய்ச் சேர்ந்தார்.

அதிக மழையினுல் நீர்நிறைந்து மேலே மிதந்து கொண்டிருந்த நெல்முளைகளைக் கைகளால் சேர்த்து வாரிக் கூடையை நிரப்பித் தலையிலே சுமந்து கொண்டு வீட்டுக்கு வந்தார். அவருடைய மனைவியார் அவற்றை வாங்கிக்கொண்டு 'அடுப்பிற்கு விறகு இல்லையே என்ன செய்வது' என்று சொல்ல, உடனே மாறனர் வீட்டின் மேற்கூரையில் இருந்த மரச்சட்டங்கள் சிலவற்றை அறுத்துக் கொடுத்தார். அவற்றைக்கொண்டு அடுப்பை மூட்டி, ஈரமான முளை நெல்லை நன்ருகப் பதம் பெற வறுத்து அரிசியாக்கி உலையிலிட்டுச் சோறு சமைத்தார். பிறகு கறிக்கு வேண்டிய பொருள் ஒன்றும் இல்லாமையால் வீட்டுத் தோட்டத்திலே போய் அங்கு முளைத்திருந்த கீரைகளைப் பறித்துக்கொண்டு வந்து மனைவி கையில் கொடுத்தார். அவற்றை நன்ருக ஆய்ந்து தமது திறமையினுல் பல கறிகள் செய்து,

"அடியாரை அமுதுசெய்ய அழையுங்கள்" என்று மாறனாரிடம் கூறினர்.

மாறனார், உறங்குபவர்போல் நடித்து உண்மைகளை அறிந்துகொண்டு அங்கே அமர்ந்திருந்த அடியாரை நோக்கி "ஐயனே! அமுதருந்த எழுந்தருளும்" என்று அழைத்தார். அப்பொழுது அடியார் சோதிவடிவமாக எழுந்து காட்சி தந்தார். மாறனாரும், அவருடைய மனைவியாரும் அதிசயத்தோடு அசைவற்று நின்றார்கள். அப்பொழுது, வேண்டுவார் வேண்டுவதை விரும்பிக்கொடுக்கும் ஆண்டவன், மாறனாரையும் அவர் மனைவியாரையும் நோக்கி, "மெய்யன்பர்களே! உங்கள் அருந்தொண்டைக் கண்டு அகமகிழ்கின்றோம். எல்லாத் தானங்களிலும் அன்னதானமே சிறந்தது என்பதை உணர்ந்து, அடியார்களுக்கு அன்னம் அளித்து ஆதரித்த உமது பெருமையை உலகத்தார்க்கு அறிவிக்க நாமே அடியார் வேடம்கொண்டு உம்மைச் சோதித்தோம். நீங்கள் இருவரும் நம்மை அடைந்து பேரின்பத்தைப் பெற்று உய்வீர்களாக" என்று கூறி மறைந்தார்.

மாறனாரும் அவர் மனைவியாரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். இருவரும் இறைவன் அருளைப்பெற்று என்றும் அழியாப் புகழைப் பெற்றனர்.

## அருஞ்சொற் பொருள்

இரப்பவர்=யாசிப்பவர் வறுமை=தரித்திரம்
இன்னமுது=இனிய உணவு அருந்த=உண்ண
பேரின்பம்=மோட்சம் மட்டற்ற=அளவில்லாத

## வினக்கள்

1. இளையான்குடி மாறனர் அடியார்களை எவ்வாறு ஏன் உபசரித்தார் ?

2. வறுமையுற்றபோதும் தம் கடமையை மாறனர் எங்ஙனம் நிறைவேற்றினர் ?

3. மழையில் நனைந்து வந்த அடியார்க்கு மாறனர் அமுதளிக்க என்ன செய்யலாம் என்று கேட்டபோது அவர் மனைவியார் கூறியதென்ன ?

4, மாறனர், எவ்வாறு நெல்லை எடுத்துக்கொண்டு வந்தார்?

5. 'அமுதருந்த எழுந்தருளும் ஐயனே'—என்று மாறனர் அடியாரை அழைத்தபோது அவர் கண்ட காட்சி என்ன ? அடியாரைப் பார்த்து ஆண்டவன் கூறியவற்றை எழுது.

6. இப்பாடத்தினல் நீங்கள் தெரிந்துகொண்ட உண்மை என்ன ?

## பயிற்சிகள்

1. பிரித்தெழுது :

சிவனடியார், குறைவின்றி, மேற்கூரை, அமுதளிக்க ; மெய்யன்பர்.

2. சேர்த்தெழுது :

இரப்பவர்க்கு+இல்லை ; திரு+அருள் ; முளைத்து+இருந்த ; அன்னம்+தானம்.

3. வாக்கியத்தில் அமைத்து எழுது :—

உள்ளன்புடன் ; நிறைவேற்றி ; அகமகிழ்ந்து ; மட்டற்ற.

4. திருவருள், செம்மையுடன், வறுமையற்ற—இத்தொடர்களில் உள்ள உடம்படு மெய்களை எடுத்து எழுது.

# 11. கடிதம்

அன்பு கெழுமிய தம்பி ஆனந்தனுக்கு:—

இவ்விடம் அனைவரும் நலம். உனது நலம் அறிய விரும்புகின்றேன். நீ பள்ளிக் கூடத்தில் நன்ருகப் படித்துக்கொண்டு வருவாய் என நம்புகின்றேன். நீ பள்ளியில் படிக்கும்போது கவனிக்கவேண்டிய முக்கியமான செய்திகள் சிலவற்றை இக்கடிதத்தின் மூலம் அறிவிக்க விரும்புகிறேன். அவற்றை நன்ருகப் படித்து நல்லறிவு பெற்றுச் சிறப்புறுவாயாக.

பள்ளிக்கூடம் என்பது கலைக்கோயிலாகும். அங்குள்ள ஆசிரியர்கள் அக்கோயிலில் உள்ள தெய்வங்களாவார்கள். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்னும் முதுமொழியை மறவாதே. ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களைக் கருத்துடன் கவனித்துப்படி. படிப்பினுல் தான் மக்கள் உயர்வடைய முடியும். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.' கண்ணுடையர் என்பர் கற்ருேர்' என்னும் முன்னுேர்களின் பொன்னுரைகளைப் பொன்னைப்போல் போற்று, 'கற்ருேர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு' என்பதை நினைவில் இருத்து. எப்பொழுதும் கருமமே கண்ணுயிருந்து வெற்றிபெற விரும்பு. வீண்பொழுது போக்கும் வீணர்களுடன் சேர்ந்து காலத்தை வீணுக்காதே. காலத்தின் அருமையை உணர்ந்துநட. அன்றன்று நடக்கும் பாடங்களை அன்றன்றேபடி.

ஆசிரியர் கொடுக்கும் வீட்டு வேலைகளைத் தினமும் செய்து முடித்துவிடு. தெரியாதவற்றை ஆசிரியரிடம் கேட்டு அறிந்துகொள். அவ்வப்பொழுது உண்டாகும் ஐயங்களை அப்படியே விட்டுவைத்து வேதனைப்படாதே. ஆசிரியர்களிடத்தும், பெரியார்களிடத்தும் அடங்கி நடந்து நல்லவன் என்று பெயர் எடு. எவரும் உன்னைப் பொல்லாதவன் என்று சொல்லும்படி நடந்து கொள்ளாதே.

பள்ளியில் நடக்கும் சங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள். அறிவுடையோர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு நீயும் அறிஞனாக முயற்சிசெய். பேச்சுவன்மை பெற நீயும் அடிக்கடி கழகக் கூட்டங்களில் பேசிப் பழகு. சிறந்த கட்டுரைகளை எழுதிப்பழகு. உனது பள்ளிக்கூடத்தில் நாடகமன்றம் இருந்தால் நீயும் அதில் சேர்ந்து நடித்துப் பழகு. பழங்காலக் கலைகளின் சிறப்பை உணர்ந்து அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடு. நம் நாட்டின் பழம் பெருமையை அறிந்து, இடைக் காலத்தில் பெருமை இழந்துள்ள நிலையை நினைத்து, வருங்கால முன்னேற்றத்திற்குச் சரியான திட்டங்களை உன் மனத்தில் வகுத்துக்கொள். இன்று இளைஞனாக உள்ள நீ எதிர்கால உலகைப் புதிய முறையில் அமைக்க இருக்கும் சிற்பிகளுள் ஒருவன் என்பதை உணர்ந்துகொள். அதற்கு ஏற்றவாறு உன் வாழ்க்கைத் திட்டங்களை வரையறுத்துக் கொண்டு வளம்பெற்று வாழ முயற்சி செய்.

மேலே குறிக்கப் பெற்றவாறு நடக்க உன் உடல் நிலை நன்றாக இருக்கவேண்டு மல்லவா? 'சுவரை வைத்

துத்தானே சித்திரம் எழுதவேண்டும்!' அதனால் உடல் வளர்ச்சியில் ஊக்கம் காட்டு. தினமும் உடற்பயிற்சி செய். பள்ளிக்கூடத்தில் நடைபெறும் உடற்பயிற்சி வகுப்புகளுக்குத் தவறாதுசெல். உடல் உரம் இருந்தால் தான் அறிவும் வளம்பெறும். உடல் நலம் இன்றி நீ எவ்வளவுதான் படிப்பில் சிறப்புற்றாலும் உயரிய பதவிகளைப் பெற்று உன் கடமைகளை நாட்டிற்குச் செய்யமுடியாது. நமது நாட்டிற்கு உடல்வளமும், அறிவுத்திறமையும் பெற்ற இளைஞர்களே தேவை. தினமும் காலையில் எழுந்தவுடன் காலைக் கடன்களைச் செய்து முடித்து, உனக்குப் பிடித்தமான ஏதாவதொரு உடற்பயிற்சியைச் செய். தண்டால், பஸ்கி எடுத்தல் முதலிய பயிற்சிகளை வீட்டில் இருந்தே செய்யலாம். இவ்வாறு ஏதேனும் உடற்பயிற்சி செய்து முடித்த பிறகு குளிர்ந்த நீரில் குளித்துக் காலை உணவு அருந்திய பிறகு பாடங்களைப் படி. அதே போல் மாலையிலும் ஏதாவதொரு பயிற்சி செய்து பழகு.

பாடங்களைப் படிக்கும் போதும் எழுதும் போதும் நேராக உட்கார்ந்து படிக்கவேண்டும்; எழுதவேண்டும். கோணலாக உட்கார்ந்து கொண்டு படிப்பது கூடாது. ஒருவன் உட்காரும் முறையிலிருந்தே அவன் எப்படிப் பட்டவன் என்று அறிவுடையோர் கண்டுபிடிப்பர். இரவில் நெடுநேரம் கண்விழித்துக்கொண்டு படிக்காதே. வைகறைத் துயிலெழுந்து தெய்வத்தைத் தியானித்துப் படிக்கத் தொடங்கு. இரவெல்லாம் கண் விழித்துப் படித்த என் நண்பன் ஒருவன், பரிட்சையின் போது உடல் நலம் கெட்டுப் பரிட்சை எழுதிக்கொண்டிருக்கும்

போதே மயங்கி விழுந்து விட்டான். பிறகு எவ்வளவோ வைத்தியம் செய்தனர். அந்த ஆண்டு அவன் பரிட்சை



நேராக அமர்ந்து எழுதும் முறை

யில் தேறமுடியாமல் போய் விட்டது. ஏன்? இயற்கைக்கு மாருக இரவில் கண் விழித்துப் படித்ததனுல் உண்டான பயன். அதனுல் நீ எப்பொழுதும் இரவில் நெடுநேரம் கண் விழிக்காதே,

பள்ளிக்கூடத்தில் இன்ன நேரத்தில் இன்ன பாடம் நடத்தப்படும் என்று தெரிவிக்கும் பாட அட்டவணை கொடுத்து அதன்படி பாடம் நடத்துவது போல, நீயும், ஒரு நாளில் இந்த வேளையில் இந்த வேலையைச் செய்யவேண்டும் என்று காலத்தை வரையறுத்துக்கொண்டு அதன்படி செய். குறித்த நேரத்தில்

குறித்த வேலையைச் செய். இவ்வொழுங்கு முறை நம் நாட்டு இளைஞர்கள் அனைவருக்கும் இன்றியமையாத தாகும். ஆங்கிலேயரிடம் காணப்படும் அரிய குணங் களுள் இதுவும் ஒன்றாகும். எவனொருவன் காலத்தின் அருமையை உணர்ந்து காலத்தை வீணாக்காமல் செய லாற்றி வருகின்றானோ அவன் அறிவுடையவரால் போற்றப்படுவான். அவனால் நாட்டிற்கும் சமூகத்துக் கும் பல நன்மைகள் உண்டாகும்.

ஓய்வு நேரங்களில் அறிவை வளர்க்கக்கூடிய அறிஞர்கள் எழுதிய நூல்களைப் படிக்க வேண்



நூல் நிலையத்தில் படித்தல்

டும். உனது பாட புத்தகங்களை மாத்திரம் படிப்பது

போதாது. உலக அறிவையும், நமது நாட்டின் சிறப்பையும் தெரிவிக்கும் உயர்ந்த நூல்களைப் படிக்க வேண்டும். கிணற்றுத்தவளையாக வாழக் கூடாது. உலகை உற்றுக் கவனித்து ஆங்காங்கே நடை பெறும் அற்புதங்களையும், மற்றும் பல நிகழ்ச்சி களையும் அறிந்து கொள்ள வேண்டும். பள்ளிக்கூட நூல் நிலையங்களில் உள்ள நல்ல புத்தகங்களை எடுத்துப் படிக்கவேண்டும். படிக்கும்போது முக்கியமான சம்பவங் களோ, செய்திகளோ காணப்படின் அவற்றை ஒரு குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி குறித்துக் கொள்வதனுல் உனக்குப் பல நன்மைகள் உண்டாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நீ நினைவில் வைக்க வேண்டியவை சில உண்டு. அவை என்ன வென்ருல் நீ அடிக்கடி படக்காட்சிகள் பார்க்கக்கூடாது. தீய பழக் கம் உள்ளவர்களுடன் சேரக்கூடாது. 'இணக்கம் அறிந்து இணங்கு' என்று நீ படித்திருக்கின்ருய். 'தீயார் நட்பு தீமை விளைக்கும்' என்று முன்பு படித்துள்ளாய். ஆதலின், எந்தக் காரணத்தைக்கொண்டும் தீயவர் களுடன் சேராதே. நல்லவர் நட்பே நன்மை உண்டாக் கும் என்பதை மறவாது நடந்துகொள்.

தம்பீ! உனது முன்னேற்றத்தில் ஊக்கம் கொண் டிருக்கும் நான் இப்பெரிய கடிதத்தை உனக்கு எழுதி னேன். உன்னுல் நமது குடும்பமும், நமது மொழியும், நாடும் உயர்வடைய வேண்டும் என்பது என் எண்ணம். நான் எழுதி யிருக்கும் செய்திகளை நன்ருகச்

சிந்தித்து, உண்மையான உழைப்புடனும், ஊக்கத்துடனும் முயன்று வெற்றி பெற்று விளங்குவாயாக. இளமையில் ஏற்படும் பழக்கம் என்றும் நிலைபெற்று இருக்கும். அதனால் நல்ல பழக்கங்களைக்கொண்ட நல்லவனாகவும், உடல் வலிமையும், அறிவுத் திறமையும், நற்பண்பும், நல்லொழுக்கமும், கடமையுணர்ச்சியும், எடுத்த காரியத்தை முடிக்கும் முயற்சியும் பெற்ற உத்தமனாகவும் வாழ விரும்பு. காந்தி அடிகள் காட்டிய கருணைவழி நம் நாட்டிற்கு மட்டுமன்றி உலகிற்கும் நன்மை பயக்கும் என்பதை உணர்ந்துநட. இளைஞர்கள் முன்னேற்றமடைவதற்குப் பல சான்றோர்கள் கூறியுள்ள அறிவுரைகளை அறிந்து, அதன்படி நடந்து, நீயும் பேரறிஞனாகப் பெரும்புகழ் பெற்று வாழ்வாயாக,

இப்படிக்கு

உனது நன்மையை விரும்பும்,

அண்ணன்

சண்முகம்.

## அருஞ்சொற் பொருள்

முதுமொழி=பழமொழி
சிற்பிகள்=அமைப்பாளர்
இணக்கம்=நட்பு
ஐயம்=சந்தேகம்
இன்றியமையாதது=முக்கியமானது
வைகறை=விடியற்காலம்

## வினக்கள்

1. ஆசிரியரே மாணவர்களுக்குத் தெய்வம் என்பதை விளக்கும் பழமொழியை எழுது.
2. இப்பொழுது இளைஞராக இருப்பவர் எதிர்கால உலகின் தலைவர் ஆதலால் அவர் கவனித்து நடக்கவேண்டியவை எவை?
3. உடற்பயிற்சியைப் பற்றித் தம்பிக்கு அண்ணன் எழுதியுள்ள கருத்தை விளக்கு?
4. வீட்டில் பாடங்களைப் படிக்கும் பொழுதும் எழுதும் பொழுதும் கவனிக்கவேண்டிய விதிகள் எவை? ஏன்?
5. அறிவுடையவரால் போற்றப்படுவோர் யார்?
6. கிணற்றுத் தவளையாக வாழக்கூடாது என்பதற்கு அண்ணன் காட்டும் வழிஎன்ன?

## கட்டுரைப் பயிற்சி

இளைஞர்கள் கடமை என்பதைப்பற்றி 15 வரியில் எழுது.

## பயிற்சிகள்

1. பிரித்து எழுது.

அன்றன்று; அறிவுரை; பேரறிஞன்; செய்தித்தாள்; பொன்னுரை.

2. வாக்கியத்தில் அமைத்து எழுது.

கருத்துடன்; வகுத்துக்கொண்டு; வரையறுத்துக் கொண்டு, ஏற்றாற்போல.

# 12. கயிறு திரித்தல்

மக்கள் தங்கள் வாழ்க்கையை வளம்பெற நடத்துதற்கும், சோம்பல் இன்றி வாழ்வதற்கும் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு தொழிலை அறிந்திருக்க வேண்டும்.



நார் எடுத்து கயிறு திரித்தல்

இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றவாறு பலவிதமான கைத்தொழில்களைச் செய்யலாம். அவ்வாறு செய்வதனுல் அவர்களுக்கு நன்மைகள் பல உண்டாகும். சென்ற வகுப்பில் பிரஷ் செய்வது எப்படி என்பதைத் தெரிந்துகொண்ட நீங்கள் இந்த வகுப்பில் நார் எடுத்துக் கயிறு திரித்தல் எப்படி என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

நம் நாட்டில் நார் எடுக்கக்கூடிய செடிகளும் மரங்களும் பல உண்டு. சணல் செடியிலிருந்து நார் எடுத்து

கயிறும், கோணிப்பைகளும், கித்தான்களும் பிறவும் செய்யப்படுகின்றன என்பது உங்கள் அனைவர்க்கும் தெரிந்திருக்கும். அத்தொழில் பெரும்பாலும் இயந்திரங்களின் மூலமாகவே செய்யப்படுகின்றது. சணல் உற்பத்தி நம் நாட்டுத் தொழில்களுள் மிகச் சிறந்த தொன்றாகும்.

தேங்காய் நார்: தாளுண்ட நீரைத் தலையாலே தந்து உதவும் தென்னை மரத்திலிருந்து கிடைக்கின்ற தேங்காய்களின் மேல்மட்டையிலிருந்தும் நம் நாட்டில்; சிறப்பாக மேற்குக் கடற்கரை ஓரம் உள்ள ஊர்களில் நார் எடுக்கப்படுகிறது. தேங்காயின் மேல்மட்டைகளை உரித்துத் தண்ணீரில் போட்டு ஊறவைத்து அவற்றிலிருந்து நாரை எடுத்துச் சுத்தம் செய்து கொள்வார்கள். பிறகு அவற்றைத் தேவைக்குத் தகுந்தாற்போல சிறியதாகவும் பெரியதாகவும் கயிறாகத் திரிப்பார்கள்.



கயிறு திரிக்கும் முறைகளில் ஒன்று

மெல்லிய கயிறுகளைத் தங்கள் தொடைகளில் வைத்தே திரிப்பார்கள். சிலர் இரண்டு கைகளாலும் திரிப்பார்கள். பெரிய வடங்களை ஒருவர் இருவர் மாத்திரம் செய்யமுடியாது. பலபேர் சேர்ந்து மெல்லிய கயிறுகள் பலவற்றை ஒன்று சேர்த்து நன்ருக முறுக்கு ஏற்றுவார்கள். முறுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வடம் வலிமையாய் இருக்கும். இத்தொழில் நம் நாட்டுக் குடிசைத் தொழில்களுள் ஒன்ருகும்.

**பனை நார் :** பனைமரத்திலிருந்தும் நம் நாட்டில் பல பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. தன்னிடம் உள்ள ஒவ்வொரு உறுப்பாலும் மக்களுக்கு உதவுவது பனை மரம். வீடு கட்டுதற்கு வேண்டிய வாரைகளுக்கும், ஏற்றமரத்திற்கும் அடிமரம் பயன் படுகிறது. இப்பொழுது பனைமரத்திலிருந்து அருமையான கைத்தடிகளும் பிறவும் செய்யப்படுகின்றன. அதன் ஓலைகள் விசிறிகள், தடுக்குகள், பாய்கள், குழந்தைகளுக்கு உரிய விளையாட்டுப் பொருள்களான கிலுகிலுப்பை, சிறிய பெட்டிகள் முதலியவைகள் செய்வதற்குப் பயன் படுகின்றன. அவ்வோலைகளின் அடிமட்டைகள் நார் எடுக்க உதவுகின்றன. அம்மட்டைகளை வெட்டி ஓரங்களிலிருக்கும் கறுக்குகளைச் சீவிவிட்டு கத்தியால் ஓரத்தில் பிளந்து கைகளால் பிளப்பர். பிறகு சிறிது காயவைத்துத் தண்ணீரில் ஊறவைத்து நார் எடுத்துக் கயிறு திரிப்பார்கள். இந்தக் கயிறு தேங்காய் நாரினுல் செய்யப்படும் கயிற்றைப்போல மிருதுவாக இராது; முரடாகவே இருக்கும். அதனுல் பெரும்பாலும் இக்

கயிற்றைக், கிராமங்களில் மாடு கன்றுகளைக் கட்டுவதற்கும், பந்தல் முதலானவைகள் போடுவதற்கும், உறிகள் செய்வதற்கும் பயன் படுத்துகிறார்கள்.

**கற்றாழை நார் :** கற்றாழைகளிலிருந்து நார் எடுத்துப் பல பொருள்கள் செய்யப்படுகின்றன. இதன் நார் வெள்ளிக் கம்பிபோல இருக்கும். இரசாயன முறையிலே இந்நாரைப் பக்குவப் படுத்தி, வேண்டுமானால் சாயமும் தோய்த்துக் கயிறு திரிக்கலாம். இதன் கயிறு தண்ணீரில் நனையாமல் இருந்தால்தான் நன்றாக உழைக்கும். கற்றாழைமட்டைகளை வெட்டி எடுத்துத் தண்ணீரில் ஊறவைத்து அதிலுள்ள சோற்றுப் பொருளை நீக்கிவிட்டால் நார் காணப்படும். இந்த நார் பனை, தேங்காய் நார்களைவிட மிருதுவாகவும் அழகாகவும் இருக்கும்.

இவ்வகையான பல தொழில்கள் நம் நாட்டில் குடிசைத் தொழில்களாக இருக்கின்றன. இத்தொழில்கள் சிறக்கவேண்டும். தொழிலாளர்கள் இன்பமாக வாழவேண்டும். நாட்டில் ஒருவர்கூட கைத்தொழில் தெரியாதவர்களாக இருத்தல் கூடாது. ஏதேனும் ஒரு தொழிலைத் தெரிந்துகொண்டு நல்வாழ்வு வாழ அனைவரும் முயலுவது நல்லதாகும்.

## அருஞ்சொற் பொருள்

தாள் உண்ட=வேரின் மூலம் சாப்பிட்ட

வாரைகள்=நீண்ட மரத்துண்டுகள்

கறுக்கு=இரம்பம் போன்ற கூரியமுனை

## வினுக்கள்

1. நார் எவ்வெப் பொருள்களிலிருந்து தயாரிக்கலாம்?
2. தேங்காய் நார் தயாரிப்பது எப்படி?
3. பனைமரத்தின் உபயோகங்களை எழுது.
4. பனை நார் தயாரிக்கும் முறையை எழுது.
5. பனை நாரால் திரிக்கப்படும் கயிறு எவற்றிற்குப் பயன்படும்?
6. கற்ருழை நார் தயாரிப்பது எங்ஙனம்?
7. சணலைப்பற்றிக் குறிப்பு எழுது.

## பயிற்சிகள்

1. எதிர்ப்பதம் எழுது:—
   முரடு, வேண்டும், இராது, சிறியது.

2. ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் எழுது:—

   விசிறி, நான், நீங்கள், முறுக்குவார்கள்.

3. கயிறுகளை என்பதைத் கயிறுகள்+ஐ என்று பிரிக்க வேண்டும் இவற்றுள் கயிறுகள் என்பதுபெயர்ச் சொல். 'ஐ' என்பது இடைச்சொல் ஆகும். ஒரு பெயரின் பொருளை வேறு படுத்துதற்கு வருகின்ற இதுபோன்ற இடைச்சொற்களை வேற்றுமை உருபு என்று சொல்வார்கள். அவ்வேற்றுமை எட்டு வகைப்படும். ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு உருபுகள் உண்டு. ஐ என்பது இரண்டாம் வேற்றுமை உருபு.

   இப்பாடத்திலிருந்து இரண்டாம் வேற்றுமை உருபுள்ள சொற்கள் மூன்று எடுத்தெழுது.

# 13. மார்க்கோ போலோ

சரித்திரப் புகழ்பெற்ற நகரங்களில் ஒன்று **வெனிஸ்** நகரம். இயற்கை அழகிலும், செயற்கைச் சிறப்பிலும் அழகுடன் அந் நகரம் விளங்கியது. அங்கே பல நாட்டு வியாபாரிகளும் தங்கள் பண்டங்களைக் கொண்டுவந்து விற்றும், தங்களுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கியும் சென்றனர். அந் நகரில் **நிகோலோ போலோ** என்பார் ஒருவர் இருந்தார். அவருடைய மைந்தன் **மார்க்கோ போலோ** என்பவராவார். மார்க்கோ போலோ சிறுவராயிருக்கும்போது அவர் தந்தையான நிகோலோ போலோவும், சிறிய தந்தையான **மாபியோ போலோவும்** வெனிஸ் நகரத்திலிருந்து வியாபாரத்தின் பொருட்டுக் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்றனர். மார்க்கோ போலோவுக்குத் தமது தந்தையும், சிறிய தந்தையும் வியாபாரத்திற்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்பதே நினைவில்லை. பலர் சொல்லக்கேட்டு அவ்விருவரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையைத் தெரிந்துகொண்டார்.



மார்க்கோ போலோ

ர்க்மாகோ போலோ தம்மைப் போன்ற சிறுவர்களுடன் கடற்கரைக்குச் சென்று விளையாடுவார்;

கப்பல் வருவதைக் காண்பார். அவர் உள்ளத்தில் 'இந்தக் கப்பலை ஓட்டிக்கொண்டு செல்பவர்கள் எங்கெங்கு சென்றுவந்தார்கள்? என்னென்ன காட்சி களைக் கண்டார்கள்? என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். உடனே மாலுமிகளை அணுகி 'நீங்கள் எங்கிருந்து வருகின்றீர் கள்? என்னென்ன அதிசயங்களைக் கண்டீர்கள்? தயவு செய்து எனக்குச் சொல்லுங்கள்' என்று கேட்பார். மாலுமிகளும் அச்சிறுவனுடைய அறிவை வியந்து அவன் மனம் மகிழும்படியும், ஆவல் உறுமாறும் தாங்கள் சென்றுவந்த இடம், கண்ட காட்சி அனைத் தையும் விளக்கிக் கூறுவர். அவற்றை எல்லாம் கேட்கும் மார்க்கோ போலோவுக்கு உண்டாகும் ஆச்சரியத்திற்கு அளவேயிராது. அவர் தினமும் இவ்வாறே கடற் கரைக்குச் சென்று மாலுமிகள் வருவதை எதிர்பார்த்து இருப்பார். இதுவே அவருக்குப் பிடித்த விளையாட்டாக இருந்தது.

ஒருநாள் மார்க்கோ போலோ கடற்கரையில் இருந்து கப்பலின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். கப்பலும் வந்தது. கப்பலிலிருந்து இருவர் புதுமையான உடையுடன் வந்து இறங்கினர். அவர்கள் தமது தந்தை யும் சிறிய தந்தையும் என்பதைக்கண்ட மார்க்கோவுக்கு மகிழ்ச்சி அதிகரித்தது. ஆனந்தக்கூத்து ஆடினார். தம் தந்தையை நோக்கி 'அப்பா! நீங்கள் இவ்வளவு நாள் சென்று இருந்த இடங்களில் கண்ட காட்சிகள் எல்லா வற்றையும் சொல்லுங்கள்' என்று கேட்டார்.

தந்தையார் மகிழ்ந்து தம் மைந்தனுக்குத் தாம் கண்ட காட்சிகள் பலவற்றையும் கூறினார். அழகிய

நகரங்களைப் பற்றியும், ஆள் நடமாட்டம் இல்லாத பாலைவனங்களைப் பற்றியும், அறிவிலும் ஆற்றலிலும் திறமை பெற்ற மக்களைப் பற்றியும், அவையில்லாத அரக்கரைப் போன்றவர்களைப் பற்றியும் எடுத்துக் கூறினர். 'வெனிஸ் நகரத்தை விடப் பன்மடங்கு அழகும் பெருமையும் பெற்ற பல நகரங்களைப் பார்த்தோம். **யாங்ட்சிகியாங்** என்னும் நதியின் கரையிலே **ஹாங்கோவ்** என்னும் அழகிய நகரம் ஒன்று சீன தேசத்



சீனாவிலுள்ள ஒரு அழகிய கட்டடம்

தில் இருக்கிறது. அது நமது வெனிஸ் நகரத்தைவிடப் பதினைந்து மடங்கு பெரியது. அவ்வூரில் கால்வாய்கள் நிறைய இருக்கின்ற காரணத்தால் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாலங்கள் இருக்கின்றன. உலகில் உற்பத்தியாகும் எல்லா வகையான பொருள்களும் அங்கு கிடைக்கின்றன' என்று கூறினர். இவ்வாறு பல நகரங்

களைப் பற்றியும் சொன்னார்கள். அன்றியும் 'நாங்கள் மீண்டு மொருமுறை அவ்விடங்களுக்குச் செல்லப் போகின்றோம். அப்பொழுது உன்னையும் அழைத்துக் கொண்டு செல்கின்றோம்' என்று மார்க்கோவுக்குத் தெரிவித்தனர்.

அவ்வாறே இரண்டாண்டுகள் கழித்து நிக்கோலோ போலோ தம் தம்பியையும், தனயனையும் அழைத்துக் கொண்டு சீனாவிற்குப் புறப்பட்டார். ஏன் மறுபடியும் சீனாவிற்குச் சென்றார்கள் என்றால், சீன தேசத்து அரசர் குப்லைகானிடம் நிக்கோலோ போலோ முதன் முறை சென்றபோது கான் அவரை நன்கு ஆதரித்துக் காப்பாற்றினார். அன்றியும் அவருடைய நற்குணங்களை யும், அறிவுத்திறமையையும் கண்டு வியந்து "எங்கள் நாட்டில் ஆசிரியராக இருந்து மக்களுக்கு உபதேசம் செய்ய நூறு பேரை அழைத்துக்கொண்டு வரவேண்டு மென்று" அரசர் சொல்லி அனுப்பி இருந்தார். அதனால் சில ஆசிரியர்களைப் போப் ஆண்டவருடைய அனுமதி பெற்று அழைத்துக்கொண்டுசென்றார். வெனிஸிலிருந்து புறப்பட்டு ஏகர், பாக்தாத் முதலான நகரங்களின் வழியாக அங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு கொண்டு, பாரசீக நாட்டிற்குவந்து, பாமீர் மலைச்சரிவுகளின் வழியாக காஷ்கா, யார்த்ஹண்டு முதலான பல நகரங்களைக் கடந்து, சீனாவை அடைந்து பீகிங் நகரம் போய்ச் சேர்ந்தனர்.

குப்லைகான் என்னும் சீன தேசத்து மன்னர் போலோக்கள் மூவரையும், அவர்களுடன் வந்திருந்த ஆசிரியர்களையும் வரவேற்றார். நிக்கோலோ தம் மைந்

தனைக் குப்ளேகானுக்கு அறிமுகம் செய்து வைத்தார். வழியில் மார்க்கோ போலோ நோய்வாய்ப்பட்டு உடல் இளைத்தார். அதனால் அவர்கள் சீனாவை அடைதற்கு ஓராண்டு அதிகம் பிடித்ததாம். மார்க்கோவைக்கண்ட குப்ளேகான் அவரிடம் தனி அன்பு கொண்டார்; அவரைத் தம் நண்பராகக் கொண்டார்.

சில நாட்களில் மார்க்கோ போலோ சீன தேசம் முழுவதையும் சுற்றிப் பார்த்தார். அவ்வப் பொழுது தாம் கண்ட நாட்டு வளங்களையும் மக்கள் நிலைமையையும் மன்னனுக்குக் கூறிவந்தார். அவற்றைக் கேட்கக் கேட்க மன்னனுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. பின் மார்க்கோ சைபீரியா, கோபிபாலைவனம், திபெத்து, இந்தியா முதலான பல இடங்களையும் சுற்றிப்பார்த்து வந்தார். அவருக்குமுன் எந்த ஐரோப்பியரும் அவ்விடங்களைப் பார்த்ததில்லை. ஆங்காங்குக் காணப்படும் அற்புதங்களைத் தமது குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொண்டார். இந்தியாவைப்பற்றிய அவருடைய குறிப்புகள் இந்திய சரித்திரத்தின் உண்மைகளை அறிந்து கொள்வதற்குப் பேருதவியாக உள்ளன. ஆங்காங்கு மக்கள் பேசிவந்த மொழிகளை எல்லாம் ஓரளவு மார்க்கோ போலோ கற்றுக்கொண்டார். மார்க்கோ தமது சிறு வயதில் ஐரோப்பியரே சிறந்தவர் என்று எண்ணியிருந்தார். சீனா முதலான இடங்களைச் சுற்றிப்பார்த்த பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டார். சீனர்களுடைய வாழ்க்கை முறையும், நாகரீகப் பெருமையும் அவர் மனத்தைக் கொள்ளை கொண்டன. இப்பொழுது நாம் பயன்படுத்துகின்ற

காகித நாணயங்கள் அப்பொழுதே சீனவில் பழக்கத்தில் இருந்தன. அவர்கள் நிலக்கரியை நல்ல முறையில் பயன்படுத்தத் தெரிந்திருந்தார்கள். தீ அணைக்கும் படையினரை அவ்வரசாங்கம் அமைத்திருந்தது. தீப்பற்ற முடியாத கட்டடங்களை அந்நாட்டு மக்கள் கட்டினர். உயர்ந்த பட்டாடைகளும், வாசனைத் திரவியங்களும், விலை உயர்ந்த ஆபரணங்களும் அந்நாட்டு ஆண், பெண் இருபாலராலும் உபயோகப்படுத்தப் பட்டன. அத்தேசம் முழுவதும் மருத்துவச்சாலைகள் இருந்தன. மக்கள் அமைதியுடனும் அன்புடனும் வாழ்ந்தனர். அந்நாட்டு மன்னரும் மக்களை நல்லமுறையில் ஆளும் தன்மை வாய்ந்தவராக இருந்தார். அந்நாட்டில் பயிர் விளைவும் நன்ருக இருந்தது. இவற்றை எல்லாம் கண்ட மார்க்கோ போலோ இளமையில் தாம் கொண்டிருந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டதில் வியப்பொன்றும் இல்லை அல்லவா ?

பின் போலோக்கள் வெனிஸ் நகரம் செல்ல விரும்பினர். குப்லைகானுக்கு அவர்களை விட்டுப்பிரிய மனம் இல்லை. ஆயினும் அவர்கள் வேண்டுகோளை மறுக்க முடியாமல் அவர்களுடைய ஊருக்கு அவர்களை அனுப்ப முடிவுசெய்தார். அப்பொழுது பாரசீக நாட்டு மன்னன் சீன அரச குடும்பத்துப் பெண்ணை மணக்க விரும்பினன். அம் மணமகளைப் பாரசீக நாட்டிற்குச் சீனவிலிருந்து அழைத்துச்செல்ல போலோக்களே தகுதியானவர்கள் என்பதை அறிந்த குப்லைகான் அவர்களுடன் மணப்பெண்ணை அனுப்பினர். அவர்களும், அரசன் இட்ட பணியை மேற்கொண்டு மலாக்கா, சுமத்ரா நாடு

களைத் தாண்டி, இலங்கையை அடைந்து, இந்தியாவின் மேலைக் கடற்கரை வழியாக அரபிக்கடலைத் தாண்டிச் சென்று, பாரசீக நாட்டை அடைந்து மணமகளை அங்கு விடுத்து மணத்தை முடித்துப் பிறகு வெனிஸ் நகரம் சேர்ந்தார்கள்.

வெனிஸ் மக்கள் மார்க்கோபோலோவை வரவேற்று, விருந்தளித்துப் போற்றினர். மார்க்கோ போலோவும், 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றவாறு தாம் கண்ட காட்சிகள் அனைத்தையும் கூறினார். அவர் கூறியதைக் கேட்ட மக்கள் ஆச்சரியம் அடைந்தனர். மார்க்கோ போலோ தாம் சென்ற செய்திகளை எல்லாம் ஒரு நூலாக எழுதி வெளியிட்டார். அதற்கு 'மார்க்கோபோலோவின் நூல்' என்பது பெயர். பின் அவர் எழுதிய குறிப்புகளைக் கொண்டு பல ஐரோப்பியர் வியாபாரத்தின் பொருட்டு வெளிநாடுகளுக்குச் செல்லத் தொடங்கினர். இவருடைய காலம் 1256 முதல் 1323வரை ஆகும்.

இளைஞர்களே! மார்க்கோபோலோ நாடு கண்ட நல்லார் என்று நாட்டுமக்களால் போற்றப்படுகின்றார். ஏன்? இளமையில் கப்பலோட்டிகளிடம் சென்று பிறநாட்டு நிலைமைகளை அறிந்துகொண்டு பல இடங்களுக்கும் சென்று பார்க்கவேண்டும் என்று எண்ணிய ஆசையினால் அல்லவா? அதுபோல நீங்களும் எப்பொழுதும் புதுமைகளைக் கண்டறிய முயலுங்கள்.

## அருஞ்சொற் பொருள்

மாலுமி=கப்பலோட்டி
நடமாட்டம்=சஞ்சாரம்
மீண்டும்=மறுபடியும்
வியந்து=மகிழ்ந்து அல்லது ஆச்சரியப்பட்டு
தனயன்=மகன்

## வினாக்கள்

1. வெனிஸ் நகரத்தின் சிறப்பை எழுது.
2. மார்க்கோ போலோவின் தந்தை, சிறிய தந்தை பெயர்களை எழுது.
3. மார்க்கோ போலோவுக்கு விருப்பமான விளையாட்டு எது?
4. மாலுமிகள் மார்க்கோவுக்குக் கூறியவற்றை எழுது.
5. மார்க்கோ போலோவின் தந்தை கூறிய பிறநாட்டுச் சிறப்பை எழுது.
6. மார்க்கோ போலோவின் தந்தை இரண்டாம் முறை சீனுவுக்குச் சென்றதேன்? வெனிஸிலிருந்து எவ்வெவ் வழியாகச் சீனுவுக்குச் சென்றனர்?
7. சீன தேசத்து மன்னன் பெயர் என்ன? அவர் மார்க்கோவை எவ்வாறு ஆதரித்தார்?
8. எவரும் சென்றிராத எவ்வெவ்விடங்களை மார்க்கோ போலோ பார்த்தார்?
9. போலோக்கள் தங்கள் நகரத்துக்குத் திரும்பியபோது சீன மன்னன் இட்ட கட்டளை என்ன? எவ்வழியாக வெனிஸ் நகரம் சென்றனர்?
10. மார்க்கோ போலோ எழுதிய நூலின் பெயர் என்ன? அதைக் கொண்டு ஐரோப்பியர் அடைந்த நன்மை என்ன?

## பயிற்சிகள்

1. பின்வரும் பன்மை வினைகளுக்கு ஏற்ற ஒருமைவினைகளை எழுது:—

   கண்டீர்கள், சொல்லுங்கள், கொண்டனர், இருக்கின்றன.

2. வாக்கியத்தில் அமைத்து எழுது:—

   அறிமுகம், பன்மடங்கு, ஆனந்தக்கூத்து.

3. ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன முறையே இரண்டுமுதல் ஏழாம் வேற்றுமை வரையிலும் உள்ள உருபுகள் ஆகும். முதல் வேற்றுமைக்குத் தனியாக உருபு இல்லை. ஒருவாக்கியத்தின் எழுவாயே முதல் வேற்றுமையாகும். எட்டாம் வேற்றுமை விளியாக இருக்கும்.

   இப்பாடத்திலிருந்து ஒவ்வொரு வேற்றுமைக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுது.

---

# 14. கிருமிகள்

இராமலிங்க சுவாமிகள் என்னும் பெரியார் ஆண்டவனிடம் தமக்கு என்னென்ன வேண்டும் என்று முறையிடும்போது 'நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். ஏன்? மனிதனுக்கு எல்லாச் செல்வங்களும் இருந்தாலும் அவன் நோய் உள்ளவனாக இருப்பானேயானால் செல்வத்தாலாகும் பயனை அடையமுடியாது. அன்றியும் அவனால் நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஒரு தொண்டும் செய்ய முடியாது. ஆதலின் ஒவ்வொருவரும் நோயற்ற வாழ்வைப்

பெறவேண்டும். அதுவே சிறந்த செல்வமுள்ள வாழ்க்கையாகும்.

உலகில் பல நோய்கள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் கிருமிகளாலேயே ஏற்படுகின்றன. ஏறக்குறைய எழுபது ஆண்டுகளுக்கு முன்புதான் மக்களுக்கு ஏற்படும் நோய்கள் பலவற்றிற்கும் கிருமிகளே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பிறகு கிருமிகளை ஒழிப்பதற்கும், அவற்ருல் ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்கும் அறிஞர் பலர் முயன்று வெற்றி கண்டனர். அவ்வாறு கண்டு பிடிப்பதற்கு முன் ஓர் ஊரில் ஒரு நோய் உண்டாஞல் நூற்றுக்கணக்கான மக்கள் அவ்வூரிலேயே மாண்டுபோவார்கள். அந் நோயின் உண்மைக் காரணத்தை அறியாத மக்கள் பட்ட வேதனைகள் கொஞ்சமல்ல.

பெரியம்மை, காலரா, குளிர்ஜுரம் (மலேரியா) என் புருக்கிநோய் முதலான வியாதிகள் பரவுவதற்கு முக்கிய காரணம் கிருமிகளே. அவற்றை ஒழிக்கும் முறைகளைத் தெரிந்து, மக்கள் சுகாதார வாழ்வை மேற்கொண்டால் நோயின்றி வாழலாம் அல்லவா? கிருமிகள் எங்கும் இருக்கின்றன. அவை நம் கண்களுக்குத் தெரியா. நுட்பமான பூதக்கண்ணுடிகள் மூலம் அக்கிருமிகளைப் பார்க்கலாம். பதிஞயிரக் கணக்கான கிருமிகளை ஒன்றன்பின் ஒன்ருக அடுக்கிஞல் ஓர் அங்குல நீளமாகும் என்ருல் அக்கிருமிகளின் உருவம் எவ்வளவு சிறியது என்று தெரிந்துகொள்ளலாம். அணுவினும் சிறிய உருவத்தோடு கூடிய கிருமிகள் செய்யும் தீமைகள் மலை

யினும் பெரியனவாகும். காற்றிலும், நீரிலும், நமது உணவிலும் நாம் உறையும் இடங்களிலும், மற்றும் உள்ள எல்லா இடங்களிலும் கிருமிகள் இருக்கின்றன. இக்கிருமிகள் எவ்வாறு வளர்ச்சி பெறுகின்றன என்பதையும், அவற்றால் நோய்கள் எவ்வாறு பரவுகின்றன என்பதையும் விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர்; அதிசயிக்கத் தக்க முடிவுகளை வெளியிட்டனர். ஒரே கிருமி ஒரு நாளில் இரண்டு கோடி கிருமிகளை உண்டாக்கக் கூடுமாம். என்ன விந்தை பார்த்தீர்களா? இக்கிருமிகள் மிகுந்த உஷ்ணம் உள்ள இடங்களிலும் மிகுந்த குளிர்ச்சியுள்ள இடங்களிலும் வளர்ச்சி அடையா. சமமான தட்ப வெப்ப நிலையுள்ள இடங்களில் வளர்ச்சி அடையும்.

இத்தகைய கிருமிகளுள் நமக்கு நன்மை செய்யும் கிருமிகளும் உண்டு. அக்கிருமிகள் இல்லாவிட்டால் உலகத்திற்கே கேடு உண்டாகும். தாவரங்கள் முதலியவை அழுகி மண்ணோடு மண்ணாகக் கலந்துபோவதற்கும், பிராணவாயு, உப்புவாயு முதலியவை உண்டாவதற்கும், பால் துவைந்து தயிர் மோர் முதலியவற்றை நாம் பெறுவதற்கும், மற்றும் பல நற்செயல்களுக்கும் அக்கிருமிகள் பயன்படுகின்றன.

ஆனால் நமக்குத் தீங்குசெய்யும் கிருமிகளே அதிகம். அவையும் எல்லோரையும் நோய்வாய்ப் படுத்துவதில்லை. எல்லோர் உடலிலும் இக்கிருமிகள் இருக்கின்றன. உடலை நன்றாகப் பலம் உள்ளதாக வைத்திருப்பவரிடம் இக்கிருமிகள் ஒன்றும் செய்யா. உடல் நலம் குறைந்துவிடுமானால் அப்பொழுது இக்கிருமிகள் தங்கள்

திறமையைக் காட்டிப் பலவிதமான வியாதிகளை உண்டாக்கும். அதனால் மக்கள் எப்பொழுதும் உடல் உரம் உள்ளவர்களாக வாழவேண்டும். நல்ல காற்று, சூரிய வெளிச்சம், தூயநீர் இம்மூன்றுடன் நல்ல ஆகாரம் உண்பதும், உடற்பயிற்சி செய்வதும் உடலை வலிமை பெற வைத்துக்கொள்ளும் வழிகளாம். இல்லையெனில் உடல் மெலியும். தீய பழக்கங்களும் தூய்மையில்லாத வாழ்க்கையும் நோயை வருந்தி அழைக்கும் தூதர்களாகும். ஆதலின் ஒவ்வொருவரும் நோயின்றி வாழும் வழிகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.



சுத்தமான வீடு

நோய்கள் பரவுவதற்குப் பெரும்பாலும் கிருமிகளே காரணம். ஆதலால் முதலில் நாம் வாழும் இடங்களையும், சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்வதுடன் சுற்றிலும் எங்கும் நீர்தேங்கி நிற்காதபடி கவனித்துக் கொள்ளவேண்டும். இதனால் கிருமி

களின் உற்பத்தியைக் குறைக்கலாம். கொசுக்கள் பெருகுவதைத் தடுக்கலாம். தொற்றுநோய் உடையவர்களிடம் நெருங்கிப் பழகுவதனாலும் அந்நோய்கள் பரவும். ஆதலின் அவர்களைத் தனித்த இடத்தில் இருக்கும்படி செய்யவேண்டும்.

பெரியம்மை என்னும் நோய் ஒருவகைக் கிருமிகளால் உண்டாகின்றது. இதை வைசூரி என்றும் சொல்வார்கள். மனிதர்களுடைய உடலில் இந்நோயை உண்டாக்கும் கிருமிகள் புகுந்து மரணத்தை உண்டாக்குகின்றன. இந்நோய் வராமல் தடுப்பதற்கு இப்பொழுது அம்மை குத்திக்கொள்ளும் முறை கையாளப்படுகின்றது. அம்மை குத்திக் கொள்வதனால் அந்நோயை உண்டுபண்ணும் கிருமிகளின் சக்திகுறைந்து அவற்றால் தீங்கு ஏற்படுவதில்லை. குறைந்தது ஏழு ஆண்டுகட்கு ஒருமுறை ஒவ்வொருவரும் அம்மை குத்திக்கொள்ள வேண்டும்.

குளிர்ஜுரம் நம் நாட்டில் பலருடைய உயிரைப் பதம்பார்த்து வருகிறது. இந்நோயால் ஏறக்குறைய ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் ஓராண்டில் மடிகின்றனர் என்றால், இதன் கொடுமையை என்னென்பது! இந்நோயை உண்டாக்கும் கிருமிகள் ஒருவகைக் கொசுக்கள் மூலமாக மக்களுடைய உடலில் சேர்கின்றன. அக்கிருமிகளே குளிர்ஜுரம் என்னும் இக் கொடிய நோயை உண்டாக்குகின்றன. இந்நோய் உண்டாகாமல் நாம் தடுக்கவேண்டுமானால் கொசுக்களின் உற்பத்தியை ஒழிக்கவேண்டும். ஆங்காங்கே தண்ணீர் தேங்கிநிற்கும் இடங்களை எல்லாம் தூர்த்து

விடவேண்டும். கொசுக்கடியிலிருந்து தப்புதற்குக் கொசு வலைகளை உபயோகப்படுத்துதல் நல்லது. கொசு உள்ள இடத்தில் வாழும் மக்கள் அடிக்கடி 'க்வினின்' என்னும் மருந்தைச் சாப்பிட்டு வரவேண்டும். இம்முறைகளை அனுசரித்து வாழ்ந்து வந்தால் குளிர் ஜுரத்திலிருந்து தப்பிப் பிழைத்து இன்பமாக வாழலாம்.



டைபாய்டு கிருமிகள்



என்புருக்கிக் கிருமிகள்



டிப்திரியா கிருமிகள்

**என்புருக்கிநோய்** என்னும் கொடுநோயும் ஒருவகைக் கிருமிகளால் உண்டாகின்றது. மக்கள் கண்ட இடங்களில் எச்சில் துப்புதலாலும், மலஜலம் கழிப்பதனாலும், அழுகிக் கெட்டுப்போன பொருள்களை அங்கங்கே எறிந்து விடுவதனாலும் அவற்றிலுள்ள கிருமிகள் காற்றில் கலந்துவிடுகின்றன. இக்கிருமிகள் கலந்த காற்றை மக்கள் சுவாசிப்பதனால் இந்நோய் உண்டாகிறது. தூய காற்று இல்லாத இடங்களில் இருப்பவர்களையும், கடினமானவேலை செய்பவர்களையும் இந்நோய் விரைவில் பற்றும். வலிவு குறைந்த மக்களை இந்நோய் எளிதில்பற்றி எண்ணற்ற தீமைகளை விளைவிக்கும்.சுவாசப்பை கெட்டு அளவற்ற வேதனைகளை உண்டாக்கிக் கடைசியில்உயிரையும் கவர்ந்துவிடும். ஆதலின் இக்கொடுநோயைத் தடுக்க வேண்டும். இந்நோய் உள்ளவர்களுடன் நெருங்கிப்

பழகுதல்கூடாது. அவர்கள் உமிழும் கோழையின் மூலம் இந்நோயைப் பரப்பும் கிருமிகள் வெளிவரும். அதனால் அதைத் திராவகம் சேர்த்து எரித்துவிடுதல் நல்லது. இந்நோய் உள்ளவர்களைத் தனியாக விட்டுவைத்துக் குழந்தைகளை அருகில்செல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இதனால் நம் நாட்டில் நூற்றுக்குப் பதினன்குபேர் ஆண்டு தோறும் இறக்கின்றனராம். இக் கொடுமையை ஒழிக்க அரசாங்கத்தாரும் பெருமக்களும் சேர்ந்து, நன்மை தரும் பலவசதிகளைச் செய்வதற்கு நிதி திரட்டி வருகின்றனர். எல்லோரும் தம்மால் முடிந்த அளவு நிதி உதவிசெய்து இக் கொடுநோயை நம் நாட்டிலிருந்து வேரோடு களைந்து நீக்கவேண்டும்.

இவ்வாறே வாந்திபேதி, குஷ்டம், டைபாயிட் சுரம், டிப்தீரியா முதலானவைகளும் ஒவ்வொருவகைக் கிருமிகளால் உண்டாகும் கொடிய நோய்களாகும். எந்த நோயும் நமக்கு உண்டாகாதபடி நாம் நம்மைக் கவனித்துக்கொள்ள வேண்டும். வந்தபின் காப்பதைவிட வரும் முன் காப்பதே நல்லது அல்லவா? 'தடுப்பு முறையே வைத்திய முறையைவிடச் சிறந்தது' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதன்படி முதலில் நாம் நோய் தடுக்கும் முறைகளைக் கையாளவேண்டும். வைத்திய நிபுணர்களும், சுகாதார அதிகாரிகளும் அவ்வப்பொழுது மக்கள் நன்மைக்காகத் தெரிவிக்கும் முறைகளை நாம் கவனித்து நடக்கவேண்டும். மேலே சொல்லப்பட்ட நோய்கள் எல்லாம் தொற்றுநோய்கள் ஆகும். ஆதலின் நாம் நோயற்ற வாழ்வைப் பெறுதற்கேற்ற வழிகளில் கருத்துடன் நடந்து கொள்ளுதல் நல்லதாகும்.

## அருஞ்சொற் பொருள்

தட்பம்=குளிர்ச்சி
உரம்=வலிமை
வெப்பம்=உஷ்ணம்
மடிகின்றனர்=இறக்கின்றனர்
என்பு=எலும்பு

## வினாக்கள்

1. சிறந்த செல்வமுள்ள வாழ்க்கை எது? ஏன்?

2. பலநோய்களுக்கும் காரணமாக இருப்பது எது ? அவ்வுண்மை எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது ?

3. கிருமிகளால் பரவும் கொடிய நோய்களுள் சிலவற்றைத் தெரிவி.

4. கிருமிகளின் உருவம், வளர்ச்சி, வாழும் இடம் முதலியவற்றை எழுது.

5. நன்மைசெய்யும் கிருமிகளால் நமக்கு உண்டாகும் நன்மைகளை எழுது.

6. உடலை வலிமையுடன் வைத்துக் கொள்வதற்குரிய வழிகள் எவை ?

7. பெரியம்மை, குளிர்ஜுரம் — இவ்விரண்டும் எப்படி உண்டாகின்றன? அவற்றைத் தடுக்கும் வழிகள் எவை ?

8. என்புருக்கி நோய் ஏற்படும் விதத்தையும் தடுக்கும் முறையையும் எழுது.

## கட்டுரைப் பயிற்சி

1. 'நோயற்ற வாழ்வு' என்பதைப்பற்றிப் பதினைந்து வரியில் எழுது.

2. 'தொற்றுநோய்களும் மக்கள் கடமையும்' என்பதைப் பற்றி இருபது வரியில் எழுது.

## மொழிப்பயிற்சி

1. நோய் உள்ளவனால் நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஒரு தொண்டும் செய்யமுடியாது—இதை வினவாக்கியமாக மாற்றி எழுது.

2. கிருமி, கிருமிகள் — இவை ஒருமை, பன்மைகளுக்கு உதாரணங்களாகும். ஒரு பொருளை ஒருமை என்றும், ஒன்றுக்கு மேற்பட்டவற்றைப் பன்மையென்றும் சொல்வர். கிருமி தோன்றுகிறது, கிருமிகள் தோன்றுகின்றன என்று சொல்லும்போது வினைச் சொற்களில் காணப்படும் வேறுபாட்டைக் கவனியுங்கள். தோன்றுகிறது என்பது ஒருமைவினை; தோன்றுகின்றன என்பது பன்மை வினை.

பின்வரும் சொற்களில் ஒருமைக்குப்பன்மையும், பன்மைக்கு ஒருமையும் எழுது :—

நோய், நாம், விந்தை, அடையாது, பழக்கம், இறக்கின்றனர்.

3. வாக்கியத்தில் அமைத்து எழுது :—

ஏறக்குறைய, பதம்பார்த்து, கருத்துடன், கையாள.

TB 031(7) N50
... ஆவணக்காப்பக ... சென்னை-600 008.
1,30,253

# 15. உரையாடல்

## (தந்தையும் தனயனும்)

ஆனந்தன் வீட்டில் தன் பாடங்களைப் படித்துக்கொண்டு இருக்கும் பொழுது அவன் தந்தையார் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு பத்திரிகை படித்துக்கொண்டு இருந்தார். அப்பொழுது இரண்டு தொண்டர்கள் அங்கு வந்து ஆனந்தன் தந்தையின் கையில் அச்சிடப்பட்ட ஒரு வேண்டுகோள் கடிதத்தைக்கொடுத்தனர். அவ்விருவருள் ஒருவர் கையில் உண்டி ஒன்று இருந்தது. அவ்வேண்டுகோளைப் படித்துப் பார்த்த தந்தை உள்ளே சென்று பெட்டியிலிருந்து ஐந்து ரூபாய் எடுத்துக் கொண்டு வந்து அவ்வுண்டியில் போட்டார். அவ்விருவரும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு வணக்கம் செலுத்திச் சென்றனர். அவர்கள் சென்ற பிறகு ஆனந்தன் தன் தந்தையைப் பார்த்துச் சில கேள்விகள் கேட்க, அவற்றிக்கு அவன் தந்தை தகுந்த பதில்களைச் சொன்னார். அப்பொழுது தந்தைக்கும் தனயனுக்கும் நடந்த உரையாடல் பின்வருவது :—

ஆனந்தன் : அப்பா! இப்பொழுது இங்கு வந்த இருவரும் யார்?

தந்தை : அவர்கள் இவ்வூரில் இருக்கும் இளைஞர் சமூக சேவை மன்றத்தின் அங்கத்தினர்கள்.

ஆனந்தன் : அவர்கள் ஏன் உண்டி எடுத்துக் கொண்டு வந்தனர்?

தந்தை : சமீபத்தில் நம் இந்திய மாகாணங்களுள் ஒன்றான 'அசாமில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது'

என்று பத்திரிகையில் படித்தாய் அல்லவா? அன்று வானொலியிலும் சொன்னார்கள் அல்லவா? நிலநடுக்கம் ஏற்பட்ட அப்பகுதிகளில் பெரும்பாலான மக்கள் இறந்தனர். பலர் கைகால் இழந்து கஷ்டப்படுகின்றனர். அன்றியும், பலர் வீடு இழந்து, பொருளிழந்து, உறுப்பிழந்து மிகுந்த துன்பம் அனுபவித்து வருகின்றனர். அவர்கட்கு உதவி செய்வதற்காகப் பணம் சேர்க்க அவ்விருவரும் உண்டியை எடுத்துக்கொண்டு வந்தனர்.

ஆனந்தன்: நிலநடுக்கம் என்றால் என்ன அப்பா!

தந்தை: நல்ல கேள்விதான். உன்னைப்போன்ற இளைஞர்கள் இப்படிப்பட்ட இயற்கையின் விளைவுகளை எல்லாம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமே. நிலநடுக்கம் என்றால் பூமி அசைவு என்று பொருள். அதைப் 'பூகம்பம்,' 'மண் கம்பம்' என்றும் சொல்லுவார்கள். நாம் வசிக்கின்ற நிலப்பரப்பின் கீழே பல விதமான இயற்கை அமைப்புகள் காணப்படுகின்றன. சில இடங்களில் பூமிக்கு அடியிலே இருக்கின்ற பாறைகள் உருகுகின்றனவாம். பூமியின் உட்பகுதி மிக உஷ்ணம் வாய்ந்ததென்றும், சில இடங்களில் அதன் காரணமாக வெந்நீர் ஊற்றுக்கள் உண்டாகின்றன என்றும் சொல்லுகின்றனர். அப்படிப்பட்ட இடங்களிலே சில பகுதிகள் உருகிச் சரிவதனால் பூமி அதிர்ச்சி அல்லது நிலநடுக்கம் ஏற்படுகிறது.

ஆனந்தன்: நீங்கள் சொல்லுவது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. பூமியின் உள்ளே

எப்படி உஷ்ணம் ஏற்படுகிறது? நீங்கள் சொன்ன மாறு பாடெல்லாம் எப்படி உண்டாகின்றன? என்பவற்றை இன்னும் நன்ருக விளக்கிச் சொல்லுங்கள்.

தந்தை: நல்லது. நாம் வசிக்கும் இப்பூமி பல இலட்ச ஆண்டுகளுக்கு முன்பு சூரியனிடத்திலிருந்து பிரிந்து வந்த ஒரு கிரகம் என்றும், ஆரம்பத்தில் பூமி அக்கினிக் குழம்பாக இருந்தது என்றும் நில ஆராய்ச்சி யாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். அக்கினிக் குழம்பாக இருந்த பூமி காலஞ் செல்லச் செல்ல மேற்பகுதி இறுகித் தரையாகவும் பாறையாகவும் மாறியது. பூமியின் உட் பகுதி சிறிது சிறிதாக ஆறிக்கொண்டே வருகிறது. இன் றைக்கும் அக்கினிக் குழம்பு பூமியின் உட்பாகத்தில் இருக்கின்றது. பூமியின் உட்பகுதி சூடாயிருப்பதற்கு இதுவே காரணம்.

மேலும் இந்நிலப் பரப்பு மேலே சாதாரணமாகக் காணப்பட்டாலும் பூமியைத் தோண்டிப் பார்ப்போமே யானல் பல வகையான அதிசயங்களைக் காணலாம். அப்படித் தோண்டுவதுகூட ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதாவது ஏறக்குறைய 100 அல்லது 150 அடி களுக்கு மேல் உள்ளே தோண்டிக் கொண்டு செல்ல முடியாது. ஏனென்ருல் உள்ளிருந்து ஒரு விதமான வாயு உண்டாகி மக்களுக்குத் துன்பத்தை உண்டாக்கும். மேலும் மிகவும் உஷ்ணமாக இருக்கும். பூமிக்குள் மக்களுக்கு வேண்டிய எல்லாவிதமான உலோகப் பொருள்களும், மண்ணெண்ணெய், பெட்ரோல், நிலக் கரி முதலானவைகளும் மற்றும் பல பொருள்களும் கிடைக்கின்றன. பூமியின் அதிசயத்தைப் பற்றிச்

சொல்வதென்றால் பல நாட்களுக்குச் சொல்லிக் கொண்டே யிருக்கலாம்.

ஆனந்தன்: எரிமலை என்று சொல்லுகிறார்களே அது என்ன அப்பா?

தந்தை: எரிமலை என்பது பூமியின் அடிப் பகுதி உஷ்ணம் மிகுந்து அதனால் உருகிய பொருள்கள் ஒன்று சேர்ந்து பூமி மட்டத்திற்கு மேலே வந்து சாதாரண மலை போன்ற வடிவத்தோடு தீக்குழம்பை வீசும். அப்பொழுது அதனால் ஏற்படுகின்ற சேதம் அளவற்றதாகும்.

ஆனந்தன்: எரிமலைகள் எங்கெங்கு இருக்கின்றன?

தந்தை: ஜப்பானிலும், சிசிலித் தீவிலும் மற்றும் சில இடங்களிலும் இருக்கின்றன. அவற்றுள் சிசிலித்தீவில் இருக்கும் எரிமலை ஏறக்குறைய 11000 அடி உயரம் இருக்கிறதாம். ஆனால் ஒன்று; எரிமலை என்று சொன்னால் இவை எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் என்பது பொருளல்ல; சில சமயங்களில் தான் அனலைக் கக்கும். அப்பொழுது உஷ்ணவாயு உண்டாகும். எங்கும் புகைப்படலம் மிகுந்து வானத்தை மறைக்கும். பாறைகளும் கற்களும் வெடித்துச் சுற்றிலும் சிதறும். இப்படி ஏற்படுவதனால் உண்டாகும் கெடுதிகளுக்குக் கணக்கு இல்லை. அம்மலைக்குப் பக்கத்திலே உள்ள நகரங்களும் கிராமங்களும் நாசமடையும்.

ஆனந்தன்: நிலநடுக்கம், என்பது எவ்வளவு நேரம் இருக்கும்.

தந்தை: சில இடங்களில் சில விநாடிகளே இருக்கும். அதற்குள்ளாகவே ஏழடுக்கு மாளிகைகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் தரைமட்டமாய் விடும். மக்களெல்லோரும் மண்ணுக்குள் புதைந்து விடுவர். சில இடங்களில் சில நிமிஷங்கள் வரை இருக்கும். கொஞ்ச நாட்களுக்கு முன் லிஸ்பன் என்னுமிடத்தில் உண்டான பூகம்பம் ஐந்து நிமிடம் இருந்ததாம். ஜமெய்க்கா என்னுமிடத்தில் சில மணி நேரம் இருந்ததாம். சில சமயங்களில் சில இடங்களில் பல வாரம், பல மாதம்வரை நிலநடுக்க அதிர்ச்சி இருக்குமாம். சமீபத்தில் அசாமில் ஏற்பட்ட நிலநடுக்கம்கூட பல முறை விட்டுவிட்டு உண்டாயிற்று. பூமி அதிர்வும் பல நாட்கள் காணப்பட்டன. அசாமின் இயற்கை அமைப்பே பலவகையான மாறுபாடுகளை அடைந்து விட்டது. மலைகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன என்று சொல்லப்படுகிறது.

ஆனந்தன்: நம் நாட்டில் இதற்குமுன் எப்பொழுதாவது இப்படிப்பட்ட நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறதா?

தந்தை: *1934*-ல் பீகார் மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டு, ஏராளமான உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன.

ஆனந்தன்: அப்பொழுதுகூட நிதி திரட்டிக் கொடுத்து உதவி செய்தார்களா?

தந்தை: நல்ல கேள்வி கேட்டாய்! இப்பொழுது இந்தியக் குடியரசின் இணையிலாத் தலைவராக இருக்

கின்ற டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் அப்பொழுது 'பீகார் நிலநடுக்க நிவாரணநிதி'என்ற ஒன்றை ஏற்படுத்திப் பல இலட்சக் கணக்கான ரூபாய்கள் மக்கள் மனமுவந்து கொடுக்க அவற்றைப் பெற்று அரிய பெரிய உதவிகளைச் செய்தார்.

ஆனந்தன்: இப்பொழுது அசாமில் மக்களுக்கு எப்படி உதவி செய்யப்படுகிறது?

தந்தை: நமது இந்தியாவின் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்களும் மற்றும் பல தலைவர்களும் அசாம் சென்று அங்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு ஆறுதல்கூறி எல்லாவகையான உதவிகளையும் உடனே செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். இத்தகைய ஆபத்துக் காலங்களில் உதவி புரிவதற்கென பிரதம மந்திரி நேரு அவர்கள் தேசீய நிவாரணநிதி ஒன்று ஏற்படுத்தியுள்ளார். அந்நிதியிலிருந்தும் பொருளுதவி செய்யப்பட்டுள்ளது. அன்றியும் அருள் உள்ளம் கொண்ட பல பெரியார்கள் ஆயிரமாயிரமாகப் பொருளுதவி செய்கின்றனர். மேலும் அங்கங்கே உள்ள சமூக சேவைபுரியும் தொண்டர்கள் படக்காட்சி, இன்னிசைக் கச்சேரிகள் முதலியவற்றை ஏற்படுத்தி அவற்றின் மூலம் பணத்தைச் சேகரித்து அனுப்புகின்றனர். அன்றியும் இப்பொழுது வந்ததைப்போல் உண்டிகளை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அவர்கள் மகிழ்ச்சியோடு கொடுக்கும் காசுகளையும் சேர்த்து அனுப்புகின்றனர்.

ஆனந்தன்: இந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்வார்கள்? இப்பணம் போதுமா?

தந்தை: வீடிழந்தவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பார்கள். கைகால் இழந்து கஷ்டப்படும் மக்களுக்கு வைத்திய உதவி செய்வார்கள். பொருளை இழந்து வாடுகின்றவர்க்குப் பொருளுதவி செய்து, எல்லோர்க்கும் உணவு உடை முதலியவற்றைக் கொடுத்து உபசரிப்பார்கள். அழிந்த நகரத்தை மீண்டும் புதுமையாக அமைப்பர். இப்படிப் பல விதமான நற்செய்கைகளைச் செய்வர். இவற்றிற்கு அரசாங்கமும் பண உதவி செய்யும்.

ஆனந்தன்: அப்பா இன்று நான் பல முக்கியமான செய்திகளைத் தெரிந்து கொண்டேன். நானும் என்னால் முடிந்தவரை சமூகத் தொண்டு செய்ய விரும்புகிறேன்.

தந்தை: நம்மால் முடிந்தவரை எப்பொழுதும் பிறர்க்கு உதவி செய்வதுதான் நம்மைப் போன்றவர் கடமையாகும். அதுவே சிறந்த சமூகத்தொண்டாகும்.

ஆனந்தன்: சரி அப்பா. இன்று முதல் நான் என்னாலியன்றவரை பிறர்க்கு உதவி புரிகின்றேன். இது போல எனக்கு நீங்கள் தினமும் ஒவ்வொரு புதிய செய்திகளைச் சொல்லுங்கள்.

தந்தை: சரி நாளையிலிருந்து சொல்லுகிறேன். இப்பொழுது நாழியாகிவிட்டது. பள்ளிச்கூடத்திற்குப் புறப்பட்டுச்செல்.

## அருஞ்சொற் பொருள்

தனயன்=பிள்ளை மன்றம்=சபை
இறுகி=கட்டியாகி அனல்=நெருப்பு
ஆறுதல்=தேறுதல்மொழி

## வினாக்கள்

1. சமீபத்தில் எங்கு நிலநடுக்கம் ஏற்பட்டது? அதனால் உண்டான கெடுதிகள் என்ன?
2. நிலநடுக்கம் எப்படி உண்டாகிறது?
3. பூமியின் உட்பகுதி ஏன் உஷ்ணமாக இருக்கிறது?
4. எரிமலை எப்படி ஏற்படுகிறது? எரிமலைகள் எங்கெங்கு உள்ளன?
5. எவ்வெவ்விடங்களில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது?
6. 1934-ல் எங்கு பூகம்பம் ஏற்பட்டது? அப்பொழுது அங்கிருந்த மக்களுக்கு உதவியவர் யார்?
7. அசாம் மக்களுக்கு எப்படி உதவி செய்யப்பட்டது?

## கட்டுரைப்பயிற்சி

1. 'நிலநடுக்கமும் அதனால் ஏற்படும் தீமைகளும்' என்னும் பொருள் பற்றிப் பதினைந்து வரியில் எழுது.
2. 'சமூக சேவையின் அவசியம்' என்பதைப்பற்றிப் பதினைந்து வரியில் எழுது.

## மொழிப்பயிற்சி

1. நிலநடுக்கம் ஏற்பட்டது என்று பத்திரிகையில் படித்தாய் அல்லவா? வானொலியிலும் சொன்னார்கள் அல்லவா? இவ்விரண்டு வினாவாக்கியங்களையும் ஒரே வினாவாக்கியமாக மாற்று.
2. வாக்கியத்தில் அமைத்து எழுது:—
   சிறிது சிறிதாக, அளவற்றது, மனமுவந்து.
3. சில இடங்களில் வெந்நீர் ஊற்றுக்கள் உண்டாகின்றன:—
   எழுவாய் பயனிலைகளை எழுது.
4. பின்வரும் ஒருமைவினைகளைப் பன்மை வினைகளாக எழுது:—
   மறைத்தது, அளவற்றது, உண்டாயிற்று, செய்யப்படுகிறது.

———

# 16. அணைக்கட்டுகளும் பயிர்த்தொழிலும்

நாட்டில் விவசாயம் வளரவும், மக்கள் பசியின்றி உண்டு களிக்கவும் உணவுப்பொருள் மிகுதியாக விளைவிக்கவும் தண்ணீர் அவசியமாகும். "நீரின்றமையாது உலகு எனின் யார்க்கும் வானின்றமையா தொழுக்கு" என்பது வள்ளுவர் வாய்மொழியாகும். அந்நீரை மக்கள் மழையின்மூலம் பெறுகின்றனர். மழையில்லாவிடின் மக்கள் வாழ்வுகெடும்; பஞ்சம் உண்டாகும். அதனால் மழை நமக்கு மிகவும் இன்றியமையாததாகும். சிற்சில சமயங்களில் பருவமழை தவறி விடுகின்றது. அப்பொழுது மக்கள் உழவுத்தொழில் செய்யமுடியாமல் வருந்துவர். இக்குறையை நீக்க மழைக் காலங்களில் பெய்யும் தண்ணீரைப் பாழாக்காமல் ஏரி, குளம் முதலான நீர் நிலைகளில் நிரப்பிவைத்துக் கொண்டு விவசாயத்தை நடத்துவர். ஆற்றில் செல்லும் நீர் வீணாகக் கடலில் கலந்துவிடாதபடி அந்நீரைத் தேக்கி அணைகள் கட்டி விவசாயத்தை வளர்க்கின்றனர். இம்முறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம்நாட்டில் இருந்ததென்பது தெரிகிறது. கரிகாலன் என்னும் சோழமன்னன் காவிரி யாற்றின் வெள்ளத்தால் கிராமங்களும், பயிரும் நாசமாவதைத் தடுக்கவும், என்றும் பயிர்த்தொழில் பழுதின்றி நடப்பதற்கும் காவிரியில் திருச்சிக்கு அருகில் கல்லணை என்று கட்டி, சோழநாட்டை வளமுறச் செய்தான் என்று முன்பே படித்தீர்கள் அல்லவா?

இதுபோன்ற அணைகள் பல இக்காலத்தில் கட்டப் பட்டுள்ளன; கட்டப்பட்டு வருகின்றன. இந்தியாவில் வடக்கே சிந்து நதியில் சுக்கூர் என்னுமிடத்தில் கட்டப் பட்டுள்ள சுக்கூர் அணைக்கட்டும், தென்னிந்தியாவில் சேலத்துக்கு அருகில் மேட்டூரில் கட்டப்பட்டுள்ள மேட்டூர் அணைக்கட்டும் நம் நாட்டிலே உள்ள அணைக் கட்டுகளில் சிறந்தவைகளாகும். இரண்டும் பல கோடிக் கணக்கான ரூபாய் செலவழித்துப் பல ஆண்டுகள் உழைப்பின் பயனாகக் கட்டப்பட்டுள்ளன. இவ்விரு அணைக்கட்டுகளாலும் இலட்சக் கணக்கான ஏகர் நிலங் கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

மேட்டூர் என்பது சேலம் ஜில்லாவின் எல்லையில் இருக்கின்றது. அங்கு மலைத்தொடர்கள் அதிகம் உண்டு. அம்மலைத் தொடர்களின் உதவியினாலேயே சிறந்த அணைக்கட்டைக் கட்ட முடிந்தது. காவிரி நதி குடகுமலை யின் அருகில் தோன்றி,மைசூர்ப் பிரதேசம்,திருச்சி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களின் வழியாகச்சென்று கடைசியில் வங்காளக் குடாக்கடலில் சங்கமமாகிறது. காவிரியின் நீளம் ஐந்நூறு மைல்களுக்கு மேற்பட்டதாகும். காவிரி யிலிருந்து பிரிந்து செல்லும் கிளை நதிகள் நூற்றுக்கு மேற்பட்டுள்ளன. இவைகளில் மழைக் காலங்களில் மட்டும் தண்ணீர் ஓடும். வெய்யிற் காலங்களில் வறண்டு கிடக்கும். இந்நிலைமாறி என்றும் நீர் நிறைந்து செல்லும் சிறப்பு மேட்டூர் அணைக்கட்டினால் ஏற்பட்டுள்ளது.

இவ்வணை கடல் மட்டத்திற்குமேல் எண்ணூறு அடி உயரம் உள்ளது. இதில் கீழ்மதகு, நடுமதகு, மேல் மதகு என்று மூன்று மதகுகள் உள்ளன. நீரின் உயர்

வுக்கு ஏற்றாற்போல இம்மதகுகள் திறந்து விடப்படும். அம்மதகிலிருந்து வெளிவரும் நீர் வாய்க்கால்களின் மூலமாக வயல்களில் பாய்ந்து நிலத்தை வளம் பெறச் செய்



மேட்டூர் அணைக்கட்டு

யும். இவ்வணைக்கட்டு ஏறக்குறைய ஒரு மைல் நீளம் உள்ளது. அதன் நீர் நிலையின் பரப்பு முப்பத்து மூன்று சதுர மைல்களாகும். ஆழம் நூற்று அறுபத்தைந்து அடிகளாகும்.

மேட்டூர் அணைக்கட்டின் மதகுகள் மின்சாரசக்தியால் இயக்கப்படுகின்றன. அங்கு பலர் பல வேலைகளில் அமர்ந்து பணியாற்றி வருகின்றார்கள். அங்கு மின்சார உற்பத்தியும் இப்பொழுது செய்கிறார்கள். தென்னாட்டின் பெரும்பகுதி அம்மின்சார சக்தியைப் பெற்று வருகிறது. இதனால் மேட்டூர் அணைக்கட்டு கட்டிய பிறகு உழவுத்தொழிலும், பிற கைத்தொழில்களும் வளர்ச்சி அடைந்து வருகின்றன. பயிரிடமுடியாத நிலங்

கள் என்று ஒதுக்கப்பட்ட தரிசு நிலங்களெல்லாம் வளம் பொருந்திய நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. கோயம் புத்தூர், சேலம், தஞ்சாவூர் ஜில்லாக்கள் இவ்வணைக் கட்டின் மூலமாகப் பெரும் பயனைப் பெற்றுள்ளன. தஞ்சாவூர் ஜில்லாவில் மாத்திரம் மூன்று இலட்சம் ஏக்க ருக்கு மேற்பட்ட நிலங்கள் பயிரிடப்படுகின்றன என்றால் இவ்வணைக் கட்டினால் உண்டாகும் நன்மைகள் எவ் வளவு என்பது தெரிகிறது அல்லவா?

சங்ககாலப் புலவர் ஒருவர் சோழ நாட்டின் சிறப் பைப்பற்றிக்கூறும் பொழுது, "ஒரு பெண் யானை படுக்கும் இடத்தில் ஏழு ஆண் யானைகளுக்கு வேண்டிய உணவுப்பொருளை உற்பத்தி செய்யக்கூடிய வளம் பெற்ற நாடு" என்று புகழ்ந்துள்ளார். இதிலிருந்து அந் நாட்டின் நிலவளத்தையும் நீர்வளத்தையும் அறிந்து கொள்ளலாம்.

இந்தியாவில் இதுபோன்ற அணைக்கட்டுகள் பல கட்டுவதற்குத் திட்டமிட்டிருக்கின்றார்கள். கிருஷ்ணு பெண்ணையாறு அணைக்கட்டுத் திட்டம் என்பது அவற்றில் ஒன்று. இவ்வணைக்கட்டுகளெல்லாம் கட்டி முடிந்து விடுமானால் நம்நாடு உணவுப் பொருளுக்காகப் பிறநாடு களை எதிர்பார்க்கும் நிலை ஏற்படாது. நமது நாட்டுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும் என்னும் அரசாங் கத்திட்டமும் நிறைவேறும்; மக்களும் பஞ்சத்திற்கு அஞ்சாமல் இன்பமாக வாழலாம்.

இளைஞர்கள் மேட்டூர் அணைக்கட்டுக்குச் சென்று அதைப் பார்க்கவேண்டும். முடியுமானால் இந்நாட்டில் உள்ள மற்ற அணைக்கட்டுகளையும் பார்க்கலாம்.

## அருஞ்சொற் பொருள்

வறண்டு=காய்ந்து (வற்றி)
தரிசுநிலம்=கறம்புநிலம்
நிறைவேறும்=பூர்த்தியாகும்
சங்கமம்=சேர்தல்(கலத்தல்)

## வினாக்கள்

1. நீர் மக்களுக்கு முக்கியமானது—எவ்வாறு?
2. மழையில்லாக் காலங்களில் மக்கள் விவசாயம் செய்ய மேற்கொண்ட முறைகளை எழுது.
3. 'கல்லணை' எங்கு யாரால் எப்பொழுது கட்டப்பட்டது?
4. இந்தியாவில் உள்ள இரண்டு பெரும் அணைக்கட்டுகள் எவை? அவை எவ்விடங்களில் உள்ளன?
5. காவிரி எங்கு உற்பத்தியாகி எவ்வழியாகச் சென்று எங்கு சங்கமமாகிறது?
6. மேட்டூர் அணைக்கட்டால் உண்டான நன்மைகளை எழுது.
7. மேட்டூர் அணைக்கட்டால் பயன் பெறும் ஜில்லாக்கள் எவை?
8. சங்ககாலப்புலவர் ஒருவர் சோழ நாட்டின் வளத்தை எப்படிச் சிறப்பித்துள்ளார்?

## பயிற்சிகள்

1. வாக்கியத்தில் அமைத்தெழுது:—

இன்றியமையாதது, பழுதின்றி, சங்கமம், வளமுற.

2. பிரித்து எழுது:—

ஐந்நூறு, வெய்யிற்காலம், இலட்சக்கணக்கு, எண்ணூறு.

3. இப்பாடத்திலிருந்து இடப்பெயர், தொழிற்பெயர், காலப்பெயர் இவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணம் எழுது.

4. 'இக்குறையை நீக்க மழைக் காலங்களில் பெய்யும் தண்ணீரைப் பாழாக்காமல் ஏரி குளம் முதலான நீர் நிலைகளில் நீரை நிரப்பி வைத்துக்கொண்டு விவசாயத்தை நடத்துவர்' — இவ்வாக்கியத்திலுள்ள வேற்றுமையுருபுகள் உள்ள சொற்களை எழுது.

---

# 17. பிக்மி குள்ளர்கள்

"இருண்ட கண்டம்" என்று அழைக்கப்படும் ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நதி தீரத்தில் அடர்த்தியான பெரிய காடுகள் இருக்கின்றன. அங்கு ஆண்டு முழுமையும் மழைபெய்து கொண்டே இருக்கும். பூமத்தியரேகை இப்பிரதேசத்தின் வழியாகச் செல்லுவதால் இங்கு வெய்யிலின் வெம்மை மிகவும் அதிகம். காங்கோநதி காட்டுப்பிரதேசங்கள் இருளடர்ந்து அடர்த்தியாகவும் ஈரமாகவும் இருக்கும். இப்பிரதேசங்களில்தான் பிக்மிகள் என்று அழைக்கப்படும் குள்ளர்கள் வாழ்கிறார்கள்.

காடுகளில் உள்ள மரங்கள் பல வீடு கட்டவும் படகு அமைக்கவும் பயன் படுகின்றன; சில வைத்தியத்திற்கு உபயோகிக்கப்படுகின்றன; மற்றுஞ்சில உணவு அளிக்கின்றன. எனினும் இங்கு வாழும் மக்களின் தொகை மிகக்குறைவே. அப்பிரதேசம் முழுமையும் செல்வங்கள் குவிந்துள்ளன. ஆனால் அவைகளை அடைவதென்றால் பெருந்துன்பத்திற்கு ஆளாகவேண்டியிருக்கின்றது.

பிக்மிகள் சிறிதுகாலம் காட்டில் ஒரு இடத்தில் தங்க வேண்டியிருப்பின் அவ்விடத்திலுள்ள மரங்களை நெருப்புக்கு இரையாக்கி அழித்துச் சுத்தப்படுத்துவர்.

பிறகு அவர்கள் சிறு மரக்கிளைகளை பூமியில் நட்டு அவற்றின் நுனிகளை வளைத்து ஒன்றாகக் கட்டி விடுவார்கள். அவற்றின் மீது மரப்பட்டைகளையும் வாழை இலைகளையும் போட்டு மூடி விடுவர். இதுவே பிக்மிகளின் குடிசையாகும்.



பிக்மி குடிசை

ஒவ்வொரு குடிசையிலும் பத்து அல்லது பன்னிரண்டு பேர்கள் இருப்பார்கள். அவர்கள் எல்லோரும் குடும்பத்தலைவன் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட ஒருவனுடைய கட்டளைகளை அப்படியே பின்பற்றி நடப்பார்கள். அவன்தான் அவர்களிடையே மூளும் சச்சரவுகளைத் தீர்த்துவைப்பான். அக்குடிசையில் சில சிறு மண்பாண்டங்களும், நீர் எடுத்துச் செல்லப் பயன்படும் மண்பானைகளும் இருக்கும்.

பிக்மிகள் உணவுக்காகப் பயிரிடுவது கிடையாது. வேட்டையாடல் அவர்களுடைய முக்கியத்தொழில்; மீன் பிடிப்பதும் உண்டு. வேட்டையில் வில்லையும் அம்பையும் உபயோகிப்பார்கள். அம்பெய்தலில் அவர்கள் திறமைசாலிகள். நான்கு அம்புகளை ஒன்றன்பின் ஒன்றாக அனுப்புவார்கள். முதல் அம்பு குறிப்பிட்ட இடத்தை அடைவதற்குமுன், நான்காவது அம்பு வில்லி

லிருந்து புறப்பட்டுவிடும் என்றால், அவர்கள் அம்பெய்யும் திறனை என்னென்பது!

பிக்மிகள் யானைகளைக்கூட வேட்டையாடுவார்கள். முதலில் அம்பெய்து யானையின் கண்களைக் குருடாக்கி விடுவார்கள். பிறகு அதன் அருகில் சென்று அம்புகளாலும் ஈட்டிகளாலும் அதைக்கொன்று விடுவார்கள். யானையின் மாமிசமே அவர்களுக்குச் சிறந்த உணவாகும். யானையின் தந்தத்தைப்பற்றி அவர்கள் அக்கறை கொள்வதேயில்லை. பூமியில் குழிவெட்டி அதைக் கிளைகளாலும் தழைகளாலும் மூடி பிக்மிகள் காட்டு விலங்குகளைப் பிடித்துக்கொள்வார்கள். பிக்மிகள் மீன் பிடிக்கத் தூண்டில்களை உபயோகிப்பது கிடையாது. துண்டு நூல்களைக்கொண்டும், துளி மாமிசத்தைக்கொண்டும் பிக்மிகள் மீன் பிடிப்பார்கள்.

பிக்மிகள் வேட்டையாடல், மீன் பிடித்தல், அம்பு, வில் ஆகியவைகள் செய்தல் தவிர வேறு தொழில்களைச் செய்வது கிடையாது. தமக்கு வேண்டிய பழங்கள், புகையிலை, ஆயுதங்கள் முதலியவற்றை மற்ற இனத்தவர்களிடமிருந்து வாங்கிக்கொள்வார்கள். அவைகளுக்குப் பதிலாக மாமிசம், தோல்கள், தந்தம், இறகுகள் முதலியவற்றைக் கொடுத்து விடுவார்கள்.

பிக்மிகளுக்கு வாழைப்பழம் என்றால் பிரியம் அதிகம். ஒரு பிக்மியால் ஒரே சமயத்தில் அறுபது வாழைப்பழங்களை ஒவ்வொன்றாகச் சாப்பிடமுடியும் என்று சொல்லப்படுகிறது. வாழை மரங்களைப் பயிரிடும் மற்ற இனத்தவருடைய ஊரருகில் பிக்மிகள்

தங்கள் குடிசைகளை அமைத்துக் கொள்வார்கள். தாங்கள் கொன்ற பிராணியின் மாமிசத்தைத் துண்டு துண்டாக நறுக்கி வாழைமரத்தில் கட்டிவிடுவார்கள். அவ்வாறு செய்வது வாழைப்பழங்களின் விலைக்குப் பதிலாக மாமிசத்துண்டங்களை அளிப்பதாகப் பொருள் படும். மற்றுஞ் சில தடவைகளில் பிக்மி பழுக்காத மரத்தில் அம்பை எறிவான். வாழை மரம் பழுத்த பிறகு அந்த மரத்துப் பழங்கள் தனக்கே வேண்டுமென்பது அதன் அடையாளம். பிக்மி குள்ளர்களுக்குப் பயப்படும் தோட்டக்காரர்களும் அம்மரத்தை அவ்வாறே விட்டுவிடுவார்கள். அம்மரம் பழுத்த பிறகு பிக்மிகள் அங்கு வந்து அப்பழங்களைச் சாப்பிடுவார்கள்.

அங்கு ஓர் ஆண்டில் எட்டு மாதங்கள் தினமும் மழை பெய்யும். அதனால் பிக்மிகள் உணவுக்காகக் கஷ்டப் படுவார்கள். அவர்கள் அப்பொழுது கண்டவற்றைச் சாப்பிடுவார்கள். தவளைகள், எலிகள் முதலியவற்றை யும் சாப்பிடுவார்கள். பிக்மிகளின் வாழ்க்கை மிகவும் கரடுமுரடானது. அதனால் எந்தப் பிக்மியும் சாதாரண மாக நாற்பது வயதிற்குமேல் வசிப்பது கிடையாது. அவர்கள் வாழும் பிரதேசம் மிக வெப்பமாய் இருப்ப தால் அவர்கள் குறைவான ஆடைகளையே உபயோகிக் கின்றார்கள். ஆண்கள் ஒரு துண்டு ஆடையே அணிந்து கொள்வர். பெண்கள் சாதாரணமாக இலைகளை அணிந்து கொள்வர். பிக்மிகள் மிகக் குள்ளமானவர்கள். ஆனால் மிகவும் வலிமையும் தைரியமும் உடையவர்கள். அவர்களுக்குத் தண்ணீர் பிடிக்காது. அதனால் அவர்கள் குளிப்பது கிடையாது. அவர்களுக்குக் கல்வி அறிவு

சிறிதும் இல்லை. அவர்கள் தங்கள் உணவுகளைச் சமைப்பது கிடையாது. பிக்மிகள் நடனம் ஆடுவதில்



பிக்மிகள் நடனம்

மிகவும் விருப்பமுள்ளவர்கள். அவர்கள் வட்டமாக நின்றுகொண்டு நடனமாடுவார்கள்.

பிக்மிகள் தங்கள் தந்தையிடமாவது, அன்னையிடமாவது, மனைவியிடமாவது குழந்தையிடமாவது அன்பு பாராட்டமாட்டார்கள். அவர்களுக்கென்று தனியாக வரலாறு ஒன்றும் கிடையாது. அவர்கள் அயலாரைப் பார்த்தால் அஞ்சி ஓடி ஒளிவர். அவர்கள் ஒற்றுமையுடன் வாழமாட்டார்கள். பிராணிகளிடமும் எதிரிகளிடமும் மிகவும் கொடூரமாக நடந்து கொள்வார்கள்.

அவர்களுக்கென்று சொந்தமான பிரதேசம் எதுவும் இல்லை. அவர்கள் நாம் எங்கே இருக்கிறோம் என்பதையும் பொருட்படுத்த மாட்டார்கள். புதிய

மனிதர் எவரேனும் அவர்கள் இருக்குமிடத்திற்கு வருவதை அவர்கள் விரும்புவதில்லை. யாரேனும் ஒருவர் வந்தால் அவரைப் புதர்களில் மறைந்திருந்து அம்பு எய்திக் கொன்று விடுவார்கள்.

எஸ்கிமோக்களுக்கும் பிக்மிகளுக்கும் சில மாறு பாடுகள் உண்டு. எஸ்கிமோக்கள் காடுகளையும், யானை, புலி, சிங்கம் முதலிய காட்டு மிருகங்களையும் கண்ட தில்லை. அதேபோல் பிக்மிகள் பனிக்கட்டியையும் பனியையும் பார்த்ததில்லை. அவர்களைப்போல் கயாக் என்னும் படகையோ சறுக்குவண்டிகளையோ பிக்மிகள் பார்த்ததும் இல்லை; பயன் படுத்தியதும் இல்லை. இரு வரும் வேட்டையாடவும் தங்களுக்கு வேண்டிய உணவைப் பெறவும், பாதுகாப்புடன் வாழவும் கற்றுக் கொண்டுள்ளனர்.

இப்படிப்பட்ட விந்தை மனிதர்களின் விநோத வாழ்க்கை நமக்கு ஆச்சரியத்தை விளைவிப்பனவாகும்.

## அருஞ்சொற் பொருள்

வெம்மை=கொடுமை — மூளும்=உண்டாகும்

வரலாறு=சரித்திரம்

## வினாக்கள்

1. இருண்ட கண்டம் என்று எதற்குப்பெயர்?
2. காங்கோ நதிப்பகுதியின் தன்மைகளை எழுது.
3. பிக்மிகளின் குடிசை அமைப்பை எழுது.

4. பிக்மிகளின் தொழில்கள் எவை?

5. பிக்மிகளின் வாழ்க்கை நிலையை விளக்கு.

6. பிக்மிகள் யானைகளையும் காட்டு மிருகங்களையும் எப்படிப் பிடிப்பர்?

7. பிக்மிகளுக்கும் எஸ்கிமோக்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எழுது.

## பயிற்சிகள்

1. பிரித்து எழுது:—

மரப்பட்டை, மரக்கிளை, அம்பெய்தி, காட்டுப் பிரதேசம்.

2. வாழை மரங்களைப் பயிரிடும் மற்ற இனத்தவருடைய ஊரருகில் பிக்மிகள் தங்கள் குடிசைகளை அமைத்துக் கொள்வார்கள் — இத்தொடரிலுள்ள வேற்றுமை யுருபு உள்ள வார்த்தைகளை எடுத்தெழுதி என்ன வேற்றுமை என்றும் குறிப்பிடு.

3. இப்பாடத்திலிருந்து உடம்படு மெய் பெற்றுள்ள சொற்றொடர்கள் இரண்டை எடுத்து எழுது.



பண்டித ஜவஹர்லால் நேரு

# 18. நமது பிரதம மந்திரி

அடிமைத்தளை பூட்டப்பட்டு அல்லலுற்ற இந்திய மக்களின் தளையை நீக்கி ஆண்மை உள்ளவர்களாகச் செய்வதற்குப் பல பெரியோர்கள் அல்லும் பகலும் பாடுபட்டனர். அவர்களிலே லோகமான்ய பாலகங்காதர திலகர், கோபாலகிருஷ்ணகோகலே, சி. ஆர். தாஸ், பண்டித மோதிலால் நேரு, மகாத்மா காந்திஅடிகள் முதலான தலைவர்கள் முதன்மையானவர்களாவார்கள். அவர்களுடன் சேர்ந்து இளமையிலிருந்தே நாட்டுக்காக உழைத்து, அவ்வுழைப்பின் பயனைக்கண்டு, தாம் எண்ணியபடி நாட்டு முன்னேற்றத்திற்காகத்தொண்டாற்றிவரும் நம் இந்தியப் பிரதமமந்திரி ஜவஹர்லால்நேரு அவர்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.

அலகாபாத்தில் வழக்கறிஞராக இருந்து பெரும் பொருள் ஈட்டிய பெரியார் மோதிலால்நேரு அவர்களும், அவருடையமனைவியார் சொரூபராணிஅம்மையாரும் செய்த தவத்தின் பயனாக உலகம் புகழும் உத்தமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் 14—11—1889ல் பிறந்தார்கள். செல்வக் குடியில் பிறந்த ஜவஹர் சிறப்புடன் வளர்ந்துவந்தார். ஆங்கிலம், கணிதம், சரித்திரம் முதலிய பல கலைகளையும் இளமையில் தமக்காக வீட்டில் அமர்த்தப்பட்ட ஆசிரியரிடம் நன்றாகக் கற்றார். ஜவஹருடைய பெரிய தாயார் பீபி அம்மையார், அவருக்கு அடிக்கடி இராமா

யணம் முதலான பல கதைகளையும் சொல்வார். அவருடைய தந்தையின் குமாஸ்தாவான முபாரக் அலி என்பவர் அரபிய நாட்டுக்கதைகள் பலவற்றையும் சொல்லுவார். வீரர்கள், சீர்திருத்தக்காரர்கள், தியாகிகள் ஆகியவர்களுடைய வரலாறுகளை இளமையிலே கேட்டு வந்ததனால்தான் அவர் எதற்கும் அஞ்சாத நெஞ்சம் வாய்ந்த வீரராகவும், புதிய கருத்துக்களை உள்ளத்தில் கொண்டு தேவையற்ற பழமைகளை விலக்கும் சீர்திருத்தக்காரராகவும், தியாக வீரராகவும் விளங்குகின்றார்.

மோதிலால்நேரு தமது அருமை மகனை உயர்தரக் கல்வி கற்கும் பொருட்டு மேல்நாட்டிற்கு அனுப்பினார். இலண்டன்மா நகரத்தில் உள்ள ஒரு பள்ளியில் சேர்த்தனர். கல்வியில் ஆர்வம் கொண்ட ஜவஹர் நன்றாகப் படித்து முதன்மையாகத் தேறினார். பிறகு கேம்பிரிட்ஜ பல்கலைக்கழகக் கல்லூரிகளுள் ஒன்றான டிரினிட்டிகல்லூரியில் சேர்ந்து படித்தார். பல்கலைக்கழகப்பட்டம் பெற்றுத் தமது இருபதாம் வயதில் சட்டப் பரீட்சையில் தேறி 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றார். முதலில் ஜவஹர் 'ஐ. சி. எஸ்.' படிக்க வேண்டுமென்று விரும்பினார். அப்பொழுது அவருடைய வயது அப்படிப்பிற்கு வேண்டிய அளவு இல்லாமையினால் அவ் எண்ணத்தை மாற்றிக் கொண்டார்; பாரிஸ்டர் ஆனார்.

பிறகு இந்தியாவுக்கு வந்து அலகாபாத் உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டு தம் தந்தையுடன் சேர்ந்து அத்தொழிலை நடத்தி வந்தார். அவர் மனம் அத்தொழிலை

விரும்பவில்லை. நாட்டுமக்கள் வறுமையால் வாடுவதைக் கண்டார். இளமையில் அவர் மனதில் தோன்றி வந்த நாட்டுப் பற்று மேலும் மேலும் வளர்ந்து வந்தது. இலட்சுமணபுரியில் அப்பொழுது காங்கிரஸ் மகாசபையின் பெருங்கூட்டம் நடந்தது. அதற்கு ஜவஹர்லால் நேருவும் வந்திருந்தார். அங்கு அவர் முதல் முறையாக மகாத்மா காந்தி அடிகளைக்கண்டார்; அடிகளின் அன்புக்கு உரியவரானார்; அவர் ஆசியைப்பெற்றார். அன்று முதல் அடிகளாருடைய உண்மை அன்பராக ஜவஹர் விளங்கி வருகின்றார்.

ஆங்கிலேயர்கள்,முதல் உலக மகாயுத்தம் முடிந்ததும் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதாகச் சொன்னார்கள். பின் அவ்வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருந்தனர். அன்றியும் சுதந்திரத்திற்காகக் கிளர்ச்சி செய்தவர்களையும், காங்கிரஸ் இயக்கத்தையும் அடக்கு முறையால் அடக்கத் துணிந்தனர். தலைவர் பலரைச் சிறைக்கு அனுப்பினர்; சிலரைச் சுட்டு வீழ்த்தினர்; சிலரைத் தடியால் அடித்தனர். ஆனால் மக்கள் இந்த அடக்கு முறைக்கு அஞ்சவில்லை. அடிக்கும் கோலுக்கு அஞ்சாது சீறிவரும் பாம்பைப்போல முன்னிலும் பன்மடங்கு சுதந்திரப்போரில் முன்னேறிச் சென்றனர். காந்தி அடிகள் காட்டிய அறப்போர் முறையைப் பின்பற்றி வரிகொடாதிருத்தல், வெளிநாட்டுப் பொருள்களை வாங்காதிருத்தல், உப்புக் காய்ச்சுதல் முதலிய செய்கைகளைச் செய்தனர். இங்கிலையில் ஜவஹர்லால்நேரு தமது பட்டம், செல்வம் எல்லாவற்றையும் வெறுத்துத் தமது குடும்பத்துடன் அறப்போரில் கலந்து கொண்டார்.

அவர் நன்ருகப் பேசும் திறமை பெற்றவர். அதனுல் தமது சொற்பொழிவின்மூலம் நாட்டு மக்களிடையே புதிய உணர்ச்சியை உண்டாக்கினுர். அவரையும் அவர் குடும்பத்தினரையும் ஆங்கிலேயர் பலமுறை சிறைப் படுத்தினர்.

1920 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகள் தண்டி என்னுமிடத்திற்கு உப்புக் காய்ச்சச் சென்ருர். அப்பொழுது ஜவஹர்லாலுடைய தந்தை மோதிலால்நேரு அவர்கள் தாம் அலகாபாத்தில் வசித்து வந்த "ஆனந்த பவனம்" என்னும் அழகிய மாளிகையைக் காங்கிரஸ் மகாசபைக்கு நன்கொடையாகக் கொடுத்தார். அது மட்டுமல்ல; அவரும் தாய்நாட்டுப்பணியிலே தலைசிறந்து விளங்கினுர். நேரு அவர்கள் காங்கிரஸில் சேர்ந்த நாள் முதல் தமது சுகத்தையும், சுயநலத்தையும், வாழ்க்கை இன்பத்தையும் ஒரு சிறிதும் எண்ணியவர் அல்லர். மற்ற நாடுகளுக்குச் சமமாக நமது இந்தியாவும் விளங்க வேண்டும் என்பது அவருடைய குறிக்கோளாக இருந்தது. அவர் போலீசின் தடியடிக்கு ஆளானுர்; பலமுறை சிறை சென்ருர்; சிலமுறை அவர் எந்தச் சிறையில் இருக்கின்ருர் என்பது கூட ஒருவருக்கும் தெரியாதபடி காவலில் வைக்கப்பட்டு இருந்தார்.

அவருடைய அன்புக்கு உரிய வாழ்க்கைத் துணைவியார் **கமலாநேரு அம்மையார்** அவர்கள் கணவரின் கருத்து அறிந்து நடக்கும் இயல்பினர். அவ்வம்மையாரும் நாட்டுப்பணியில் ஈடுபட்டு உழைத்து 1936-ம் ஆண்டு காலமானுர்கள்.

1929-ம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்திற்கு ஜவஹர் தலைவராக இருந்து இந்தியா முழு உரிமை பெற்ற நாடாக விளங்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார். ஆங்கிலேயர் அப்பொழுது உரிமை வழங்க மறுத்தனர். பிறகு இரண்டாவது உலக மகாயுத்தம் 1939-ல் ஆரம்பித்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் இந்தியாவை அப்போரில் சேர்த்து விடுவதற்கு முயன்றனர். அதனால்அப்பொழுது இந்தியாவின் சில மாகாணங்களிலே பதவியில் இருந்த காங்கிரஸ் மந்திரிகள் அரசாங்கத்தை விட்டு வெளியேறினர்.

1940–ல் "இந்தியா உலக யுத்தத்தில் சேராது: பூரண சுதந்திரம் பெறுவதே காங்கிரசின் நோக்கம்" என்ற இரண்டு தீர்மானங்களும் காங்கிரஸ் மகாசபையில் நிறைவேற்றப் பட்டன. அதன் விளைவாக இந் நாட்டுத்தலைவர்கள் எல்லோரும் சிறைப்படுத்தப்பட்டனர். ஆனாலும் உலக நிலையும், இந்தியர்களின் கிளர்ச்சியும் ஆங்கிலேயர்களை இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் படிச் செய்தன. இந்தியா, **இந்திய யூனியன்** என்றும், **பாகிஸ்தான்** என்றும் இரண்டு நாடுகளாகப் பிரிக்கப் பட்டது. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. அன்றுமுதல் சுதந்திர இந்தியாவின் முதல் அமைச்சராக ஜவஹர் இருந்து நாட்டிற்கு வேண்டிய நற்பணிகளைச் செய்துகொண்டு வருகின்றார். அவருடைய தங்கை திருமதி **விஜயாலட்சுமி பண்டிதர்** அவர்களும் நாட்டுக்காகவும், பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் உழைத்து, இப்பொழுது அமெரிக்

காவில் இந்தியத் தூதராக இருந்து வருகின்றார்கள். அவர்களால் இந்தியாவின் புகழ் வளர்ந்து வருகிறது.

நேரு அவர்கள் உலகப்பெருமக்களுள் ஒருவராகவும், சமாதானத்தை விரும்புகின்ற அறிஞராகவும், அண்ணல் காட்டிய அஹிம்சை, உண்மை என்னும் இரண்டு அற நெறிகளையும் கடைப்பிடித்தொழுகும் பெரியோராகவும் விளங்குகின்றார்கள். "இந்தியாவில் மட்டும் அன்றி இவ்வுலகம் முழுவதும் அமைதியும், அஹிம்சையும், அன்பும், அருளும் நிலைபெற வேண்டும்; அப்பொழுதுதான் உலக மக்கள் ஒரு பயமுமின்றி இன்பமாக வாழமுடியும்" என்று அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கின்றார்.

பலநாடுகளுக்கும் சென்று, பெருமக்கள் பலரோடும் பழகி, இந்தியாவின் சிறப்பைத் தாம் இளமையில் எண்ணியவாறே மற்ற நாடுகளுக்கு மேலாக வளரச் செய்து, மன உறுதியுடன் உழைத்து வரும் நம் இந்தியாவின் இணையிலாப் பிரதம மந்திரி ஜவஹர்லால்நேரு அவர்கள் வாழ்க! என்று வாழ்த்துவதோடு, அவர் நாட்டு முன்னேற்றத்திற்காகக் காட்டுகின்ற நல் வழிகளைப் பின்பற்றி நாம் நடப்போமாக.

வாழ்க நம் ஜவஹர்!

வாழ்க நம் பாரதம்!!

## அருஞ்சொற் பொருள்

தளை = விலங்கு
ஈட்டி = சேர்த்து
அறப்போர் = சத்தியாக்கிரகம்
குறிக்கோள் = இலட்சியம்

## வினாக்கள்

1. இந்தியா சுதந்திரம்பெறஉழைத்தபெரியோர்கள் யாவர்?

2. நேரு அவர்களின் தந்தை, தாய், மனைவியார், பெரிய தாயார் பெயர்களை எழுது.

3. ஜவஹர் அஞ்சா நெஞ்சமுடையவராகவும், சீர்திருத்தக் காரராகவும் விளங்குவதற்குரிய காரணங்கள் எவை?

4. நேரு அவர்கள் எங்கெங்கு கல்வி கற்றார்? என்ன பட்டம் பெற்றார்?

5. காந்தி அடிகளை நேரு முதலில் சந்தித்தது எப்பொழுது?

6. ஆங்கிலேயர்கள் இந்தியரின் சுதந்திரக் கிளர்ச்சியை எவ்வாறு அடக்கினர்? அதன் விளைவு என்ன?

7. மோதிலால்நேரு அவர்களின் தயாளகுணத்திற்கு ஒரு ஆதாரம் காட்டு.

8. *1940*-ம் ஆண்டில் காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் அவற்றின் விளைவுகளும் எவை?

9. ஜவஹருடைய குணச்சிறப்பை எழுது.

10. நேரு அவர்கள் கொண்ட குறிக்கோள் எது? அதை எவ்வாறு நிறைவேற்றி வருகின்றார்?

## பயிற்சிகள்

1. வாக்கியத்தில் அமைத்து எழுது:– பூட்டப்பட்ட, தேவையற்ற, வாக்குறுதி, பன்மடங்கு, நன்கொடை, குறிக்கோள்.

2. சேர்த்து எழுது:–

தொண்டு+ஆற்றி; சட்டம்+பரீட்சை; அறம்+போர்; தியாகம்+வீரர்.

3. ஜவஹருடைய தந்தை மோதிலால் நேரு அவர்கள் அலகாபாத்தில் தாம் வசித்துவந்த ஆனந்தபவனம் என்னும் அழகிய மாளிகையைக் காங்கிரஸ் மகா சபைக்கு நன்கொடையாகக் கொடுத்தார்—இவ்வாக்கியத்தில் வேற்றுமை உள்ள சொற்களை எடுத்தெழுது. என்ன வேற்றுமை என்று தெரிவி.

4. இந்தியாவில் மட்டுமன்றி இவ்வுலகம் முழுவதும் அமைதியும் சாந்தமும் அன்பும் அருளும் நிலைபெற வேண்டும் அப்பொழுதுதான் உலக மக்கள் ஒரு பயமுமின்றி இன்பமாக வாழலாம்—இவ்வாக்கியத்தில் நிறுத்துக் குறிகள் எங்கெங்கு இருக்கவேண்டுமோ அங்கங்கு அமைத்து எழுது.

———

# செய்யுட்பகுதி

## 1. வாழ்த்து

### திருவாசகம்

1. ஒருவனே போற்றி ஒப்(பு)இல்
   அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள்
   கோமளக் கொழுந்தே போற்றி
வருகஎன்(று) என்னை நின்பால்
   வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி
   தமியனேன் தனிமை தீர்த்தே.

(மாணிக்கவாசகர்)

### தேவாரம்

2. பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னை அல்லால் இனியாரை நினைக்கேனே.

(சுந்தரர்)

3. அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

(வில்லிபுத்தூராழ்வார்)

4\. ஆரா அமுதே அரசே ஆனந்தவெள்ளப்
பேராறே மோனப் பெருக்கே பராபரமே

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்(கு) இருப்பதுநீ அன்றோ பராபரமே

அன்பால் கனிந்துகண்ணீர் ஆறுகண்ட புண்ணியர்க்(கு)
உன்பால் வரவழிதான் உண்டோ பராபரமே.

(தாயுமானவர்)

5\. ஆதியாய் அநாதி யாகி அரும்பொருள் அனைத்தும் ஆகிச்
சோதியாய்ச் சொரூப ஞானச் சுடரொளித் தீப மாகி
நீதியாய்த் திறமை ஆகி நித்தியா னந்த மாகி
மாதிரப் புயமும் ஆன முகம்மதே வருகு வீரே.

(மஸ்தான் சாஹிபு)

# 2. அறவுரை

## 1. நன்னெறி

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினுந் திண்மைநிலை போம். 1

கடலே அனையம்யாம் கல்வியால் என்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 2

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. 3

இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவன்மற்(று)
எல்லாம் இருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. 4

தம்மையுந் தங்கள் தலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினும் செல்லாதோ கடல். 5

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகுங் கதலிதான் எட்டிபழுத்(து)
ஆயினும் ஆமோ அறை. 6

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேற்
கைசென்று தாங்கும் கடிது. 7

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தாம் என்றும் மதியாரே—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். 8

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே—நல்லாய்கேள்
காய்முற்றின் தின்தீங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம். 9

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண். 10

## 2. நீதிநெறி விளக்கம்

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணுர் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலின் பூவாமை நன்று. 1

எத்துணைய வாயினுங் கல்வி இடமறிந்(து)
உய்த்துணர் வில்லெனின் இல்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இன்றெனின் என்னாகும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து. 2

கற்ருேர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்ருேர் அணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்(கு) அழகுசெய் வார். 3

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்ருரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று. 4

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வம் எனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின். 5

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. 6

உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி. 7

## 3. இன்னா நாற்பது

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா;
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா;
கடுமொழி யாளர் தொடர்பின்னா; இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு. 1

ஆற்றல் இலாதான் பிடித்த படையின்னா;
நாற்றம் இலாத மலரின் அழகின்னா;
தேற்றம் இலாதான் துணிவின்னா; ஆங்கின்னா
மாற்றம் அறியான் உரை. 2

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா;
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா;
கண்ணில் ஒருவன் வனப்பின்னா; ஆங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு. 3

ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகலின்னா;
மான்றிருண்ட போழ்தில் வழங்கல் பெரிதின்னா;
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா; ஆங்கின்னா
ஈன்றாளை ஓம்பா விடல். 4

பெரியாரோ(டு) யாத்த தொடர்விடுதல் இன்னா;
அரியவை செய்தும் எனவுரைத்தல் இன்னா;
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா; இன்னா
பெரியார்க்குத் தீய செயல். 5

தன்னைத்தான் போற்று தொழுகுதல் நன்கின்னு;
முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னு;
நன்மை யிலாளர் தொடர்பின்னு; ஆங்கின்னு
தொன்மை யுடையார் கெடல். 6

## 4. திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 1

### வான்சிறப்பு

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 2

### அன்புடைமை

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 3

### செய்ந்நன்றியறிதல்

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு. 4

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 5

### ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 6

## ஒப்புரவறிதல்

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 7

பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றுற் செல்வம்
நயனுடை யான்கட் படின். 8

## ஈகை

வறியார்க்(கு) ஒன்(று) ஈவதே ஈகை மற்(று) எல்லாம்
குறிஎதிர்ப்பை நீர(து) உடைத்து. 9

## புகழ்

ஒன்று வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றுது நிற்பதொன் றில். 10

## வாய்மை

வாய்மை எனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். 11

## கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 12

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. 13

## கேள்வி

கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்(கு)
ஒற்கத்தின் ஊற்றாம் துணை. 14

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 15

## 5. திருவேங்கட சதகம்

### குணமே சிறந்தது

தடவரை யதன்மீது விளையினுஞ் சோளமது
சன்னசம் பாவாகுமோ
சந்ததமும் வாடா திருந்தாலும் எட்டிமலர்
சாதிமல்லி கையாகுமோ
கடலெலா நிறைவெள்ள மாயினுஞ் சுவைபெற்ற
காவிரியி னூற்றாகுமோ
காகங்கள் கோடிதோனி செய்தாலு மொருசிறு
கருங்குயிற் றொனியாகுமோ
படர்கின்ற பேய்ச்சுரை சொரிந்தபழ முந்திரிப்
பழமதற் கிணையாகுமோ
பகர்கின்ற சாதியுங் கனவயது மேன்மையும்
பலகூட்ட முந்தேகமார்
வடிவதிக மன்றுகுண மேயதிக மென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே.

# 3. இயற்கைக் காட்சிகள்

## 1. நிலாத்தோற்றம்

கானெலாம் மலர்ந்த முல்லை
ககனமீ(து) எழுந்த தென்ன
வானெலாம் வயங்க தாரை
நிறை நிறை மலர்ந்து தோன்ற

வேனிலான் விழவின் வைத்த
　　வெள்ளிவெண் கும்பம் என்னத்
தூநிலா மதியம் வந்து
　　குணதிசைத் தோன்றிற்[று] அம்மா.

[வில்லிபுத்தூராழ்வார்]

## 2. சூரியன் மறைவு

வையம் பகல்இழப்ப வானம் ஒளிஇழப்பப்
பொய்கையும் நீள்கழியும் புள்இழப்பப்—பையவே
செவ்வாய அன்றில் துணைஇழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு.

[புகழேந்திப்புலவர்]

## 3. பொதியமலைச்சிறப்பு

திங்கள்முடி சூடும்மலை தென்றல்விளை யாடும்மலை
தங்குபுயல் சூழும்மலை தமிழ்முனிவன் வாழும்மலை
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவதென்னப்
பொங்கருவி தூங்கும்மலை பொதியமலை என்மலையே.

[குமரகுருபரர்]

## 4. பாண்டியநாட்டுச் சிறப்பு

செந்தமிழும் சந்தனமும்
　　திசைஎலாம் பரிமளிக்க
மந்தவளி உமிழ்மலய
　　வரைகுடுமி நின்றிழிந்து
கொந்தவிழும் மலர்வீசிக்
　　குளிர்கெழுமுத்[து] எடுத்திறைத்து
முந்தஎழு புனற்பொருநை
　　முழுவளத்த[து] அந்நாடு.

[மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை]

## 5. கடல்

எல்லை அறியாப் பெருங்கடலே — நீதான்
இரவும் உறங்கா யோ கடலே
அல்லும் பகலும் அலைகடலே—உனக்கு
அலுப்பும் இலையோ கருங்கடலே
பொங்கு திரைக ளோகடலே—அவை
புரவி நிரைதா மோகடலே
எங்கும் உன[து] ஒலி யோகடலே—அன்றி
இடியின் முழக்க மோகடலே
மலையை வயிற்றடக் கும்கடலே—எண்ணில்
மகர மீனுல வும்கடலே
விலைகொள் முத்தளிக் கும்கடலே—சிப்பி
விளையா டற்குத வும்கடலே
மழைக்கு மூலமும் நீகடலே — அதை
வாங்கி வைப்பதும் நீகடலே
வழுத்து மகிமைஎ லாம்கடலே—எவர்
மதித்து முடிக்கவல் லார்கடலே!

[கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை]

## 6. மழை

மழையே மழையே வாவா—நல்
வானப் புனலே வாவா; இவ்வையத்தமுதே வா வா!
தழையா வாழ்வும் தழைக்கவும்—மெய்
தாங்கா வெப்பம் நீங்கவும்
உழுவாரெல்லாம் மலைபோல் எருதை
ஓட்டிப் பொன்னேர் பூட்டவும் மழையே ... ...

தகரப்பந்தல் தணதண வென்னத்
தாழும்குடிசை சளசள என்ன
நகரப்பெண்கள் செப்புக் குடங்கள்
நன்றெங் குந்தங்கும் பயனென்ன மழையே ... ...

ஏரி குளங்கள் வழியும்படி, நா[டு]
எங்கும் இன்பம் பொழியும்படி, பொடி
வாரித் தூவும் பூவும் காயும்
மரமும் தழையும் நனைந்திடும்படி மழையே ... ...

இல்லாருக்கும், செல்வர்கள்
என்பாருக்கும், தீயவர்
நல்லாருக்கும் முகிலே சமமாய்
நல்கும் செல்வம் நீயன்றோ? மழையே ... ...

(பாரதிதாசன்)

# 4. கதைப் பகுதி

## மைனாவும் முயலும் மோசம் போன கதை

### காகம் சொல்வது

பாவிகள் மோனர் போலும்
பலவிர தியர்கள் போலும்
ஓவறு சகாயர் போலும்
உறமுறைச் சுற்றம் போலும்
மேவுவர் அவரைச் சேரின்
மேன்மைய ரேனும் உய்யார்
பூவையும் முயலும் முன்னோர்
பூனையைச் சேர்ந்த வாறே. 1

என்னஅக் கதையே தென்றே
இனப்பற வைகள்வி னவ
முன்னமோர் மரத்தின் மேலே
முயங்கிநான் இருக்கும் போது
தன்னிக ரின்றி வாழுந்
தனிமுயல் ஒன்று வந்தே
உன்னுமோர் பொந்திற் சேர்ந்தங்(கு)
உட்புகுந் திருந்த தன்றே. 2

பூவையொன் றங்கு வந்திப்
பொந்துநான் இருக்கும் வீடு
நீவரு வானேன் என்ன
நிழலொடு தருக்கள் சாலை
வாவிநற் கூபம் செல்லும்
வழியினில் தண்ணீர்ப் பந்தல்
சாவடி இவைக ளெல்லாம்
சகலர்க்கும் பொதுவே என்ன. 3

அங்கவை இரண்டும் சண்டை
ஆகிப்பின் மத்தி யஸ்தர்
தங்களைக் கேட்போம் என்று
தனிமுயல் அழைத்துப் போக.
இங்குநாம் வழக்கா வந்தோம்
இருதலை வழக்குந் தீர்க்குந்
துங்கர்ஆர் என்று பூவை
சொல்லவே முயலும் சொல்லும். 4

கருதிய யமுனை யாற்றங்
கரையிலே தவத்தைப் பண்ணும்
பொருவில்கூர்ம் பல்லன் என்னும்
பூனையார் சொல்வார் என்ன
வெருவியே பூனை பக்கல்
மேவிநாம் செல்வ தெவ்வா(று)
உரைஎனத் தூர நின்றே
உரைப்பம்என் றழைத்துப் போக. 5

இருவரும் போனர் அந்த
இருடியார் தவத்தைக் கண்டார்
பெரியவர் இவர்தாம் நம்மைப்
பிடிப்பதும் செய்யார் என்று

கருதினர் பணிந்தெ ழுந்தார்
கைகளுங் கட்டி நின்று
பரவினர் யோகம் நீங்கிப்
பார்த்தனர் பூனை யாரும். 6

ஆரெவர் நீங்கள் நம்மை
அறிந்துநீர் இங்கு வந்த
காரியம் சொல்லும் என்று
கபடனர் உரைக்கத் தங்கள்
பேரொடு வழக்குஞ் சொல்லப்
பெருகிய மூப்பினாலே
நீருரைப் பதுகே ளாது
நெருங்கிவந் துரைக்க என்ன. 7

சற்றிடங் கிட்டி வந்து
சாற்றஇம் மாற்றம் காதில்
உற்றது போலும் பாதி
உறாதது போலுங் கேட்போம்.
மற்றினிப் பட்ச பாத
வழக்குநாம் உரைப்ப தில்லை.
குற்றமிங் கொருவர் மீதில்
கூறிடின் கோபம் ஆமே. 8

தருமமே விரும்பு வாரைத்
தருமமே விரும்பிக் காக்கும்;
தருமமே இகழு வாரைத்
தருமமே இகழ்ந்து நிற்கும்;
தருமமே மெய்யாய் நின்று
சகலமும் செய்த லாலே
தருமமே சொல்வ தல்லாற்
சற்றும்நாம் பொய்சொல் லோமே, 9

எண்ணிய விரத மெல்லாம்
இயற்றினம்; இவைக்கு மேலாம்
புண்ணிய விரத மென்னும்
பொய்சொலா விரதம் ஒன்றும்
நண்ணிய வுயிரைக் கொல்லா
நலந்தரு விரதம் ஒன்றும்
மண்ணினில் அனுட்டிப் போம்நாம்
வழக்கிலோ ரஞ்சொ லோமே. 10

கிட்டநீர் வந்து சொன்னால்
கேட்குநம் காது நம்மை
விட்டு நீர் தூர நின்று
விளம்பினால் கேளா தென்று
துட்டனார் மாரீ சத்தால்
துலங்குகூர்ம் பல்லன் என்போர்
இட்டமார்ச் சாலன் சொல்ல
இவைதம துளத்தில் எண்ணி. 11

மெய்கள்போற் சொன்ன எல்லாம்
விசுவசித் திரண்டும் செல்லக்
கைகளாற் பிடித்துக் கண்டம்
கடித்திரத் தங்கு டித்தே
செய்கப டான பூனை
செருக்கியங் கிருக்கச் சேர்ந்த
மொய் சிறைப் பூவை யோடே
முயலுமங் கிறந்த(து) அன்றே. 12

வீரமார்த்தாண்ட தேவர்.

## தவளையும் பாம்பும்

தன்னை மற்றைத் தவளைகள் வாட்டலால்
இன்ன லுற்றோர் தவளை யெழுந்தொரு
பன்ன கத்தைச் சிநேகித்துப் 'பையுள்செய்
என்னி னத்தை விழுங்கென் றிசைத்ததே. 1

நாகங் கேட்டுப்பன் னூளும் மகிழ்ந்திரை
யாக வுண்ட(து) அதன்பின் எனக்கிரை
ஈக வென்னத் தவளை 'இலை' யென்ற
தாக நாகம் அழன்றுரை செய்யுமால். 2

வந்துநீ சொன்ன வார்த்தையி னெய்தினேன்
எந்த நாளும் இரையளி யாயெனில்
புந்தி யில்லோய் நினையும் புசிப்பலென்(று)
உந்தி யன்னதின் மக்களை உண்டதே. 3

தவளை யன்னது கண்டுதன் தாரமோ(டு)
இவள வென்றற் கருந்துயர் எய்தியே
துவளு நெஞ்சொடு துண்ணென நீங்கியோர்
உவள கத்தை அடைந்தின்ப முற்றதே. 4

(வீரமார்த்தாண்ட தேவர்.)

## பாஞ்சாலி சபதம்

### திரிதராட்டிரன் கூறுதல்

திரித ராட்டிரன் செவியில்—இந்தத்
தீமொழி புகுதலுந் திகைத்து விட்டான்;
'பெரிதாத் துயர்கொ ணர்ந்தாய்;—கொடும்
பேயெனப் பிள்ளைகள் பெற்று விட்டேன்;
அரி தாக்குதல் போல—அமர்
ஆங்கவ ரோடு பொரலவல மென்றேன்;
நரி தாக்குதல் போலாம்—இந்த
நாணமில் செயலினை நாடுவனோ? 1

தந்தை சொன்னவற்றைக் கேட்ட துரியோதனன் கோபித்துக் கூறுதல்.

தந்தை இஃது மொழிந்திடல் கேட்ட
தாரி சைந்த நெடுவரைத் தோளான்;

'எந்தை, நின்னெடு வாதிடல் வேண்டேன்
என்று பன்முறை கூறியுங் கேளாய்;
வந்த காரியங் கேட்டிமற் ருங்குன்
வார்த்தை யின்றிஅப் பாண்டவர் வாரார்;
இந்த வார்த்தை உரைத்து விடாயேல்,
இங்கு நின்முனென் னுவி இறுப்பேன். 2

'மதி தமக்கென் றிலாதவர் கோடி
வண்மைச் சாத்திரக் கேள்விகள் கேட்டும்
பதியுஞ் சாத்திரத் துள்ளுறை காணர்
பானைத் தேனி லகப்பையைப் போல்வார்,
துதிகள் சொல்லும் விதுரன் மொழியைச்
சுருதியா மெனக் கொண்டனை நீதான்;
அதிக மோக மவனுளங் கொண்டான்
ஐவர் மீதிலிங் கெம்மை வெறுப்பான். 3

போர்செய் வோமெனில் நீதடுக் கின்ருய்;
புவியி னேரும் பழிபல சொலவார்;
தார்செய் தோளிளம் பாண்டவர் தம்மைச்
சமரில் வெல்வது மாங்கெளி தன்ரும்:
யார்செய் புண்ணியத் தோநமக் குற்ருன்
எங்க ளாருயிர் போன்றஇம் மாமன்;
நேர்செய் சூதினில் வென்று தருவான்;
நீதித் தர்மனுஞ் சூதில் அன்(பு) உள்ளோன். 4

### திரிதராட்டிரன் சம்மதித்தல்

விதி! விதி! விதி! மகனே—இனி
வேறெது சொல்லுவ னடா—மகனே!
கதியுறுங் கால னன்ருே—இந்தக்
கயமக னெனநினைச் சார்ந்து விட்டான்?
கொதியுறு முளம் வேண்டா;—நின்றன்
கொள்கை யின்படி அவர்தமை அழைப்பேன்

வதியுறு மனை செல்வாய்;—என்று
வழியுங் கண்ணீ ரொடுவிடை கொடுத்தான். 5

## விதுரனைத் தூதுவிடல்

தம்பி விதுரனை மன்ன னழைத்தான்;
'தக்க பரிசுகள் கொண்டினி தேகி,
எம்பியின் மக்க ளிருந்தர சாளும்
இந்திர மாநகர் சார்ந்தவர் தம்பால்
"கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்
கூடிஇங் கெய்தி விருந்து களிக்க
நம்பி அழைத்தனன், கௌரவர் கோமான்
நல்லதோர் நுந்தை" என உரை செய்வாய். 6

## விதுரன் தூது செல்லல்

அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்.
அடவிமலை ஆறெல்லாம் கடந்து போகித்
திண்ணமுறு தடந்தோளும் உளமுங் கொண்டு
திருமலியப் பாண்டவர்தா மரசு செய்யும்
வண்ணமுயர் மணிநகரின் மருங்கு செல்வான்
வழியிடைய நாட்டினுறு வளங்கள் நோக்கி
எண்ணமுற லாகித்தன் இதயத் துள்ளே
இனையபல மொழிகூறி இரங்கு வானால். 7

## விதுரனை வரவேற்றல்

விதுரன் வருஞ்செய்தி தாஞ்செவி யுற்றே
வீறுடை ஐவ ருளமகிழ் பூத்துச்
சதுரங்க சேனை யுடன்பல பரிசும்
தாளமு மேளமுந் தாங்கொண்டு சென்றே
எதிர்கொண் டழைத்து, மணிமுடி தாழ்த்தி
ஏந்தல் விதுரன் பதமலர் போற்றி,

மதுர மொழியிற் குசலங்கள் பேசி,
மன்ன னெடுந்திரு மாளிகை சேர்ந்தார். 8

### விதுரன் அழைத்தல்

ஐவர் தமையுந் தனிக்கொண்டு போக,
ஆங்கொரு செம்பொன் அரங்கி லிருந்தே
'மைவரைத் தோளன், பெரும்புக ழாளன்
மாமகள் பூமகட் கோர்மண வாளன்
மெய்வரு கேள்வி மிகுந்த புலவன்
வேந்தர் பிரான், திரிதராட்டிரக் கோமான்
தெய்வ நலங்கள் சிறந்திட நும்மைச்
சீரொடு வித்தலும் வாழ்கென வாழ்த்தி, 9

வந்து விருந்து களித்திட நும்மை
வாழ்த்தி அழைத்தனன், என்னரு மக்காள்
சந்து கண்டே அச்சகுனி சொற்கேட்டுத்
தன்மை இழந்த சுயோதன மூடன்
விந்தை பொருந்திய மண்டபத் தும்மை
வெய்ய புன்சூது களித்திடச் செய்யும்
மந்திர மொன்று மனத்திடைக் கொண்டான்
வன்ம மிதுவும் நுமக்கறி வித்தேன். 10

(பாரதியார்)

# 5. பல்சுவைப் பகுதி

## 1. தனிப்பாடல்கள்

வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர் கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து. 1

கருணையால் இந்தக் கடலுலகம் காக்கும்
வருணனே மாமலையன் கோவல்—திருமணத்தில்
முன்மாரி பெய்யும் முதுவாரியை மாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி. 2

(ஔவையார்)

கார்என்று பேர்படைத்தாய்
ககனத்து உறும்போது
நீர்என்று பேர் படைத்தாய்
நீள்நிலத்தில் வந்ததற்பின்
வார்ஒன்று பூங்குழலாள்
ஆச்சியர்கை வந்ததற்பின்
மோர்என்று பேர்படைத்தாய்
முப்பேரும் பெற்றாயே. 3

(காளமேகப் புலவர்)

முக்கண்ணன் என்(று) அரனை முன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற்(கு) உள்ள தரைக்கண்ணே—மிக்க
உமையாள்கண் ஒன்றரைமற்(று) ஊன்வேடன் கண்
[ஒன்(று)
அமையுமித னல்என் றறி. 4

(சொக்கநாதப் புலவர்)

## சிவனுக்கும் தேங்காய்க்கும் சிலேடை

கல்லால் அடிபுறலால் கண்மூன்(று) இருப்பதனால்
எல்லோரும் பூசைக்(கு) எடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையால் கங்கா குலமுத்து சாமிமன்னா
கள்இதழி யான்நிகர்தேங் காய். 5

(அழகிய சொக்கநாதப் பிள்ளை)

### பணச் சிறப்பு

குணம்இருந் தாலும் குலம்இருந் தாலும் கொழுந்தமிழின்
மணம்இருந் தாலும் மதியிருந் தாலும் வழுத்திடுவங்
கணம்இருந் தாலும் ஒருகாசும் பெருதுசிங் காரஅரைப்
பணம்இருந் தாலவர்க்(கு) எல்லாரும் அஞ்சலி
[பண்ணுவரே 6

### ஏற்றப் பாட்டு

ஏற்றம் இறைத்திடுவோம்—நாம்
ஏற்றம் பெற்றிடு வோம்
கூற்றமே வந்திடினும்—நாம்
கூடியே வாழ்ந்திடு வோம்
நெல்லுக் கிறைத்திடுவோம்—அது
புல்லுக்கும் பாய்ந்திடட்டும்
உலகினில் பஞ்சமின்றி—மக்கள்
உவப்புடன் வாழ்ந்திடவே
பல்வகைத் தானியங்கள்—நாம்
பயிரிட்டு அளித்திடு வோம்
சுதந்திர நாட்டினிலே—நாம்
சுதந்திரத் தொண்டு செய்வோம்
உழைப்பவர் வாழ்ந்திடவும்—இந்த
உலகம் செழித்திடவும்
நல்லவர் வாழ்ந்திடவும்—இந்த
நாடு செழித்திடவும்
ஏற்றம் இறைத்திடுவோம்—நாம்
ஏற்றம் பெற்றிடுவோம் 7

## 2. இளந்தமிழா!

இளந்தமிழா எழுந்திரடா!
இன்பமெல்லாம் கொணர்ந்திடுவாய்
வளம் பெருக்கித் தமிழ் நாட்டை
வானுடாய்ச் செய்திடுவாய் 1

காதல் அறம் வீரமெலாம்
களித்திருந்த மண்ணிதிலே
பேதமையும் ஏழ்மையும்
பிழைத்திருக்க விடலாமோ ? 2

குறிஞ்சி மணம் பாரிகொடை—
கொல்புலியின் கொடிஇமயம்
பொறித்திடுமோர் தனிவீரம்
போகவிட்டு வாழ்வாயோ ? 3

வள்ளுவனும் கம்பனுமே
வளர்த்தசுவைத் தீந்தமிழின்
தெள்ளமுதம் கொண்டவன் நீ
சீர்குலையக் காரணமேன் ? 4

கச்சைகட்டி மார்தட்டிக்
கண்களிலே ஒளிவீசத்
துச்சமெனப் பயந்தள்ளித்
துணிவுடனே புறப்படுவாய். 5

வாழ்க்கையிலே சமத்துவமும்
மனத்தினிலே உயர்நோக்கம்
மாட்சிமிகும் அறநெறியும்
ஆட்சிசெய்யப் போரிடுவாய். 6

அனைவருக்கும் பொது உரிமை
அனைவருக்கும் பொதுநீதி
அனைவருக்கும் பொது உடமை
ஆக்கிடவே தோள்புடைப்பாய். 7

மக்களெல்லாம் ஓர்குலமாம்
மாநிலமே ஒருவீடாம்
தக்கநெறி இதுகண்ட
தமிழன்நீ மறவாதே. 8

இளந் தமிழா எழுந்திரடா!
இன்பமெலாம் கொணர்ந்திடுவாய்
வளம்பெருக்கி வையகத்தை
வானுடாய்ச் செய்திடுவாய். 9

(பெரியசாமித் தூரன்)

## 3. சங்கொலி

மரணத்தில் அஞ்சாத
மனவீரம் வேண்டும்
மனதுக்குள் மருளாத
மதிகாந்தம் வேண்டும்
இரணத்தை எண்ணுமை
எவருக்கும் வேண்டும்
இழிவான மொழி பேசி
களியாமை வேண்டும்
திரணத்தின் அளவாக
போகங்கள் எண்ணித்
தேசத்தின் பொதுவாழ்வின்
சேவைகள் பண்ணும்
அரண்ஒத்த நிலையான
அறமின்னும் வளர
அறிவான புதுவாழ்வு
வரவேணும் குளிர.

(நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை)

## 4. காலத்தைப் பொன்செய்
### தொழில்

காலத்தைப் பொன்னுக்க வேண்டும்
கைத்தொழில் செய்திட வேண்டும்
ஞாலமெல் லாந்தொழிற் சாலை
நமக்குந் தொழில்அதி லுண்டு

பூட்டிய பொன்னை விரும்பேன்
போட்டிப் பொருமையை விரும்பேன்
நாட்டின் வறுமை மடமை—தீர
நல்ல தொழிலை வளர்ப்பேன்
காகிதப் பூக்களும் செய்வேன்
கப்பலும் வண்டியும் செய்வேன்
மேகவி மானமும் செய்வேன்—நான்
விளையாட்டுச் சாமானும் செய்வேன்
'ஓ'மென ராட்டை சுழன்ருல்
உழவும் நெசவும் நடந்தால்
பூமியிலே பஞ்சம் இல்லை
பொன்னைத் தொழில்செய்ய வாரீர்.

(சுத்தானந்த பாரதியார்)

## 5. காந்தி வாழ்த்து

சாந்தமய மென இலங்குந் தனிப்பொருளை உளத்தென்றும்
ஏந்தியுயிர் தமக்கெல்லாம் இனிமைசெய உலகிடையே
போந்தகுண மலையாகும் புனிதநிறை கடலாகும்
காந்தியடி இணைமலரைக் கருத்திருத்தி வழுத்துவமே. 1

எவ்வுயிர்க் குயிராம் ஈசன் இணையடி வாழ்க ஐயன்
செவ்விய வடிவ மாகுந் திருவருள் இயற்கை வாழ்க
அவ்விரு தொடர்பு கண்ட அடிகளார் காந்தி வாழ்க
இவ்வுல கெங்கும் அன்னூர் எழில்நெறி வாழ்க வாழ்க. 2

(திரு. வி. க.)

# அரும் பதவுரை

## 1. வாழ்த்து

1. திருவாசகம்: ஆசிரியர்-மாணிக்கவாசகர். திருவாதவூரில் பிறந்தார். பாண்டிய மன்னனிடம் அமைச்சராக இருந்து ஆண்டவனால் ஆட்கொள்ளப்பட்டார். திருவாசகம் பக்திச் சுவையை வளர்க்கும் இனிய நூல்.

வானோர் – தேவர். குருவனே - குருவே. வாங்கிட - ஏற்றுக்கொள்ள.

2. தேவாரம்: ஆசிரியர் - சுந்தரர். திருநாவலூரில் பிறந்தவர். சைவசமய குரவர்களுள் ஒருவர்.

அரைக்கு அசைத்து - இடுப்பில் அணிந்துகொண்டு; மிளிர் - விளங்குகின்ற; மன்னே - தலைவனே.

3. பாரதம்: ஆசிரியர் - வில்லிபுத்தூர் ஆழ்வார்.

மறை - வேதம்; ஆழி - திருப்பாற் கடல்; முகில் வண்ணன் - மேகம்போன்ற நிறமுடையவன். முளரி - தாமரை.

4. தாயுமானவர் பாடல்: ஆசிரியர் - தாயுமானவர். திருமறைக்காடு என்ற ஊரில் பிறந்தவர். சமரச மனப் பான்மையை வளர்க்கும் பாடல்களைப் பாடியுள்ளார்.

ஆரு - தெவிட்டாத; மோனம் - மௌனம்; பராபரமே- மேலான பொருளே; கனிந்து – உருகி.

5. மஸ்தான் சாகிபு பாடல்.

ஆதியாய் – முதற்பொருளாய்; அனாதியாகி - அழிவில்லாதவனாய்; நித்திய + ஆனந்தம் - நித்தியானந்தம்.

மாதிரம் – திசை.

## 2. அறவுரை

### 1. நன்னெறி

ஆசிரியர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

1. நீக்கம் அறும் - நீங்குதல் (பிரிவு) இல்லாத. நொய்து- அற்பம். குழல் - கூந்தல். புல்லினும் - கூடினாலும். திண்மை - வலிமை.

2. அடல் ஏறு - வலிமையுடைய ஆண் சிங்கம். ஆழ்த்திவிடல் – அமிழ்த்திவிடாதீர்கள். முனிக்கு அரசு - அகத்தியர். முழங்கும் - ஒலிக்கும். பனிக்கடல் - குளிர்ந்தகடல். முகந்து - மொண்டு.

3. உள்ளம் - மனம். காத்துக் கொள்ளும் – தடுத்துக் கொள்ளும். தடம்கரை – பெரியகரை. விளம்பு - சொல்.

4. அன்பு இல்லாதவனுக்கு என்று மாற்றுக. ஏவல் - வேலையாளர். மொழியிலார் – ஊமையர். விழிஇலார் – குருடர்.

5. செல்வர் - சென்று. இடர் – துன்பம். அல்குகழி - சிறிய உப்பங்கழி. பெரியோர் தம்மைவிடத் தாழ்ந்தவருக்கும் அவர் இருக்குமிடம் சேர்ந்து உதவிசெய்வர் என்பது கருத்து.

6. முனிவினும் - கோபத்திலும். உள்ளக்கனிவு - மனமகிழ்ச்சி. கதலி - வாழை. அறை - சொல்.

7. தாக்கும் – வருத்துகின்ற. விரைகுவார் – விரைந்து செல்வார். வியன்கோல் - பெரிய கோலின். கடிது - விரைவாக. தாங்கும் - ஏற்றுக்கொள்ளும்.

8. காமுறுவர் – விரும்புவர். புளிங்காடி - புளிப்பான காடிநீர்.

9. கேண்மை - நட்பு. அல்லார் - தீயவர். தீங்கனி - இனிய பழம்.

10. பொன் அணியும் - பொன் ஆபரணம் அணிந்துள்ள. புனையா - அவ் ஆபரணம் அணியாத. பூணும் - அணிகின்ற. பொன்னே - இலக்குமியைப் போன்றவளே. (விளி).

## 2. நீதிநெறி விளக்கம்.

ஆசிரியர் குமரகுருபரர். ஸ்ரீ வைகுண்டம் என்னும் ஊரில் பிறந்தவர். இளமையில் ஊமையாக இருந்து முருகப் பெருமான் அருளால் பேசும் ஆற்றல் பெற்றுக் கவிபாடும் புலமைபெற்றார்.

1. அவை - சபை. மெய்விதிர்ப்பார் - உடல் நடுங்குவார். ஆகுலச் சொல் - ஆடம்பர வார்த்தை. நவை - குற்றம். ஈந்து - கொடுத்து. நல்கூர்ந்தார் - தரித்திரர்.

2. எத்துணை - எவ்வளவு. உய்த்து உணர்வு - ஆராய்ந்து அறியும் அறிவு. நாற்றம் வாசனை.

3, நலன் - பெருமை. கலன் - ஆபரணம். பூண் - ஆபரணம்.

4. உடைமை - செல்வம். எற்று - எவ்வளவு (குறைவு).

5. இரந்து – யாசித்து, வேண்டி. பெறின் - பெற்றால்.

6. நட்டல் - சிநேகம் செய்தல். ஒற்று - ஒற்றர். ஐயுறுதல் - சந்தேகப்படுதல். கோறல் - அழித்தல். குறி - அடையாளம்.

7. உலையா - கெடாத. களைகண் ஆ - ஆதாரமாக. ஊழின் - விதிப்பயனின். பால் - ஊழ், மறலி - எமன். காண்முளை - மார்க்கண்டேயன். கரி - சான்று (சாட்சி).

## 3. இன்னுநாற்பது

ஆசிரியர் கடைச் சங்ககாலப் புலவர்களுள் ஒருவரான கபிலர் என்பவர். பாரி என்னும் வள்ளலின் உயிர்த்தோழராக விளங்கியவர்.

1. புணை - தெப்பம். தொடர்பு – நட்பு.

2. ஆற்றல் - வலிமை. தேற்றம் - தெளிவு. மாற்றம் - கருத்து.

3. வைப்பு - சேமித்துவைத்தல். நனி - மிகவும். வனப்பு - அழகு. எண்இல் - கணிதப்பயிற்சி இல்லாத. நண்ணு - மனம் கலவாத.

4. அவிந்த - அடங்கிய. பேதை - அறிவில்லாதவன். மான்று - மயங்கிய. வழங்கல் - கொடுத்தல். நோன்று - துன்பத்தைப் பொறுத்து. நோன்பு - தவம். ஈன்ருள் - பெற்றெடுத்த தாய்.

5. யாத்த - சேர்ந்த. அரியவை - செய்யமுடியாத செயல்களை. பரியார்க்கு - அன்பில்லாதவர்க்கு. தாம் உற்ற - தாம் அடைந்த துன்பங்களை.

6. போற்ருது - கவனித்துக் கொள்ளாமல். முன்னை - (ஒருவர்) முன்னல். புறமொழி - கோள். தொன்மை - பழமை.

## 4. திருக்குறள்

ஆசிரியர் திருவள்ளுவர்.

1. வால் அறிவன் - தூய அறிவனையுடைய கடவுள். என் கொல் - என்ன?

2. சார்வு ஆய் - ஆதாரமாகி. எடுப்பதூ உம் - காப்பாற்றுவதும்.

3. என்பு - எலும்பு. வெயில் - சூரியன். அறம் - அறக்கடவுள்.

4. எழுபிறப்பும் - ஏழுவகைப் பிறப்பிலும். உள்ளுவர் - நினைப்பர். விழுமம் - துன்பம். துடைத்தவர் - நீக்கியவர்.

5. உய்வு—தப்பும்வழி (பிராயச்சித்தம்) மகன்+கு-மகற்கு

6. விழுப்பம் - பெருமை. ஓம்பப்படும் - போற்றத்தகும்.

7. ஊருணி - குளம். உலகு அவாம் - உலகமக்களால் விரும்பப்படும். திரு - செல்வம்.

8. நயன் உடையான் - நன்மைசெய்யும் குணம் உடையவன். பயன்மரம் - பழுத்துப்பயன் தரும்மரம்.

9. ஈகை - கொடை. குறி எதிர்ப்பை - பயனை எதிர்பார்க்கும். நீரது - தன்மையது.

10. ஒன்றா முதன்மையாக. பொன்றாது - அழியாமல்.

11. வாய்மை - உண்மை. சொலல் - சொல்லுதல்.

12. கசடு அற - குற்றம் இல்லாமல். நிற்க - நிற்றல் வேண்டும்.

13. எண் - கணக்கு. ஏனை - மற்ற.

14. ஒற்கத்தின் - தளர்ச்சியுண்டான காலத்து. ஊற்று ஆம் - ஊன்று கோல் ஆகும்.

15. எனைத்தானும் - எவ்வளவாயினும் (கொஞ்சமாயினும்) ஆன்ற - சிறந்த.

## 5. திருவேங்கட சதகம்

ஆசிரியர் நாராயண பாரதியார் என்பவர்.

தடவரை - பெரிய மலை. சந்ததமும் - எப்பொழுதும். தொனி - ஒலி. இணை ஆகுமோ - ஒப்பு ஆகுமா? பகர்கின்ற - சொல்கின்ற. தேகம் ஆர்-உடலில் பொருந்திய.

# 3. இயற்கைக் காட்சிகள்

## 1. நிலாத்தோற்றம்

கான் - காடு. ககனம் - ஆகாயம். வான் - ஆகாயம். வயங்க - விளங்க. தாரை - நட்சத்திரம். நிறைநிறை - வரிசை வரிசையாக. கும்பம் - கலசம். குணதிசை - கிழக்குத்திசை.

## 3. பொதியமலைச் சிறப்பு

திங்கள் - சந்திரன். புயல் - மேகம். தமிழ்முனிவன் - அகத்தியர். தூங்கும் - வீழும்.

## 4. பாண்டிய நாட்டுச் சிறப்பு

பரிமளிக்க - மணம்கமழ. மந்தவளி - தென்றற்காற்று. வரைக்குடுமி - மலை உச்சி. கொந்து - கொத்து. குளிர்கெழு - குளிர்ச்சி பொருந்தி. புனல் - தண்ணீர்.

### 5. கடல்

எல்லே - அளவு (கரை). அல்லும் - இரவும். திரை - அலே. புரவிநிரை - குதிரைக்கூட்டம். மகரமீன் - சுருமீன். சிப்பி - கிளிஞ்சல். வழுத்தும் - போற்றப்படும். மதித்து - அளவிட்டு.

### 6. மழை

வையம் - பூமி. முகில் - மேகம். நல்கும் - கொடுக்கின்ற.

## 4. கதைப்பகுதி

### 1. மைனுவும் முயலும் மோசம் போன கதை

இது பஞ்சதந்திரம் என்னும் நூலில் உள்ளது. இதை இயற்றியவர் வீரமார்த்தாண்ட தேவர் என்பவர்.

1. மோனர் - மௌனம் உடையவர். விரதியர் - விரதம் உடையவர். ஒவுஅறு - இடைவிடாது. உய்யார் - பிழைக்க மாட்டார். பூவை - மைனு என்னும் பறவை.

2. இனப்பறவைகள் - பறவைக் கூட்டம். முயங்கி - தங்கி. உன்னும் - நினைக்கின்ற.

3. தருக்கள் - மரங்கள். வாவி - குளம். கூபம் கிணறு - சகலர்க்கும் - அனைவர்க்கும்.

4. துங்கர் - மேலவர். இருதலே – இரண்டு பக்கத்து.

5. வெருவி - பயந்து. பக்கல் - பக்கம். உரைப்பம் - சொல்லுவோம்.

6. இருடி - முனி (பூனையாகிய முனி). பரவினர் - வணங்கினர். யோகம் - தியானம்.

7. கபடன் – வஞ்சகமுடையவன். மூப்பு - கிழப்பருவம். கேளாது - கேட்காது.

8. சற்று - சிறிது. சாற்ற-சொல்ல. மாற்றம் - வார்த்தை. உற்றது - கேட்டது. உறுதது - கேளாதது.

9. இகழ்ந்து - கேவலப் படுத்தி.

10. இயற்றினம் - செய்தோம். சொலா - சொல்லாத. அனுட்டிப்போம் - மேற்கொண்டுள்ளோம். ஓரம்-பட்சபாதம்.

11. மாரீசத்தால் - வஞ்சனையால். துலங்கு - விளங்குகின்ற. மார்ச்சாலம் - வஞ்சகம்.

12. விசுவசித்து - நம்பி. கண்டம் - கழுத்து. செருக்கி - கர்வம் கொண்டு. மொய் - நொருங்கிய.

## 2. தவளையும் பாம்பும்

(இதுவும் பஞ்சதந்திரக் கதைகளில் ஒன்று.)

1. வாட்டலால் - துன்புறுத்தலினல். பன்னகம் - பாம்பு. பையுள் - துன்பம்.

2. ஈக - கொடுக்கவும். அழன்று - கோபித்து.

3. புந்தி - புத்தி. புசிப்பல் - தின்றுவிடுவேன். உந்தி - பாய்ந்து.

4. தாரம் - மனைவி. இவளவு - இவ்வளவு. துவளும் - வருந்தும். துண் என - விரைவாக. உவளகம் - அருகிலிருந்த ஓரிடம்.

## 3. பாஞ்சாலி சபதம்

1. ஆசிரியர் - சுப்பிரமணிய பாரதியார் அவர்கள். இவர் வரலாற்றை உரைநடைப் பாடத்தில் படித்திருக்கின்றீர்கள்.

1. திகைத்து - பிரமித்து. கொணர்ந்தாய் - கொண்டு வந்தாய். அரி - சிங்கம். அமர் பொரல் - சண்டை செய்தல். அவலம் - வீண்.

2. தார் - மாலை. இசைந்த - அணிந்துள்ள. வாதிடல் - வாதம் செய்தல். கேட்டி - கேட்பாயாக. ஆவி இறுப்பேன் - உயிரை விட்டுவிடுவேன்.

3. மதி - புத்தி. உள்ளுறை - உட்பொருள். சுருதி - வேதம். மோகம் - ஆசை. ஐவர் - பஞ்சபாண்டவர்.

4. எளிது அன்று - கஷ்டமாகும். சூதினில் - சூதாட்டத்தில்.

5. காலன் - யமன். கயமகன் - அறிவில்லாதவன். வதியுறும் - வாழ்கின்ற.

6. எம்பி - என்தம்பி. கொம்பினை ஒத்த மடப்பிடி - திரௌபதி. நுந்தை - உனது தந்தை.

7. அடவி - காடு. திரு - அழகு, செல்வம். மலிய-நிறைய. மருங்கு - பக்கம். இதயம் - மனம்.

8. சதுரங்க சேனை - நால்வகைப் படை (யானை, குதிரை, தேர், காலாட் படைகள்). தாழ்த்தி - வணங்கி. ஏந்தல் - பெருமையுடையோன். மதுரமொழி - இனியமொழி. குசலம்- நலம் விசாரித்தல்.

9. அரங்கில் - மண்டபத்தில். மைவரை - கரியமலை. பூமகள் - பூமாதேவி. நித்தலும் - தினமும்.

10. அரும் மக்காள் - அருமை மக்களே ! சந்து - இடம். தன்மை இழந்த - நற்குணம் இல்லாத. சுயோதனன் - துரியோதனன். மந்திரம் - சூழ்ச்சி. வன்மம் - கொடுமை.

# 5. பல்சுவைப் பகுதி

## தனிப் பாடல்கள்

1. வேழம் – யானை. மலைநாடு - சேரநாடு. மேதக்க - மேன்மை பெற்ற. பூழியர்கோன் - பாண்டிய மன்னன். சான்றோர் - அறிஞர்.

2. கடல் உலகம் - கடல் சூழ்ந்த இவ்வுலகம். கோவல் - திருக்கோவலூர். மாரி - மழை.

3. கார் - மேகம். ககனம் - ஆகாயம். நீள்நிலம் - பரந்த பூமி. ஆச்சி - இடைச்சி. முப்பேர் - கார், நீர், மோர் என்னும் மூன்று பெயர்கள்.

4. அரனை - சிவனை. ஊன்வேடன் - கண்ணப்பன்.

5. சிவனுக்கும் தேங்காய்க்கும் சிலேடையாகப் பாடப் பட்டுள்ளது. சிலேடை என்றால் இரு பொருள்படச் சொல்லுதல்.

| சிவன் | தேங்காய் |
|---|---|
| கல்லால் அடிபட்டார் (சாக்கிய நாயனார் வரலாறு) | கல்லில் அடித்து உடைக்க வேண்டும். |
| மூன்று கண்கள் உண்டு | மூன்று கண்கள் இருக்கின்றன. |
| எல்லோரும் சிவனை வழிபடுகின்றனர். | எல்லோரும் கடவுள் வழிபாட்டிற்கு இதை எடுத்துச் செல்கின்றனர். |
| பிச்சையின் பொருட்டு ஓடு எடுத்துச் சென்றார். | கெட்டியான ஓடுகள் இருக்கின்றன. |

கள் இதழியான் - சிவன்

6. கொடுந்தமிழ் - வளம்பெற்ற தமிழ். வழுத்திடு - பாராட்டும். வங்கணம் - நட்புத்தன்மை. சிங்காரம் - அழகு. அஞ்சலி - வணக்கம்.

7. ஏற்றப்பாட்டு :—ஏற்றம் - தண்ணீர் இறைக்கப் பயன்படுவது. ஏற்றம் - பெருமை. கூற்றம் - யமன். உவப்பு-மகிழ்ச்சி.

## இளந்தமிழா

ஆசிரியர் திரு. பெரியசாமித் தூரன் என்னும் அறிஞர்.

1. வான்நாடு - தேவருலகம்.
2. பேதமை – அறியாமை. ஏழைமை - வறுமை.
3. குறிஞ்சி மணம் - குறிஞ்சி நிலச்சிறப்பு.
4. தீந்தமிழ் - இனிய தமிழ்.
5. துச்சம் - அற்பம்.
6. சமத்துவம் - அனைவரும் ஒன்று என்று எண்ணுதல்.
7. மாநிலம் - பெரிய பூமி. தக்கநெறி - நல்லவழி.

## சங்கொலி

### புதுவாழ்வு

ஆசிரியர்: சென்னை அரசாங்க அவைப் புலவரான பெரியார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள். செந்தமிழ்க் கவிகள் சிறப்புடன் பாடி வருபவர். "தமிழன் இதயம்," "சங்கொலி" முதலான பல நூல்களை இயற்றி உள்ளார்.

களியாமை - மகிழாதிருத்தல்.

திரணம் - சிறு அளவு.

## காலத்தைப் பொன்செய்

ஆசிரியர்: சுத்தானந்த பாரதியார் அவர்கள். தமது வாழ்நாளையே தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்திவரும் அறிஞராவர். புதுச்சேரியில் இருக்கின்றார். பல நூல்கள் இயற்றியுள்ளார்.

ஞாலம் - உலகம். மடமை - அறியாமை.

## காந்தி வாழ்த்து

ஆசிரியர் : திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள். நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் மிகுந்து உலகம் முழுவதும் ஒன்று என்னும் ஒற்றுமை உணர்ச்சி நாட்டு மக்களிடையே பரவ வேண்டும் என்று பாடுபட்டு உழைத்து வரும் பெரியார். "இந்தியாவும் விடுதலையும்", "பெண்ணின் பெருமை", "முருகன் அல்லது அழகு" முதலான பல நூல்களை இயற்றியுள்ளார்.

இலங்கும் - விளங்குகின்ற. ஏந்தி - சுமந்து (தாங்கி). இணை - இரண்டு. வழுத்துவம் - போற்றுவோம்.

சென்னை-600 008
1,30,253

RTR/800